

இந்திரா சௌந்தர்ராஜன்

புதிய தொடர்

# தரிசனம்!



'**ச**ப்த மாத்ரிகா' என்று தெலுங்கில் ஒரு மெகா தொடர்! நமது ஊரில் சப்த கன்னிகள் என்போம். 'பிராமி, வைஷ் ணவி, மகேஸ்வரி, கௌமாரி, வராகி, இந்திராணி, சாமுண்டி' என்கிற இந்த ஏழு பேரும் அந்த ஆதிபராசக்தியான அம்பாளின் அம்சங்கள்!

நம் பிறப்பெல்லாம் தாய் தந்தை கூடிக் கலந்து பெற்ற காம நிமித்தமான கர்மப் பிறப்பு. ஆனால் இவர்கள் அப்படியல்ல. அம்பாளின் 'நெற்றி, தோள், மார்பு, தொடை' என்று அவள் திருமேனி பாகமாய் பிறந்தவர்கள். இப்படித்தான் தேவி பாக வதமும் சொல்கிறது. இவர்களே என் கதையின் பிரதான பாத்திரங்கள்.

இந்த ஏழு பேரின் சிலைகளையும் கண்ணகி போன்ற பெண் ஒருத்தி தமக்கு நேர்ந்த ஒரு இழிவுக் காக, கோபத்தோடும் சாபத்தோடும் ஆற்றில் தூக்கிப் போட்டுவிடுகிறாள். அதன்பின் இந்தக் கன்னிகள் இருந்த கன்னிகாபுரம் என்கிற ஊரும் பெரும் சாபத் துக்கு ஆளாகி வீட்டுக்கு வீடு விதவைகள் என்னும் நிலை.

மூன்று தலைமுறைகளுக்குப்பின் சாப விமோசனம் போல ஒரு தெய்வாம்சமுள்ள பெண் பிறந்து வந்து ஆற்றில் விழுந்த சிலை களைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான் கதை! இந்தத் தெய்வாம்சமுள்ள பெண் ஐ.டி. கம்பெனி யில் பணிபுரிகையில் இவளை ஒருவன் காதலிக்க முன்வர, இவள் விலகி ஓட, அவன் தொடை தட்டிக் கொண்டு புறப்படுவதில் இன்றைய விஞ்ஞான நோக் கம் கதைக்குள் நிறைய உண்டு. இந்தக் கதைக்கான விவாதத்தில் இந்த ஏழு கன்னிகள் பற்றி நான் விளக் கியபோது நவராத்திரி பற்றியும் குறிப்பிட்டேன்.

'அம்பாள், அசுரனை அழிக்க இவர்களைத்தான் முதலில் களத்தில் இறக்கிவிடுகிறாள். இறுதியில் தான் தானே பிரசன்னமாகி அவனை அழிப்பதோடு தம் காலடியில் அவன் கிடக்க அவனை வணங்கும் போது நாம் அவனையும் வணங்கும்படி, அல்லது நினைக்கும்படி செய்திருக்கிறாள்' என்றேன்.

'அம்பாள் எதற்கு இவ்வளவு காலம் எடுத்துக் கொண்டாள்? எதற்கு தம் அம்சங்களை அனுப்பி னாள்? ஒழிந்து போகட்டும்... இறுதியில் சம்காரம் செய்தவனை எதற்கு தம் காலடியில் போட்டுக் கொண்டு நாம் வணங்கும்படி செய்கிறாள்? அவள் வீரத்தைக் கண்டு நாமும் அஞ்ச வேண்டும் என்றா? இது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் இல்லையா?' இப்படி பல கேள்விகளைத் தொகுத்து ஒரு கேள்வியின் சரத்தை என் முன்னால் விடுத்தார் தொடரின் இயக்குநர் ரவி கிஷோர். அப்போது நான் என்ன பதிலை அவருக்குச் சொன்னேன் என்பதில் பெரிதாய் விஷயமில்லை. ஒரு நறுக்குத் தெறித்த பதிலை நான் சொல்லவுமில்லை.

அதன்பின் நெடுநாளாயிற்றே என்று நான் வசிக் கும் மதுரையில் அம்மா மீனாட்சியைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டு வரலாம் என்று போனேன். அந்த நாளில் எனக்கு அவள் தரிசனமும் மொத்த கோயில் தரிசனத்துக்குமே முப்பது நிமிடங்களானால் அதிகம்.

இப்போது மூன்று மணி நேரம் வேண்டும். அவ்வளவு கூட்டம்! அதிலும் கார்த்திகை மார்கழியில் கோயிலை ஐயப்ப பக்தர்கள் தங்கள் பெயருக்கு மாற்றிக்கொண்டு விடுகிறார்கள். கூட்டத்தைவிட வன்முறை, குண்டு வெடிப்பு போன்ற நவீனகாலக் கொடுமைகளால் போலீசாரின் சந்தேகத்துக்கும் சோதனைக்கும் நாம் ஆளாவதுதான் இதில் உச்சம்.

தலையில் இருந்து கால்வரை தடவிப் பார்த்து ஒரு தீப்பெட்டியைக்கூட உள்ளே கொண்டுசெல்ல விடாதபடி தடுத்து 'போங்கள்... போங்கள்' என்று தள்ளாத குறையாக அனுப்பி வைக்கிறார்கள். கேட்டால் பாதுகாப்பு நடைமுறை - எங்கள் கடமை என்று கூறுகிறார்கள். ஒரு கோணத்தில் சரிதான். ஆனால், பல கோணங்களில் இது ஒரு தூய்மையான பக்தனைப் படுத்தி எடுத்துவிடுகிறது.

இதனாலேயே மிக வைதீகமாய் 'யார்மேலும் படாமல் மீனாட்சி தரிசனத்துக்குப் பிறகே பச்சைத் தண்ணீரைக்கூட குடிப்பேன்' என்றும் அதிதீவிர வைதீகரான சுகுமார் பட்டர் என்பவர், 'இப்போது கோபுர தரிசனம்தான் கோடி புண்ணியம். என் போன்றவர்கள் மீனாட்சியை இழந்து விட்டோம்' என்றார் ஒரு நாள் கண்ணீர் மல்க. எனக்கும் சுருக் கென்று தைத்தது.

''அந்த ஆறாம் தேதி பாபர் மசூதியை யாரோ சிலர் உணர்ச்சி மேலீட்டில் இடித்து வன்முறையில் இறங்கப் போக, இங்கே பாரத தேசம் முழுக்க ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் அப்பழுக்கற்ற ஆன்மிகவாதியைக்கூட கடமை நிமித்தம் போலீஸ் சந்தேகப்பட்டு சோதித்த பிறகே தரிசிக்க அனுமதிக்கிறது. அன்று அப்படி நடக்காமல் இருந்திருக்கலாம்.

எந்த ஒரு வன்முறையும் பின் நன்முறைகளுக்கு அடிகோலியதேயில்லை. அழிக்கப்பட்டே தீர வேண்டிய அசுரனுக்குக்கூட அம்பாள் ஒன்பது நாள் தவணை தந்து பத்தாம் நாள் தான் அழிச்சா! அன்னிக்குத்தான் விஜயதசமி. அவளை சேவிக்கும்போது அசுரனையும் காலடியில் பார்க்கறோம். அழிச்ச அவனை ஆட்கொள்ளவும் செய்துட்டா! விட்டிருந்தாலும் தப்பில்ல. என்னையே அழிக்கும்படி பண்ணிட்டியேடான்னு வருத்தப்பட்டு தமக்குத் தாமே அவபண்ணிண்ட பரிகாரம்தான் அந்தக் காலடியில அவனுக்குக் கொடுத்த இடமோன்னு தோன்றது. சூலமும் கையுமா இருக்கறவளே அவ்வளவு டைம் எடுத்துண்டிருக்கா. வருத்தமும் பட்ருக்கா. அம்மட்டில் அவளுக்குத் தெரிஞ்ச பரிகாரம் நமக்குப் பண்ணத் தெரியலியே?'' என்றார்.

ரவிகிஷோர் கேட்ட கேள்விக்கு ஒரு சரியான பதில் கிடைத்துவிட்டதாக எனக்குத் தோன்றியது!

**(தொடரும்)**




''முதுமையில் கொடியது இயலாமை. வயதான காலத்தில் குளிக்க, உடை உடுத்த, சாப்பிட, நடந்து செல்ல என அடிப்படைத் தேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்திருப்பது. மூளை மற்றும் நரம்பு சார்ந்த நோய்களே இயலாமைக்கு முக்கிய காரணம்'' என்கிறார் பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்.

பக்கவாதம், உதறுவாதம், மறதி, மனச்சோர்வு, தண்டுவடம் மற்றும் நரம்புகளில் ஏற்படும் நரம்பு பாதிப்பு போன்ற நோய்களால் ஏற்படும் இயலாமையைத் தடுத்து, சொந்தக்காலில் நிற்க பல வழிமுறைகள் இந்த நூலில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

முதுமையில் வரும் நோய்களைப் பற்றிய தெளிவு எல்லோருக்கும் இருக்க வேண்டும். அதன் பாதிப்புகள் தொடங்கும் முன்பே, காலம் தாழ்த்தாமல் மருத்துவரை நாடி உரிய சிகிச்சை பெற்றுவிட்டால், முதுமையை வளமாக்கிக் கொள்ள முடியும். அத்தகைய எண்ணத்தை ஊட்டும் நோக்கத்தில் தகவல்கள் தரப்பட்டிருப்பது அருமை.

கால நெருக்கடியால் நோயைப் பற்றி விவரமாக மருத்துவர்களால் எடுத்துரைக்க இயலாத இன்றைய காலகட்டத்தில், முதுமையில் ஊன்றுகோலாய் துணை நிற்கும் இந்த நூல்.

உடலில் ஒரு தொல்லை ஏற்பட்டால் அது நோயா அல்லது முதுமையின் விளைவா என்பது கூடத் தெரியாமல் பல நேரங்களில் முதியவர்களின் மனம் குழப்பமடைகிறது. முதுமையின் பாதிப்பு என்று எண்ணி, உரிய சிகிச்சைப் பெற பலரும் முனைவதில்லை.

மாறாக நோய் முற்றிய நிலையில் மருத்துவரை நாடி சிகிச்சை பெறும்போது தக்க பலன் கிட்டுவதில்லை. ஆகையினால் முதுமையின் விளைவிற்கும் நோயின் தாக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை கண்டறிவது எப்படி என்பது பற்றி இந்நூலில் விளக்கியிருக்கிறார் நூலாசிரியர் மற்றும் முதியோர்நல சிறப்பு மருத்துவர் வி.எஸ்.நடராசன்.

**முதுமையும் மூளை நரம்பு நோய்களும், வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17. தொலைபேசி எண்: 044 - 24342810, 24310769, பக்கம் : 160, விலை ₹ 150/-**

**கனவு என்பது என்ன? அதிலும்... திடுக்கிட்டு விழிப்பு வரும் கெட்ட கனவு பற்றி விளக்கவும்?**

**- பிரியதர்ஷினி, திருநெல்வேலி**

கனவு என்பது மூளையின் ஒரு மாற்றுச் செயல்பாடு. மூளை, பகல் நேரங்களில் தமக்குக் கிடைத்த சமிக்ஞைகளையெல்லாம் ஒருங்கிணைத்து பதப்படுத்தி எதை நீண்ட நாள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். எவற்றுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதை சார்ட் அவுட் பண்ணுகிறது.

அதாவது, அன்றைய பொழுதில் நமக்கு நடந்த சம்பவங்கள், வாழ்க்கை முழுவதும் நடந்த சம்பவங்கள் கற்பனையில் நாம் எதிர்பார்த்து கதையில் முடிந்தவை, சினிமாவில் கேட்டது, மத்தவங்க சொன்னது என எல்லாவற்றையும் கோத்து அதில் ஓர் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முயற்சி பண்ணுவது கனவு. இது சாதாரணமாக நடக்கிற ஒரு வேலை.

மூளையில் இரண்டுவிதமான தூக்கங்கள் இருக்கும். ஒன்று, கண் அசையற ராபிட் ஐ மூவ்மென்ட் (REM) மற்றொன்று கண் அசைவு இல்லாத ஒரு உறக்கம் (NON REM).

விடிகாலையில் ரொம்ப நேரம் தூங்கிய பிறகு, அதிகமான REM ஸ்லீப் வரும். இந்த நேரத்தில்தான் குதிக்கிற மாதிரி, தப்பிக்கிற மாதிரி, ஓடுறமாதிரி, துரத்துற மாதிரி பயங்கரமான கனவுகள் வரும். விடிகாலையில்தான் இது அதிகமாக இருக்கும். அந்தச் சமயத்தில் திடுக்கிட்டு எழுந்தோம் என்றால், ஒரு வித பதற்றம், பயம், அய்யய்யோ இது நடந்திடுமோ என்கிற உணர்வுகள் அலைமோதும். REM தூக்கத்தின் போது, மூளை, நிறைய விஷயங்களை கிரகிக்கிறது. ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறது. மூளையின் செயல் திறனையும் அது தூண்டுகிறது. அதனால், நல்லபடியாக தூங்குவதினால் REM ஸ்லீப் அவசியம். சிலருக்கு இந்தத் தூக்கம் ஏற்படாது. அதிக குண்டாக இருப்பவர்களுக்கு நல்ல தூக்கம் இருக்காது. விட்டு விட்டுதான் தூங்குவார்கள். ஏனெனில், அவர்கள் குண்டாக இருப்பதால் அவர்களுடைய உள் நாக்கு போய், மூச்சுக்குழாயை அடைக்கும். இதனால், மூளைக்கு போதுமான ஆக்சிஜன் சப்ளை கிடைக்காது. ஆக்சிஜன் குறையும் போது திடுக்கிட்டு விழிப்பு, திரும்பவும் தூக்கம் என விட்டு விட்டு தொடர்ந்து தூங்கிட்டே இருப்பார்கள். இவர்களுக்கு இரவு தூக்கம் இல்லாமல் இருக்கும். காலையில் எழுந்தபிறகுதான் உட்கார்ந்தபடியே நல்லபடியாகத் தூங்கமுடியும். இந்த மாதிரி 'அப்ஸ்ட்ரக்டிவ் ஸ்லீப் ஆப்னியா' பிரச்னை இருப்பவர்களுக்கு மிக அதிகமாக அச்சுறுத்தும் கனவுகள் வரும். ஏனெனில், ஆக்சிஜன் குறையும்போது மூளையானது, 'டேஞ்சர், நீ எழுந்திரு' என சிக்னல் கொடுக்கும். அப்போது, அவங்களுக்கு பயங்கரமான கனவுகள் தோன்றும். இந்த திடுக்கிடும் கனவுகள் மிக அதிக அளவில் வருகிறது என்றால், 'ஸ்லீப் ஆப்னியா' இருக்கா என்று பரிசோதித்துக் கொள்வது அவசியம். உடல் எடையைக் குறைக்க வேண்டும். இந்த இரண்டையும் பார்த்தபிறகும் கனவு தொடர்ந்து இருந்தால், அவர்கள் தூங்கும் போது, செயல்பாடு எப்படி இருக்கிறது என்பதை மானிட்டர் செய்யவேண்டியதும் அவசியமாகலாம்.

**பயம் என்பது மனநோயா? எதனால் ஒருவருக்கு பயம் ஏற்படுகிறது?**

**-மதி மனோ, கண்ணகி நகர்**

''பயம் மனநோய் அல்ல. மனிதர்களுக்கு மட்டுமல்ல, மிருகங்களுக்கும் இருக்கக்கூடிய ஒரு சாதாரணமான உணர்வு. எல்லா உணர்வுகளைப் போல பயம் என்ற உணர்வுக்கும் ஒரு காரணம் இருக்கிறது. இதற்கு ஒரு பரிணாம வரலாறு இருக்கு.

## பயம் என்பது



டாக்டர் என்.ஷாலினி

முதன் முதலில் மனிதனுக்கு எப்படி பயம் உருவானது என்று பார்த்தால், எதிரிகளின் தாக்குதல், நம்மை சாப்பிடறதுக்கு துரத்தும் ஒரு மிருகம், இயற்கை சீற்றம், உயிருக்கு ஆபத்தான சூழல். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தப்பித்து ஓடுறதுக்கு உண்டான, உணர்ச்சி கிளர்வை ஏற்படுத்துவதுதான் அந்த பயம் என்ற உணர்வு நிலையின் அர்த்தம். இந்த பயம் என்ற உணர்வுகளாலேயே, நாம் பார்க்கும்போது 'அவங்க பயப்படறாங்க, படபடன்னுவருது, மயக்கமா இருக்கு' என்று சொன்னாலும், அதில் இருக்கும் கெமிக்கல் சிக்னேச்சர் என்னவென்று



# நோயா?

பார்த்தால், ரத்தத்தில் அட்ரினலின் என்ற ரசாயன ஹார்மோன் அதிகமாக உற்பத்தியாவதுதான். அட்ரினலின் வேலையே, உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் நம் உயிரைக் காப்பாற்றிவிடுவதுதான்.

உதாரணத்துக்கு, ஒரு மருந்தினால் யாருக்கேனும், அலர்ஜி ஏற்பட்டு விடுகிறது. இல்லை ஐசியுவில் இருக்கும் ஒரு நோயாளிக்கு இதயம் நின்றுபோனது. ஈசிஜி ரொம்ப குறைவா இருக்கு என்றால், உடனே அட்ரினலின் என்ற மருந்து ஹார்மோனை ஊசி மூலமாக, ரத்தநாளத்தில் செலுத்தும்போது, உடனே, இதயத்துடிப்பு நார்மலாகிவிடும். அந்த அளவுக்கு உயிர் காப்பாற்றுவதற்கு உண்டான, சக்தியை அந்த அட்ரினலின் என்ற ஹார்மோன் நமக்குனு தருகிறது. அந்த ஹார்மோன் நம் ரத்தத்தில் செயல்பட ஆரம்பித்ததும், குளுகோஸ் அளவு அதிகரிக்கும். இதயத் துடிப்பு அதிகமாகும். மூச்சு வாங்கும். படபடப்பு ஏற்படும். எப்படி... எப்படி என்று அவசரமாக யோசிக்கிற தன்மை ஏற்படும்.

தசை நரம்புகளையெல்லாம் தூண்டிவிட்டு, 'இங்கிருந்து நகர்ந்திடணும்... இங்கிருந்து ஓடிடணும்' என்ற ஒரு பரபரப்பு ஏற்பட ஆரம்பிக்கும். பி.பியை கொஞ்சம் சமாளிக்கிறது. பல்ஸ்ரேட், டெம்ப்ரேச்சரை இங்க்ரீஸ் பண்றது என பல விதமான வேலைப்பாடுகள் இந்த அட்ரினலின் என்ற ஒரே ஒரு ஹார்மோனுக்கு இருக்கிறது. இந்த வேலைப்பாடுகள் எல்லாம் நம் மூளையைத் தொடும்போது, பதற்றம், பயம் ஏற்படுகிறது. இந்த பயம், அந்த பிரச்னையிலேர்ந்து தப்பிக்கிறவரைக்கும் இருந்து கொண்டே இருக்கும். அந்தப் பிரச்னையிலிருந்து தப்பித்தவுடன், இந்த அட்ரினலின், ரத்தத்தை விட்டுப் போய், அசிட்டைன் கோலின் என்ற இன்னொரு ஹார்மோன் ரத்தத்தில் உற்பத்தியாகும். அதனால், 'அப்பாடா, தப்பிச்சிட்டோம்... நிம்மதி...' என்ற ஒரு பெருமூச்சும், புளகாங்கிதம் ஒரு நிறைவு ஏற்படுவதை நாம் பார்க்கிறோம்.

இதுபோல், அட்ரினலின், அசிட்டைன் கோலின் இரண்டுமே சேர்ந்து, பல தடவை உற்பத்தியாகும் போது, நம் மூளை, மெமரியில் தக்கவைத்துக் கொள்ளும். இந்த மாதிரியான சம்பவத்தை நாம் ஏற்கெனவே சமாளிச்சிருக்கோம். அடுத்த முறை, இப்படி நேர்ந்தால், 'இப்படித் தான் சமாளிக்கணும்' என்ற தயார்நிலைக்கு நம்மைப் பழக்கிக்கொள்ளும்.

பயம், நாமே நம்மைப் பக்குவப் படுத்திக்கொள்கிற விஷயம்தானே தவிர, இது நோய் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது.''

(பேசுவோம்...)

வாசகர்களின் மனம் / உளவியல் தொடர்பான சந்தேகங்களுக்கு பதிலளிக்க காத்திருக்கிறார்
உளநலவியல் நிபுணர்
டாக்டர் என்.ஷாலினி

# சன்னிதி நாடி...

ஆன்மிக தரிசனமா, இல்லை சுயதரிசனமா? அல்லது இரண்டின் கலவையா? இப்படி பல கேள்விகள் நம் வாசக அன்பர்களிடையே எழுப்பியுள்ளனர். இது, இரண்டின் கலவை என்பதே சரி. தெய்வ தரிசனங்களின் நோக்கமே சுயதரிசனம் நல்லவிதமாய் நமக்குள் நிகழ வேண்டும் என்பதற்காகத்தானே?

நான் யார்? இந்தக் கேள்விதானே உலகின் மில்லியன் டாலர் கேள்வி. இதற்கு ஆன்மிகத்தில்தான் நிறைவான, தெளிவான பதில் உள்ளது. அந்தப் பதிலை ஒரு வாழ்வாகவே வாழ்ந்து காட்டிவிட்டுப் போனவர்தான் பகவான் ரமணர்! எனவே இத்தொடர் ஒரு ஆன்மிக சுயதரிசனத் தொடர் என்றும் கூறலாம்.

வங்காள விரிகுடா கடல் வற்றும் என்பதைக்கூட என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆனால் திருப்பதியில் கூட்டமே இல்லாத ஒரு காற்றோட்டத்தை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் பெருமாளின் கம்பீரமா? சௌலப்யமா? இல்லை ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்ததாகக் கதைக்கப்படும் ஸ்ரீ யந்திர வசீகரமா?.

மொத்தத்தில் திருப்பதி என்றாலே கட்டுக்கடங்காத கூட்டம் என்கிற ஒரு நிலைப்பாட்டில் இந்தக் கூட்டத்திடம் சிக்கித் திணறிய ஒரு நாளில் சட்டென்று என்னிடம் ஓர் ஆவேசம். குறிப்பாக சன்னிதியின் முகத்துவாரம் வரை ஒழுங்காக வரும் வரிசை முகத்துவாரத்தில் அப்பளமாய் உடைந்து நொறுங்கி 'யாரோ எக்கேடோ கெட்டுப் போங்கள் - எனக்கு என் தரிசனமும் கோரிக்கையும்தான் கணக்கு' என்றாகிற அந்தப் புள்ளியில் நான் சிக்கிக்கொண்ட வேளையில் எனக்குள் தரிசிக்கிற எண்ணமே இல்லை.

இது என்ன காட்டுமிராண்டித்தனம்... இதற்குப் பேரா பக்தி? இவ்வளவு சுயநலமுள்ளவனா மனிதன்? இப்படி அங்கு கண்ட காட்சியில் நான் கேள்விகளுக்குள் சிக்கிக் கொண்டேன்.

ஒருவர் ரூபாய் நோட்டுக் கட்டுகளை விசிறி போல விரித்துப் பிடித்து தலைக்குமேல் பிடித்தபடி பெருமாளுக்குக் காட்டி ஏதோ டீல் போட்டார். இன்னொருவரிடம் சிம்பன்சியிடம் மட்டுமே காண முடிந்த சேஷ்டைகள்! நடுவே கைக்குழந்தையின் அதீதமான அழுகுரல். இந்தச் சூழலில் எனக்கு பெருமாளையே பார்க்கத் தோன்றவில்லை.

பெருமாள் இங்கே கடவுளா இல்லை நரேந்திர மோடி, டொனால்ட் ட்ரம்ப், அதானி, அம்பானி, பில்கேட்ஸ்களின் ஒன்று கலந்த ஒரு பவர் சென்டரா?

'எல்லா இடத்திலும் கடவுள் இருப்பதாகத் தத்துவமெல்லாம் பேசிவிட்டு, இப்படி ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்தால்தான் அருள் கிட்டும் என்று எண்ணி வந்த உனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்!' என்றும் ஒரு குரல் என்னுள்... இறுதியில் பிடித்துத் தள்ளப்பட்டு தரிசிக்காமலே வெளியே வந்த எனக்குள் பெரிய அளவில் கோபமும் உருவாகி பெருமாளின் தங்கக்கோபுரத்தைப் பார்த்துக் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டேன்.



''ஏகாந்தமாய் உன்னை தரிசிக்கவே முடியாதா? பணம் காசின்றி உன்னைப் பார்க்கவே முடியாதா? அப்படிப் பார்க்க வேண்டும் என்றால் நான் ஒரு கவர்னராகவோ இல்லை முதல் மந்திரியாகவோதான் இருக்க வேண்டுமா?'' இப்படி வண்டி வண்டியாகக்



கேள்விகள். ஒரு நல்ல பக்தனுக்குப் பெருமாள் காட்சி கொடுக்கும் அமானுஷ்யமெல்லாம் சினிமாவில் மட்டும்தான். நிஜத்தில் பெருமாளே அங்கு நிணறிக்கொண்டிருக்கிறார் என்கிற கருத்தோடு திரும்பிவிட்டேன்.

அடுத்த வாரத்தில் ஹைதராபாத் பயணம், தொலைக்காட்சி தொடருக்கான கதை விவாதம் என்று வாழ்க்கையின் வழக்கமான ஓட்டத்தில் ஊர் திரும்புவதற்காக விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டேன். அப்போது, ''போற வழியில்தான் பிர்லா மந்திர். உங்களுக்குக் காட்டச் சொன்னார் தயாரிப்பாளர்'' என்றார் கார் டிரைவர்.

அதிகாலை 5.30 அளவில் மந்திர் முன் காரை நிறுத்திவிட்டு, 'குளிப்பதற்காக, மலைப்படி போல் மேலேறும் வழவழப்பான மார்பிள் படிகளில் ஏறி நடந்தேன். ஜிலுஜிலுப்பு உச்சி மண்டை வரை ஏறிற்று. அந்த நொடி வரை அது ஒரு திருப்பதி பெருமாள் கோயில் என்றோ, திருமலை



நடைமுறைகள் பின்பற்றப்படுவதோ எதுவும் எனக்குத் தெரியாது.

பூலோக குபேரனான பிர்லா தன் பக்தி நிமித்தம் கட்டிய அந்தக் கோயிலின் பிரம்மாண்டம், தூய்மை எல்லாம் மிரட்டியது. சன்னிதி முன் போய் நின்றபோது பட்டர்கூட இல்லை. சன்னிதியில் பெருமாள். எதிரே நான் மட்டும். சில நிமிடங்கள் கழிந்த நிலையில் பட்டர் வந்தார். சன்னிதியைத் திறந்து முதல் கால பூஜையை முடித்துவிட்டு சிரமபரிகாரத்துக்காகச் சென்றது தெரியவந்தது.

''ஹைதராபாத்வாசிகளுக்கு எட்டு மணிக்கு மேல்தான் பொழுது விடியும். அதனால் தான் கூட்டமில்லை. இந்த நேரத்தில் நீங் கள் வந்ததே பெரிய விஷயம்'' என்றார்.

புறப்படும் சமயம் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஆறு. போன வெள்ளியில் இதே வேளையில்தான் திருமலையில் தங்கக் கோபுரத்தைப் பார்த்துக் கொந்தளித்ததும் நினைவுக்கு வந்தது. அப்போது நான் கேட்ட அந்த ஏகாந்த தரிசனம் இப்போது. அதுவும் துளியும் திட்டமிடல் இன்றி... இங்கே தனியார் கோயில் என்பதால் பணம் காசுக்கும் இடமில்லை. பின்னோக்கி யோசிக்க யோசிக்கத்தான் ஒரு இனம் புரியாத வழிநடத்தலில் நான் இருப்பதை உணர்ந்தேன். பட்டரிடமும் திருமலையில் குமுறியதை அப்படியே சொன்னேன். அதன்பின் அவர் சொன்னதுதான் அட்சரலட்சம்.

''கூட்டமில்லேன்னாலே அந்தக் கோயிலுக்கு சக்தி இல்லேங்கற மாதிரி ஒரு அபிப்ராயம் உருவாயிட்டது. கோயில் இருக்கறதே கூட்டம் கூட்டமா பக்தாள் வரணும்கறதுக்குதானே? அதுலயும் திருப்பதிக்கு வர்றவா தங்களையும் அறியாம வைகுண்டத்துக்கே வந்துட்ட மாதிரி நினைச்சுக்கறா. அங்க சில நிமிஷம் கூட இருக்க முடியாதுங்கற யதார்த்தம் தெரிஞ்சிருக்கறதால கிடைக்கற நொடிகள்ல சகலத்தையும் மறந்து பெருமாளைப் பார்த்துக் கதற ஆரம்பிச்சுடறா. என்னக் கேட்டா அதான் உயிரோட குரல்! அந்த நசுக்கம் ஒரு கடைசல். சன்னிதியை விட்டு வெளிய வந்த உடனேயே அவாளுக்குள்ள ஒரு பெரிய ஆறுதல். அதை இந்த மாதிரி பணக்கார சன்னிதிகளால எல்லாம் தரவே முடியாது. அதுக்காக இங்க அவனில்லன்னு அர்த்தமில்ல. எங்கேயும் அவன் இருக்கறதா உணரும் ஞானம் நமக்கிருந்துட்டாதான் கோயிலே தேவையில்லையே... அது என்ன அவ்வளவு சுலபத்துல கிடைச்சிடுமா? கிடைக்கத்தான் பூலோக மாயா விட்ருமா?'' - என்று கேட்டார்.

எனக்கென்னவோ பெருமாளே வந்து என்னைப் பார்த்துக் கேட்டுச் சிரிப்பது போலவும், சினிமாவில் மட்டுமில்லை, நிஜத்திலும் நான் காட்சி தருவேன் என்று சொல்வது போலவும் தோன்றிற்று. திருப்பதி கூட்டம் குறித்த என் கோபமும் மாறிப்போய் அங்கே ஒவ்வொரு சாமானியனுக்கும் ஒரு நம்பிக்கை விதைப்பு நடைபெறுவது மெல்லப் புரியத் தொடங்கியது.

இந்த ஆன்மிக சுயதரிசனத்தை இப்படி நான் எடுத்துக்கொண்டது சரியா?

தொடரும்...

மருத்துவப் பரிசோதனை நிமித்தம் ஒரு டாக்டரை சந்தித்தேன்.

இதுதான் புரட்சி யுகமாயிற்றே?

ஒரு மூவாயிரம் ரூபாய் செலவில் ரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. டாக்டரும் பரீட்சை பேப்பரைப் பார்ப்பது போல அந்தப் பரிசோதனை முடிவுகளைப் பார்த்தவராய் என்னையும் ஏற இறங்கப் பார்த்தார்.

குண்டுகள் வெடிக்கப் போவதாய் எனக்குள் பயம்!

நல்லவேளையாக பெரிதாக எதையும் சொல்லவில்லை. ''கொஞ்சம் தைராய்ட் பிராப்ளம் இருக்கு. சரிப்படுத்திடலாம். வைட்டமின் Dயும் குறைவாக இருக்கு. அதிகம் ஏசில இருக்கீங்கன்னு நினைக்கறேன். அப்புறம் யூரிக் ஆசிட்டும் கொஞ்சம் கூடத்தான் இருக்கு''- என்று சொல்லிக்கொண்டே வந்தவர், ''இதுக்கெல்லாம் தனித்தனியாக மருந்து இருக்கு சார். சாப்பிட்ட உடனே சரியும் ஆயிடும். நிரந்தரமா சரியாகணும்னா அது உங்க கால்கள் கிட்டதான் இருக்கு!'' என்றார்.

உடனே நான் என் கால்களைப் பார்த்தேன்.

''என்ன பாக்கறீங்க... இதால மட்டும்தான் உங்களைக் காப்பாற்ற முடியும். இதை நீங்க பயன்படுத்தறதேயில்லை போல. அதான் உங்க உயரத்துக்கு 60 கிலோ அதிகம். 40 கிலோவை சிந்துபாத் மாதிரி 24 மணி நேரமும் சுமந்துகிட்டு இருக்கீங்க. சுமக்கறது நீங்க இல்ல. இதோ இந்தக் கால்கள்!''







- என்று திரும்ப என் கால்களைக் காட்டினார்.

''நான் என்ன செய்யணும்கறீங்க?''

''நடங்க சார். தினசரி 5 கிலோ மீட்டராவது நடங்க. கார், பைக்கை எல்லாம் வித்துடுங்க. எங்க போனாலும் நடந்து போங்க. வெயில் மேல் பட்டு வியர்க்கட்டும் உடம்பு.

நடை - இதுதான் உங்களுக்கான முடிவான மருந்து. கால்கள் இயங்கணும். உடல் உறுப்புகள்லயே கால்கள் தான் சார் மிகச் சிறந்த உறுப்பு. ரெண்டு கண் இல்லாமகூட சந்தோஷமாக வாழ்ந்துட முடியும். கால் இல்லாம முடியுமா?

காலாலதானே உலகத்தையே நடந்து திரிஞ்சி பாக்கறோம்? கால்கள்தான் சார் எல்லாம். இதை நம்ப பெரியவங்க மகோன்னதமா உணர்த்தின மாதிரி உலகத்துல யாருமே உணர்த்தல.

பெரியவங்க கால்ல விழுந்து வணங்கறதுல ஆரம்பமாகுது காலோட முக்கியத்துவம். நம்ம கால்களால நம்ப உடம்பு ஆரோக்கியமா இருந்தா, அவங்க கால்களால



**ராமனின் பாதுகை சிம்மாசனத்தில் அமர்ந்து ஒரு நாட்டையே ஆட்சி செய்தது.**

# 'திருவடி' சரணம்

தான் நம்ம வாழ்க்கை வரம் மிகுந்ததா இருக்கு.

கைகளாலதான் காரியங்கள் செய்யறோம். கையில்லேன்னா கூட வாழறது ரொம்ப கஷ்டம்தான். ஆனாலும் கால்கள் முன்னால கை சின்னது தான் சார்.

ஆசிர்வதிக்கற கைகளைவிட சரணாகதி பண்ற கால்களுக்கு கருணை அதிகமிருக்கே? அதனாலதானே கையோட பாதத்தை சம்பந்தப்படுத்தி பாதுகைன்னு சொல்றோம்?'' - டாக்டர் கால்களை மையமாக வைத்து பி.ஹெச்.டியே செய்திருப்பார் போல. எனக்குள்ளும் பல தரிசனங்கள் புராணங்களில் இருந்து நினைவுக்கு வந்தன. ராமனின் பாதுகை சிம்மாசனத்தில் அமர்ந்து ஒரு நாட்டையே ஆட்சி செய்தது.



ராமானுஜரின் பாதுகைகளை அவர் சீடர் ராமானுஜர் அன்றாடம் பூஜிக்கும் சிலாரூபங்களோடு சேர்த்து வைத்தே பூஜித்தார். வைணவ ஆலயங்களில் சடாரியில் இருப்பதும் திருவடிகள் தான்! பாரதத்தில் கண்ணன் கூட தலைமாட்டில் நின்ற துரியோதனனை விடுத்து காலடியில் நின்ற அர்ஜுனனைத்தான் முதலில் கவனித்தான். கிருஷ்ண ஜெயந்தியன்று பாலகிருஷ்ணனின் காலடிகளே வீடு முழுக்க மாக்கோலமாக இடப்படுகிறது.

காஞ்சி மகாபெரியவர் தரித்த பாதுகைகள் தான் இன்று அவர் பக்தர்கள் இல்லங்களில் பூஜிக்கப் படுகிறது.

டாக்டர் சொன்னதுபோல இந்த கால்களுக்குத்தான் எத்தனை சிறப்பு? எத்தனை வலிமை?

இதை வீட்டுக்குள், படிகளில் ஏற இறங்க மட்டுமே பயன்படுத்தி, வாகனங்களைச் சார்ந்து வாழ்ந்ததன் பலன்தான் தைராய்டில் தொடங்கி ஊளைச் சதை வரை பலப்பல சிக்கல்கள்.

வினோபா, மகாத்மா காந்தி, காஞ்சி பெரியவர் போல 'நட'ராஜனாக இனி வாழ்வதே ஆரோக்கியம் என்கிற முடிவுக்கு நானும் வந்தேன். என் கால்கள் என்னை மட்டுமல்ல. என் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டிய கால்களாக உள்ளதே?

மதிப்புமிக்க இந்த கால்கள் பற்றி என் டாக்டர் சொன்ன பிறகு நானும் அதன் மேல் மிகவே கவனம் கொள்ளத் தொடங்கிவிட்டேன்.

கால்கள் குறித்த இந்த மேலான ஞானத்துடன் வீடு



திரும்பிய நான் என் மனைவியிடமும் 'இனி இந்த கால்களே எனக்கான மருந்து என்று டாக்டர் சொன்னதைச் சொல்லி இனி இந்திரா செளந்தர்ராஜன் நடராஜனும் கூட! என்றேன்.

அந்த நொடிகளில் டி.வி. நியூஸ் சேனலில் தி.மு.க.வின் செயல் தலைவர் ஸ்டாலின் அவர்களும் கால்கள் பற்றியே பேசவும் கவனம் அதன் மேலும் திரும்பியது.

தன் காலில் யாரும் விழக்கூடாது என்பதை ஒரு தீர்மானமாகவே கொண்டு வந்து காலில் விழுதல் என்பது ஒரு கௌரவமான விஷயம். அதை அரசியலில் கேலிக்குரியதாக்குவதை ஏற்க முடியாது. நான் இதை அனுமதிக்கப்போவதில்லை என்ற அவர் கருத்து என்னைக் கவர்ந்தது.

கால்கள் நம்மை மட்டுமல்ல, நம் சுயமரியாதையையும் காப்பாற்றுவதை ஸ்டாலின் அவர்கள் புரிந்து கொண்டு சொன்ன அந்த தீர்க்கம் எனக்கு அவர்பால் மரியாதையை உருவாக்கிற்று.

கால்களுக்கு அவர் அளித்த கௌரவத்துக்காக உடனேயே என் கைகளால் தட்டி நன்றி சொன்னேன். டாக்டரிடம் வணங்கிச் சொன்னேன்.

*நடந்து வாழட்டும் கால்கள்!*

*அதை உணர்ந்து வணங்கட்டும் கைகள்!*

**தொடரும்...**

# ஏறு தழுவுதல்...

ஜல்லிக்கட்டு - இது ஒரு வழக்குச் சொல். ஏறு தழுவுதல், காளை பொருதுதல், மாடாதித்தல் - இதெல்லாம்தான் மரபுவழிச் சொற்கள். ஒரு பல்லாயிரம் ஆண்டு பாரம்பரியமிக்க ஒரு கொண்டாட்டம் இது. இதனுள் ஜீவ இம்சை என்பதற்கு இடமே கிடையாது.

நாம் உயிர்வாழக் காரணமான உணவுப் பொருளின் விளைவுக்குப் பின்னால் நமது உழைப்புக்குத் துளியும் குறைவில்லாத பங்களிப்பை ஆடு, மாடுகளும் அளிக்கின்றன.

ஆடுகள் தழைகளைத் தின்றும், சாணம் மூலம் உரம் தந்தும் உதவினால், மாடுகளில் பசு பாலைத் தருவதோடு தன் குளம்படியால் தான் வாழும் இடத்தையே புனிதப்படுத்துகிறது. இதன் மூத்திரமும் சாணமும் மூலிகை மருந்துக்கும் மேலானதாக விளங்குகிறது. பசுவின் குளம்படி தூசுக்கு 'பவித்ரதூசி' என்று பெயர். காளையோ நிலத்தை உழுவதற்கும், நீர் இறைக்கவும் பயன்பட்டு, வண்டி மாடாகி, உணவுப் பொருள் இடம் மாறவும் உதவுகிறது.

நாம் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளில் நம்மைவிட இதற்கே கூடுதல் உரிமை. அதனாலேயே இதற்கென தனியே ஒரு நாளையே ஒதுக்கி, இதை அலங்கரித்து இதற்கும் பொங்கலிட்டு உறவு கொண்டாடி மகிழ்கிறோம்.

இது ஒரு உயர்ந்த பண்பாடு - நன்றி பாராட்டும் செயல் - இவ்வரிசையில் மூன்றாம் நாள் வருவதே ஜல்லிக்கட்டு. இதில் திருமணமாகாத ஆடவர்க்கே முதலுரிமை. சொல்லப்போனால் அவர்களுக்காகவே இது நிகழ்த்தப்படுகிறது. வாடிவாசலில் விலங்குக் காளை ஓடத் தொடங்கவும் மனிதக் காளை அதன் திமிலை சிவலிங்கத்தை பிடித்த மார்க்கண்டேயன் போல் இறுகப் பற்றிக்கொண்டு முப்பது நொடிவரை விடாமல் ஓடவேண்டும். அப்படிப் பிடித்துவிட்டால் அவன் உடல்நலம் மிக்க உறுப்புகளில் குறையில்லாத ஒரு நல்ல ஆண் மகன். சந்தேகங்களுக்கு இடமின்றி இவனைப் பெண்கள் மணந்துகொண்டனர்.

ஒரு கோணத்தில் ஏறு தழுவுதல் ஒரு மறைமுகமான ஆண் பார்க்கும் படலமும் கூட.

இது நல்ல ஆண்களுக்கான தேர்வுக்களம். தழுவ முடியாதவர்கள் இதனால் ஆண் பிள்ளைகளில்லை என்று பொருளில்லை. பங்கு பெறுதல் என்பதிலேயே தகுதி வந்துவிடுகிறது. தழுவியும் முடிக்கும்போது தலைக்கு கிரீடமே கிடைக்கிறது.

அந்தக் காலத்தில் எக்ஸ்ரே, ஸ்கேன், ரத்தப் பரிசோதனை எல்லாம் ஏது? அவ்வளவும் ஜல்லிக்கட்டுக்களம்தான்.

தழுவி முடித்தபின் தன்னை ஒரு வெற்றிக்காளையாக்கிவிட்ட தன்னுடைய காளையை நல்ல தோழனாய் சகோதரனாய்தான் கருதினான் தழுவியவன். இதெல்லாம் ஜல்லிக்கட்டின் நல்ல பக்கங்கள்!

சைவர்களில் வீரசைவர்கள் என்று ஒரு பிரிவினர் உண்டு. இவர்களில் மறவர் குலம் சார்ந்தவர்களுக்கு ஏறு தழுவுதல் என்பது சிவனைத் தழுவுதலுக்குச் சமமான விஷயமாகும். அதற்கு நந்தி தேவர் வாய்ப்பளிப்பதாகக் கருதி ஜல்லிக்கட்டுக் காளையை இவர்கள் ரிஷபமாகவே பார்த்தனர்.

இதை இவர்கள் வண்டியில் பூட்டி வேலை வாங்குவது, வயலில் உழுவதற்காகப் பயன்படுத்துவது என்று எதையும் செய்யமாட்டார்கள். இனப்பெருக்கத்துக்காகவும், ஏறு தழுவுதலுக்கும் மட்டுமே



இதை வைத்து வளர்ப்பார்கள். இது இறக்க நேர்ந் தாலோ, இறைச்சிக்குக் கொடுக்காமல் மனிதர்களைச் சுமப்பது போல் சுமந்து சென்று புதைத்து, சமாதி எழுப்பி, வழிபாடு செய்வார்கள். மாடுகளுக்கு நம் மிடையே இவ்வளவு மதிப்பிருந்தது. மாடு என்றால் செல்வம் என்றும் பொருள். எனவே மாடு தொலைந் தாலோ நோயுற்றாலோ அதைச் செல்வ இழப்புக்கான சகுனம் என்று கருதியவர்கள் நம் மக்கள்.

புராண காலங்களில் ஒரு அரசனின் மதிப்பு அவன் எவ்வளவு தங்கம், வைரம் வைத்திருந்தான் என்பதை வைத்து தீர்மானிக்கப்படவில்லை. அவனிடம் இருந்த காளைகளையும் பசுக்களையும் வைத்தே மதிப்பிடப்பட்டது. மகாபாரதத்தில் மாடுகளைத் திருட விராட நாடு நோக்கிப் படையே எடுத்திருக் கிறான் துரியோதனன்.

கால மாற்றமும் விஞ்ஞான வளர்ச்சியும் ஜல்லிக் கட்டிலும் தன் திருவிளையாட்டைக் காட்டியது என்பது இதன் மோசமான பக்கம்.

தன் மாடே வீரம்மிக்கது என்று காட்டுவதற்காக மாட்டு வாலைக் கடித்துவிடுவது, அதற்கு ஊசி போட்டு வெறியேற்றுவது என்று சிலர் செயல்பட போக ஜல்லிக்கட்டு ஒரு கொடுமைக் களம் என்பது போல் இந்த பீட்டாகாரர்கள் கருதிவிட்டனர். கொடு மையைத் தடுக்க விதிமுறைகளை ஏற்படுத்த வேண் டும். ஏற்படுத்தவும் செய்தனர். இப்போது விதிமுறைப்படிதான் ஜல்லிக்கட்டும் நடக்கிறது.

செய்துவிடலாம்.

ஜல்லிக்கட்டுப் போல ஒரு கலாசார விஷயம் மாட்டும்போது இதன்மூலம் இதற்கான கோஷங்கள் மூலம் தங்களின் மனக்குமுறலை வெளிப்படுத்தி விட்டார்கள்.

இன்று நாட்டில் எவ்வளவோ அநீதிகள். அவை களை எதிர்த்துப் போராடுவதில் ஒரு பாதுகாப்பில்லாத நிலை உள்ளது. அதில் எப்படியோ கட்சி அரசியல் வந்துவிடுகிறது. கலாசார மீட்புக்கான இந்தப் போராட்டம் பொதுவாகவும் தமிழ்நாடே காத்திருந் ததுபோல் குதித்துவிட்டது. முடிவும் நல்லவிதமாக அமைந்துவிட்டது.



# ‘ஆன்’ பார்க்கும் படலம்!

அப்படிப்பட்ட இதற்கு எதற்குத்தடை? புரியவில்லை.

பீட்டாகாரர்கள் கண்களில் பாரம்பரியமும் பண் பாடும் மேலான உள்நுட்பங்களும் படவேயில்லை. ஐயோ கொடுமைப்படுத்துகிறானே என்ற சிலர் செய்த தவறை இவர்கள் பிடித்துக்கொண்டுவிட்டனர். இந்த வள்ளலார் பெருமக்கள் கண்களில் மாடு வதைக் கூடங்களும் ஒட்டக வதைக் கூடங்களும், குதிரைப் பந்தயங்களும் எந்த அடிப்படையில் விதிவிலக்கு பெற்றன என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

ஜல்லிக்கட்டு சிலரால் இப்படி சிக்கலுக்கு ஆளானதுகூட ஒரு நல்லதில்தான் முடிந்துள்ளது. ஒரு சமூகத்தில் பலவித சக்திக்கூறுகள் உள்ளன. இதில் மாணவ சக்திதான் அணுவுக்குச் சமமானது. இந்தச் சக்தியை சரியாகப் பயன்படுத்தினால் பரங்கிமலை யைத் தள்ளிச்சென்று பழனிக்கு அருகிலும் பழனியை, பரங்கிமலை இருந்த இடத்திலும் இடமாற்றமே

இந்த ஜல்லிக்கட்டு விஷயத்தில் முதல் ஹீரோ ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாதான். இவர் மாமன்மார்களில் ஒருவர் கும்பன் என்பவர். இவர் மகள் பெயர் நப்பின்னை. பேரழகி! இவர் வசம் ஏழு காளைகள் இருந்தன. இதை அடக்க முனைபவர் இறப்பது நிச்சயம். அத்தனை மூர்க்கமான காளைகள். இந்த ஏழு காளைகளையும் கிருஷ்ணன் அடக்கி நம்பின்னையையும் மணக்கிறான் கண்ணன். பெரி யாழ்வார் பாசுரமே சாட்சி.

**‘ஆயர்மடமகள் பின்னைக்காகி**
**அடல்விடை ஏழினையும், வீயப்பொருது**
**வியர்த்து நின்றானை, மெய்மை கண்டருளார்’**

என்றார் பெரியாழ்வார்.

பீட்டாக்காரர்கள் கிருஷ்ண டேட்டாவைப் பார்த் தாவது ஒதுங்கிக்கொள்ள வேண்டும்.

தொடரும்...

என்னை எதிரியாகக் கருதுபவர் கூட நன்றாயிருக்கக்கூடாது என்று நான் நினைத்ததில்லை. நினைக்கப் போவதுமில்லை. எல்லோரும் எப்போதும் நன்றாயிருக்க வேண்டும் என்பதே என் பொதுவான விருப்பம். இதனால் ஒருவரைத் தனியாக வாழ்த்தும் வழக்கம் ஏனோ எனக்குள் பழக்கமாகவே இல்லை. அதனாலேயே பிறந்த நாள், திருமண நாள் கொண்டாட்டங்கள் என்று என் வாழ்வில் நான் பெரிதாகக் கொண்டாடிக் கொண்=டதுமில்லை.

ஆனால், இன்று கைபேசி வந்து அதில் வாட்ஸ் அப், ஃபேஸ்புக் என்கிற சமாசாரங்களில் நாம் சிக்கிக்கொண்டிருக்கும் நிலையில் இந்தக் கொண்டாட்டங்களும், வாழ்த்துகளும் ஒரு கட்டாயமாக மெல்ல மாறிவருகிறது. யார் யார் வாழ்த்தினார்கள், யாரெல்லாம் வெறும் லைக் போட்டனர். அலட்சியப்படுத்திய பிரகஸ்பதிகள் யார் என்று கணக்குப் போட்டுப் பார்த்து வாழ்த்தியவர்களுக்காக மகிழாமல்,



# உன்னை இழக்காமல்

வாழ்த்தாமல் விட்டவர்களை நினைத்துக் குமுறாமல் இருக்க பலரால் முடிவதில்லை.

மொத்தத்தில் வாழ்த்துவது, வாழ்த்தப்படுவது என்பது கைபேசியில் ஒரு புனருத்தாரணம் கண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

திருமணமாகி புகுந்த வீட்டுக்கு வரும் ஒரு பெண் தன் தாய்க்கு ஒவ்வொரு மணி நேர நடவடிக்கைகளையும் அப்டேட் செய்கிறாள். இவள் அப்டேட் செய்வதை வைத்து தாயும் பதில் கருத்து கூறுகிறாள்.

இதில் சந்தோஷமான விஷயங்களை நிறைய பகிர்ந்துகொண்டாலும் சில தப்பான புரிதல் கொண்ட விஷயங்களும் பகிரப்பட்டு சந்தோஷ விஷயம் அவ்வளவும் அடிபட்டு அந்தத் தப்பான விஷயம் மட்டும் பெரிதாக வேலை செய்கிறது.

'எல்லாம் ஓகேம்மா. உன் மாப்ள ரொம்பவே ஆசையா இருக்காங்க. மாமனாரும் ஒண்ணும் பிரச்னையா தெரியல. காஃபி போட்டுக் கொடுத்தேன். 'குட்'டுன்னார். ஆனா மாமியார் ஒரு வார்த்தை சொல்லல. என் நாத்தனார் அதுக்குமேல... எப்ப பார், ரூமுக்குள்ள ரூமுக்குள்ள போய்க் கதவ சாத்திக்கறா...! என்று அப்டேட் செய்யப்படும் ஒரு விஷயத்துக்கு மறுபுறத்தில் இருந்துவரும் உடனடி பதில் என்ன தெரியுமா?

''நீ இதையெல்லாம் கண்டுக்காத. உன்ன மதிச்சுப் பேசினா பேசு. ரொம்ப இழுத்துப் போட்டுண்டு வேலை செய்யாதே... அப்புறம் உன்னை சம்பளம் இல்லாத வேலைக்காரி ஆக்கிடுவா...'' - என்று வருகிறது.

# இரு!

அந்த நாளாய் இருந்தால் இப்படிப்பட்ட பகிர்தல்களுக்கு இடமே கிடையாது. பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றால் கடிதங்கள் தான்!

மேற்கண்ட அப்டேட்களுக்கெல்லாம் இடமேயில்லாமல் போய் ஒரு அனுசரித்துப் போகும் வாழ்க்கை முறையாக அது இருந்தது. பிரச்னைகள் தூண்டப்பட்டு பெரிதாகவும் இல்லை.




என் அருமைக் கைபேசி அதை இன்று காலாவதியாக்கி எப்போதும் யாரோடாவது பேசிக்கொண்டேயிருக்கும் ஒரு நோயை உருவாக்கிவிட்டது. இதனால் இன்று செல் இல்லாதவர்கள் செல்லாதவர்கள் என்றாகிவிட்ட நிலை.

ஒரு நாள் என் நண்பர் ஒருவருக்கு போனே வரவில்லை. அவரோ ஒரு ஆளரவமில்லாத தீவில் சிக்கிக் கொண்டுவிட்டது போல் தன்னை உணர்ந்து, தேவையே இல்லாமல் பலருக்கு போன் செய்து பேசி, தன்னைத்தானே தட்டிக்கொடுத்துக் கொண்டார்.

ஒரு திரைப்படத்தில் சூனாபானாவாக வரும் வடிவேலு தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொள்வாரே அப்படி...

இந்த மாற்றத்தை வளர்ச்சியாக மட்டும் பார்க்க என்னால் முடியவில்லை. நம் கட்டுப்பாட்டில் கைபேசி இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. அதன் கட்டுப்பாட்டுக்குள் நாம் போய்ப் பல வருடங்கள் ஆகிவிட்டது போல்தான் தெரிகிறது.

**அ**ந்த நாளில்கூட அதாவது புராண காலத்தில் சமந்தகமணி என்று ஒரு மாலை. இதில் நவரத்தினங்களில் எத்தோடும் சேராத ஒரு ரத்தினம். உள்ளங்கை அளவு கொள்ளும்! ஒரு குட்டிச் சூரியனாய் ஜொலிக்கும் இது ஒரு நாளைக்கு எட்டு யானை எடை அளவு தங்கம் தரும். கூடுதலாக இதை வைத்திருப்பவர்களுக்கு எதிலும் தோல்வி என்பதே கிடையாது. துவாரகையில் வாழ்ந்து வந்த சத்ராஜின் என்பவன் சூரியனிடம் இருந்து வரமாய் இதைப் பெற்றான். ஒரே காரணம்தான்!

துவாரகையில் கிருஷ்ணனுக்குத்தான் பெயரும் புகழும் இருந்தது. அது சத்ராஜித்துக்குப் பிடிக்கவில்லை. கிருஷ்ணனைக் கடந்துதான் பேசப்பட வேண்டும் பார்க்கப்பட வேண்டும் என்பதே அவன் விருப்பம். ஆனால் அந்த மணியை பூஜை புனஸ்காரத்தோடு பவித்ரமாக வைத்துக் கொள்ள வேண்டும். பவித்ரம் தவறினால் அதன் பயன் தலைகீழாகிவிடும்.

இறுதியில் அப்படித்தான் ஆனது. அந்த சமந்தக மணி சத்ராஜித், அவன் தம்பி ப்ரசேன ஜித் என்று சகலரையும் அவர்கள் கொலை செய்யப்படுமளவு செய்துவிட்டது. இந்த சத்ராஜித் யாரோ அல்ல ஸ்ரீ கிருஷ்ணனின் பத்தினியான பாமாவின் தந்தை தான். இது ஸ்ரீகிருஷ்ணனையும் விடவில்லை. சகோதரர் பலராமரே கிருஷ்ணனை திருடன் நீ என்று திட்ட வைத்துவிட்டது. ஒரு கட்டத்தில் இது தொலைந்து போய் ஸ்ரீகிருஷ்ணன் இதைக் கண்டுபிடிக்க ஜேம்ஸ் பாண்டாகவெல்லாம் மாறவேண்டி வந்தது. இறுதியாக கிருஷ்ணன், பாமாவிடம் சொன்னது இதைத்தான்.

'மேலான சக்தி படைத்தவைகளிடம் நாம் மயங்கி விடக் கூடாது. மயங்கினால் நாம் நம்மையே இழந்துவிடுவோம்!'

கைபேசிக்கும் இது பொருந்தும் தானே?

தொடரும்...




மேலான சக்தி படைத்தவைகளிடம் நாம் மயங்கி விடக் கூடாது. மயங்கினால் நாம் நம்மையே இழந்துவிடுவோம்!

# தீர்க்காயுசு!

மகாபாரதம் தொடர்பான ஆய்வு நூல்கள், அறிஞர்களின் கருத்துகள் எல்லாம் என் கண்ணில் பட்டால் மிக ஆழமாய் அதை ஊடுருவுவேன். அப்படி நான் ஊடுருவிய ஒரு பாரதத்தில் நடந்த சம்பவம், பெரியவர்கள் நமக்கு மனமுவந்து அளிக்கும் ஆசிர்வாதங்களுக்கான சக்தியை நான் அணு சுத்தமாய் உணரக் காரணமாக இருந்தது.

''துரியோதனனுக்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் துணைநிற்க ஒரு பெரும் கூட்டமே தயாராக உள்ளது. ஸ்ரீகிருஷ்ணனுக்கு யாரெல்லாம் எதிரிகளோ அவர்களெல்லாம் துரியோதனனுக்கு உதவிடத் தயார் என்கிற மாதிரியான சூழல். கிருஷ்ணன் மட்டும்தான் பாண்டவர்கள் பக்கம்! இருப்பினும் அர்ஜுனன் சொன்னான்: ''கிருஷ்ணா, நீ எங்கள் பக்கம் இருப்பது என்பது இந்த உலகமே எங்கள் பக்கம் இருப்பதற்கு சமம்'' என்று.



கூட்டிக் கழித்தால் யுத்தம் தொடங்குவதற்கு முன்வரை துரியோதனன் தான் மிகவும் பலசாலி. எவருமே தேவையில்லை. அவன் வரையில் பீஷ்மர், துரோணர், விதுரர், அஸ்வத்தாமன் என்கிற நான்குபேர் போதுமானவர்கள்.

பாண்டவர்கள், கௌரவர்கள் 100 பேரைக்கூட வீழ்த்திவிடுவார்கள் - இந்த நால்வரிடம் அவர்களாலும் எதுவும் செய்ய முடியாது. ஆக எப்படிப் பார்த்தாலும் துரியோதனன்தான் ஜெயிக்க முடியும். இதுதான் யதார்த்தம். இதனால்தான் சகுனியும் துரியோதனனிடம் யுத்தம்தான் ஒரே வழி என்று விடாப்பிடியாக இருக்கச் செய்தான்.

துரியோதனனின் இந்த சாதுர்யக் கணக்கு பற்றித் தெரியாதவர்களா பாண்டவர்கள்? இருந்தாலும் அவர்கள் நம்பிக்கை எல்லாம் ஸ்ரீகிருஷ்ணன் நம்மோடு இருக்கிறான். அவன் எதையாவது செய்து நம்மைக் காப்பாற்றிவிடுவான். இதைச் சற்று மாற்றி தர்மத்தைக் காப்பாற்றிவிடுவான் என்றும் கூறலாம்.

ஸ்ரீகிருஷ்ணனின் அவதார நோக்கமும் அதுதானே? அவனா விடுவான்? அவன் அழகாய் ஒரு தந்திரம் புரியத் தொடங்கினான். திரௌபதியை அழைத்துக் கொண்டு சற்றும் எதிர்பாராதபடி பீஷ்மர் இருக்கும் இடம் நோக்கிச் சென்றான். வழியில் திரௌபதியின் வில்கொலுசு மற்றும் மிதியடிகளைக் கழற்றச் சொல்லி தம் வசப்படுத்திக் கொண்டான். சப்தமின்றி காலை நீட்டி அயர்ந்து படுத்திருந்த பீஷ்மரின் கால்கள் அருகில் உள்ள அரை இருட்டில் அவனை நிற்கச் செய்து பீஷ்மரையும் தன் குழலை எடுத்து இசைத்து எழுப்பாமல் எழுப்பினான்.



குழலிசை கேட்டு கண் மலர்ந்த பீஷ்மர், ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து முகம் மலர்ந்தார். கிருஷ்ணன் இதுதான் சாக்கு என்று அரை இருட்டில் நின்றபடி இருந்த திரௌபதியைக் காட்டவும் அவள் மறுநொடியே பீஷ்மரின் திருவடிகளில் தன் சிரசை வைத்து வணங்கத் தொடங்கினாள்.

பீஷ்மரும், அபிமன்யு மனைவி உத்தரைதான் என்று எண்ணியபடி 'தீர்க்க சுமங்கலியாக இருப்பாய் தாயே... எழுந்திரு' என்றார். நிமிர்ந்தபிறகே தெரிந்தது அது திரௌபதி என்று ஸ்ரீகிருஷ்ணனின் தந்திரமும் புரிந்தது.

பெரியவர்கள் வரையில் மனதார ஆசிர்வதித்து விட்டால் ஆசிர்வதித்ததுதான். அதைத் திரும்பப் பெறுவதோ, மாற்றுவதோ எல்லாம் அவர்கள் மேன்

மைக்கு இழுக்கு! இதனாலேயே 'போர்க்களத்தில் என் பாணங்கள் பாண்டவ வீரர்களை பலி கொள்ளும். எந்த நிலையிலும் பாண்டவர்களை அது கொல்லாது. ஏன் என்றால் நான் திரௌபதிக்கு ஆசி கூறிவிட்டேன். அதை மாற்றுவதற்கில்லை' என்று அறிவிக்கும் ஒருநிலைக்கு பீஷ்மர் தள்ளப்பட்டார். துரியோதனனாலும் எதுவும் செய்ய முடியவில்லை.

ஸ்ரீகிருஷ்ணனின் தந்திரம் பீஷ்மரைவிட அவரது ஆசிகளைப் பெரிதாய் நம்பியது என்றால் அது எத்தனை வலிமை மிக்கதாய், நிகரற்றதாய் இருக்க வேண்டும்?

அதனால்தான் பிறந்த நாளோ, திருமண நாளோ, இல்லை ஏதோ ஒரு நல்ல தருணம். அதில் பெரியவர்கள் கால்களில் விழுந்த ஆசிர்வாதங்களை வாங்கிக்கொள்ள நம்மைப் பெரியவர்கள் தூண்டுகின்றனர். இதை என வாழ்வில் நான் கசடற உணர்ந்த ஒரு தருணமும் உண்டு.



நானும் ஸ்ரீகிருஷ்ணன் போல்தான். பிறந்து வளர்ந்தது ஓரிடம். அதன்பின் வாழ்வது ஓரிடம். அவனுக்கு மதுரா - துவாரகா என்றால் எனக்கு சேலம்-மதுரை. மதுரையில் டி.வி.எஸ். சுந்தரம் பாசனர்சில் வேலை கிடைக்கப் போய் பணி நிமித்தம் மதுரைக்காரனாகி விட்டேன். ஒரு ஆவணி அவிட்டம் சமயம் சேலம் சென்று அன்றைய தினத்தின் அனுஷ்டான கடமைகளை முடித்துக்கொண்டு மதுரை புறப்படத் தயாரானேன். என் தந்தையார் என்னிடம், ''சேவிடா... ஆசிர்வாதம் பண்ணணும்'' என்றார். நல்ல நாட்களில் இது ஒரு வழக்கமான சடங்காக இருந்தாலும் அன்று என் தந்தையே அழைத்து சேவிக்கச் சொன்னது என் வரையில் ஓர் அதிசயம். ஏன் என்றால் அவர் அதற்கு முன் அப்படிச் சொன்னதே கிடையாது. அதைவிட அதிசயம் அவரை நான் வணங்கிய சமயம் வெற்றிலை பாக்கில் ஒரு ரூபாய் நாணயம் வைத்துத் தந்தார். ''தீர்க்காயுசோட நன்னா இரு'' என்றார்.

''என்னப்பா இதெல்லாம் புதுசா இருக்கே!'' என்றேன்.

''என்னவோ தோணித்து கொடுத்தேன். பத்ரமாய் வைத்துக்கொள்'' என்றார்.

அந்த ஒரு ரூபாயைக் கிளம்பும் அவசரத்தில் சட்டைப்பையில் அப்படியே போட்டுக்கொண்டு கிளம்பினேன்.

மாலை 5 மணிக்கு மதுரை செல்லும் திருவள்ளுவர் பேருந்து புறப்பட்டது. இரவு 10.30க்குச் சென்றாக வேண்டும். 11 மணிக்கு என் நிறுவனத்துக்குச் செல்ல கடைசி பஸ்! அன்று எனக்கு நைட் ஷிஃப்ட்... இந்நிலையில் தாமதம் ஏற்பட்டால் லீவு போட வேண்டி வரும். என் நிறுவனம் லீவு விஷயத்தில் கண்டிப்பான நிறுவனம். எனவே அந்த பஸ் சரியாக 10.30க்கு மதுரைக்குச் சென்றுவிட வேண்டும் என்கிற பதற்றம் என்னிடம்!

இந்நிலையில் 10.20க்கு சோழவந்தான் ரயில்வே கிராசிங் அருகே பஸ் நிற்க நேரிட்டது. ஒரு கூட்ஸ் ரயில் குறுக்கீடு. நான் பதற்றத்தோடு இறங்கி ரயில் கேட்டின் 'ஸ்டாப்' என்கிற பாகத்தை ஒட்டி நின்றபடி ரயில் வருவதைப் பார்க்கத் தயாரானேன். அப்போது 11 மணி. பஸ்ஸில் சரியாகச் சில்லறை தராவிட்டால் இறக்கிவிட்டு விடும் ஒரு ஆபத்து இருப்பதை உணர்ந்து அப்போதே சட்டை பாக்கெட்டில் சில்லறையை எடுத்துக்கொள்ளத் தயாரானேன்.

வசமாக அப்பா தந்த ஒரு ரூபாய் நாணயம் அகப்பட்டது. எடுத்து கண்முன் வைத்து அதைப் பார்த்த சமயம் அது எதிர்பாராமல் கைநழுவிக் கீழே விழுந்து உருண்டு பக்கத்துப் புளிய மர அடிபாகம் வரை ஓடியது. அப்படி ஓடுவது ஒரு பஸ்ஸின் ஹெட்லைட் வெளிச்சத்தில் நன்கு தெரியவும் செய்தது. உண்மை என்ன தெரியுமா?

அந்த பஸ் பிரேக் பிடிக்காமல் வந்துகொண்டிருக்கிறது. டிரைவர் அதை கேட்டில் மோதி நிறுத்தவே வந்து கொண்டிருந்தார்.

நான் குனிந்து நாணயத்தை எடுத்த நொடி பஸ் கேட் மேல் மோதி ஆங்கில 'எஸ்' எழுத்தைப் போல வளைந்து தண்டவாளம் மேல் நின்றது. அப்போது நான் கோடுபோட்ட சட்டை போட்டிருந்தேன். அதை வைத்து கேட்டை ஒட்டி நின்றிருந்த என் மேல் பஸ் மோதிவிட்டதாகக் கருதி ஒருவர், ''கோடு போட்ட சட்டைக்காரர் அவுட்டாட்டம் இருக்கு'' என்றது என் காதில் விழுந்தது.

நான் நாணயத்தை உற்றுப் பார்த்தேன். 'தீர்க்காயுசோட நன்னா இரு' என்கிற என் அப்பாவின் குரலை அது எதிரொலித்தது.

ஆசிர்வாத சக்தியை இதைவிடவா ஒருவர் உணர்ந்துவிட முடியும்?

**தொடரும்...**

நான் உணர்வுபூர்வமான எழுத்தாளன். இன்று பேச்சாளனும் கூட! என் பேச்சு எழுத்து என்கிற இரண்டுக்குமே இரண்டுவிதமான தளங்கள். எழுத்தில், யதார்த்தம் விலகாத வாழ்க்கைப் பார்வை கொண்ட சமூகப் படைப்புகள் ஒருபுறம் என்றால் படபடப்பிலும் பரவசத்திலும் ஆழ்ந்திடும் மர்மம் சார்ந்த அமானுஷ்யப் படைப்புகள் மறுபுறம்.

பேச்சும் இதே ரசம்தான். அப்பட்டமான ஆன்மிகம் ஒருபுறம். இன்னொரு புறமோ மன நலமும் வளமும் சார்ந்த உளவியல் ரீதியான பேச்சு.

எனக்கே திரும்பிப் பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. பயணிப்பதை உணர்கிறேன். இரண்டு தளங்களிலுமே சொல்லிக்கொள்ளும்படியான வெற்றிகளும் கிடைத்துவருகின்றன.

அமானுஷ்யம் என்பது எல்லோராலும் இருவிதமாகத்தான் உணரப்படுகிறது.

ஒரு சாராரால், சுவையான கற்பனையாகவும், மற்றொரு சாராரால் அபூர்வமான அனுபவமாகவும் கருதப்படுவதால், இரு சாராரின் பார்வைக்கும் இது உள்ளாகி பெரும் வரவேற்பும் கிடைக்கிறது.

வரவேற்பு சரி. மதிக்கப்படுகிறதா என்றால் அது தான் இல்லை. அதனால்தான், அமானுஷ்யப் படைப்புகள் உயரிய விருதுகளுக்காகப் பரிந்துரைக்கப் படுவதேயில்லை. சரித்திரத்தையும் இதோடு சேர்த்து விட்டார்கள்.

ஏன் இப்படி?

அமானுஷ்ய அனுபவங்களுக்கோ இல்லை விஷயங்களுக்கோ ஏன் இலக்கிய அங்கீகாரமில்லை என்று நான் சிந்தித்ததுண்டு. இவ்வகை விஷயங்கள் ஒரு தனிமனித அனுபவமாக மட்டுமே இருப்பதால், அதை அவரால் பிறருக்கு ஏற்படுத்த முடியாததால் அதற்கு ஒரு பொறுமை இல்லாது போய்விட்டது. எக்காலத்திலும் அமானுஷ்ய அனுபவங்களை அனைவரும் அனுபவிக்கும்படி செய்யவும் முடியாது.

எனக்கோ இம்மட்டில் ஏராளமான அனுபவங்கள்.

அதனால் நான் விஞ்ஞானிகளின் கூட்டத்துக்கே தலைவனானாலும் அமானுஷ்யத்தை வெறும் இல்யூஷன் அதாவது அது ஒரு பிரமை (அ) வெறும் நினைப்பு, இல்லை கற்பனை, அதுவுமில்லை ஏதோ ஒன்றாகக் கருதவே முடியாது. எனக்கு அப்படி ஒரு இக்கட்டு உள்ளது. அப்படி என்ன பெரிய உலக மகா அனுபவம் உனக்கு என்று கேட்கலாம்.

பிறப்பால் நான் ஒரு சேலத்துக்காரன். என் இளமைக் காலம் அங்கேதான் கழிந்தது. சேலம் ஒரு மலைசூழ் நகரம். ஒவ்வொரு மலைக்கும் ஒரு கோயிலும், அதன் பின்புலத்தில் ஒரு கதையும் உண்டு. இதில் கஞ்சமலையை ஒட்டி இருக்கும் சித்தர் கோயிலும் ஒன்று! பேச்சுவழக்கில் இதற்கு அமாவாசை மலை என்று பெயர். அமாவாசை நாளில் சேலமே அந்த மலைக் கோயிலுக்குப் போய் உப்பு வாங்கிப் போட்டு சித்தரை வழிபட்டுவிட்டுத் திரும்பும்.

சேலத்துக்கு வெளியே 15 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதால் சைக்கிளில் போய் வருவதில் எங்களுக்குப் பெரிய சந்தோஷமும்கூட. அப்படி



# ஆச்சர்யம்...



ஒருநாள், நான் சென்ற சமயம் சாலையின் ஒரு புறத்தில் இருந்து எதிர்ப்புறம் நோக்கி நல்லபாம்பு ஒன்று கடந்து போய்க் கொண்டிருந்தது.

யதார்த்தமாய் அதைக் கவனித்த உடனே பதற்றம் ஏற்பட்டு நான் சைக்கிளை நிறுத்துவதற்குள், என் சைக்கிள் சக்கரங்கள் அதன் வால்மேல் ஏறி விட்டன. பதைப்போடு சைக்கிளை நிறுத்தி அந்த விடிகின்ற பொழுதில் அந்தப் பாம்பைத் திரும்பிப் பார்த்தேன். அதுவும் திரும்பிப் படம் விரித்து என்னை ஒரு பார்வை பார்த்தது. வாட் ய மூவ்மென்ட்!

புகைப்படம் எடுத்தாற்போல் அதன் படம் விரித்த

# அமானுஷ்யம்...!

பார்வை மனதில் அப்படியே தங்கிவிட்டது- பலருக்கு இப்படி நடந்திருக்கலாம். கிராமப்புறங் களில் இது ஒரு அன்றாட அனுபவமும் கூட...

காலங்கள் உருண்டதில் கல்லூரிக்காலம் வந்தது. நண்பர்களோடு சொல்லிமலைக்குப் போன ஒரு தருணத்தில் கொல்லிமலை அருவியில் குளிக்க ஒரு ஒற்றையடி மலைப்பாதையில் பயணித்தோம்.

கொல்லிமலை எங்கள் வரையில் ஒரு இயற்கை சாம்ராஜ்யம். திரும்பின பக்கமெல்லாம் அன்னாசி, ஏலம், வாழை, பலா என்று தான் கண்ணில் படும். மிகுந்த சித்தர்கள் நடமாட்டமுள்ள ஒரு மலையும் கூட. இதில் அருவிக்குச் செல்வது அன்று ஒரு ஆபத்தான விஷயம். இன்று பாதை போடப்பட்டு மிகச் சுலபமாகிவிட்டது. அப்படிப் போன சமயம், வழியில் ஒரு பிச்சைக்காரர் காலைநீட்டி அமர்ந்திருக்க, ஒரு திருப்பத்தில் அவர் அமர்ந்திருந்தது தெரியாமல் நான் காலை மிதித்துவிட்டேன்.

விருட்டென்று ஒரு பார்வை பார்த்தார். பள்ளி நாளில் சித்தர் கோயில் போனபோது அந்த நல்ல பாம்பு பார்த்த அதே பார்வை! 'சாரி' சொல்லிவிட்டு



நடந்தேன். இதுவும் எல்லோருக்கும் நடப்பதுதானே? ஆனாலும் அந்தப் பார்வை என் மனதில் புகைப்படப் பதிவாய்த் தங்கிவிட்டது.

மேலும், காலம் உருண்டதில் நான் மதுரை வாசியாகிவிட நேர்ந்தது. மதுரைக்குத் தெற்கில் ராஜ பாளையத்துக்கு அருகில் வத்திராயிருப்பு என்னும் ஊரை ஒட்டி மேற்குத் தொடர்ச்சி மலை செல்கிறது. இதன் ஒரு பகுதிதான் சதுரகிரி!

இதற்கு 'பூலோக கைலாசம்' என்று பெயர்! இங்கேயும் சித்தர்கள் நடமாட்டம் மிகுதி.

ஒரு தொலைக்காட்சித் தொடருக்கு லொகேஷன் பார்க்க, தாணிப்பாறை என்ற இடத்தில் இருந்து நடந் தோம்.

தொலைக்காட்சித் தொடரின் கதை என்ன தெரி யுமா? ஒரு சித்தர் கூடுவிட்டுக் கூடுபாய்வார். இங் கும் இருப்பார் - அங்கும் இருப்பார்- எங்கும் இருப் பார். மொத்தத்தில் அவர்கள் விஷயமே ஒரு புதிர். நம்பவும் முடியாது நம்பாமல் இருக்கவும் முடியாது. என் கதைப்படி கதையில் வரும் சித்தர் பாம்பாக மாறு வார். பிச்சைக்காரனாகத் திரிவார், அந்த மலையில் ஒரு கோலை வைத்துக்கொண்டு ஆடு, மாடு மேய்ப்பார்.

கதாநாயகிக்கு மட்டும் அவரை அடை யாளம் தெரியும்.

இதுவே என் கதைப்போக்கு. அதற்கு அப்போது நான் பார்க்க இடத்தைத் தேர்வு செய்தேன். அங்கே ஒருவர் ஆடு மாடும் மேய்த்துக் கொண்டிருந்தார். ஒரு மரத்தடியில் தன் கைவசம் உள்ள கோலை கீழே போட்டிருந்தார். அவரைப் பார்த்த நான் கதைப்படி இவர் அப்படியே இருக்கிறார். இவர் விரும் பினால், இவரையேகூட சித்தராக நடிக்க வைக்கலாம் என்று வேடிக்கையாகச் சொன்ன படி அவர் அருகே சென்றேன்.

அப்போது அவர் கீழே போட்டிருந்த கோலை நான் கவனிக்காமல் மிதிக்க நேர்ந்தது- அதன் நுனியில் அவர் சதங்கை கட்டியிருந்தார். உடனே அதில் சப்தமும் எழும்பியது. உட னேயே அவர், என்னை வெறித்து ஒரு பார்வை பார்த்தார். அதே பாம்புப் பார்வை! வாட் எ மூவ்மெண்ட்? என் மனதில் மீண்டும் புகைப் படப் பதிவு.

அப்போது அவர் என்ன சொன்னார் தெரியுமா?

அதுதான் அமானுஷ்யத்தின் பரவச தரிசனம்.

'முதல்ல வாலை மிதிச்சே, அப்புறம் காலை மிதிச்சே... இப்ப கோலை மிதிக் கறே... மிதிச்சிக்கிட்டே இருக்கியே... பாத்து நட!' என்றார்.

இதை எப்படியாக ஒரு தற்செயலாக என்னால் கருத முடியும்?

**தொடரும்...**

"'தெய்வமே... என் பிள்ளை நல்லா படிக்கனும். என் பெண்ணுக்கு நல்ல வரன் அமையனும். பையனுக்கு நல்ல வேலை கிடைக்கனும். ஆபரேஷன் வெற்றிகரமாய் முடியனும். சொந்த வீடு வாங்கனும்...'- இப்படி கடவுளிடம் எதையும் சொல்லி வேண்டிக் கொள்ளத் தேவையில்லை. இப்படி வேண்டிக் கொள்வதன் மூலம் நாம் குறையோடு இருப்பதாகவும், நம்மை குறைவுடன் அவன் வைத்திருப்பதாகவும் ஒரு அர்த்தம் உருவாகி விடுகிறது' என்கிறார் காஞ்சி பெரியவர்.

நமக்கு குறை இருக்கப் போய்தானே பிரார்த் தனை...? அடுத்து கடவுளிடம் கேட்காமல் வேறு யாரிடம் சொல்லி அழுவது. அதற்காகத் தானே இருக்கிறது அவன் சன்னதி... இது எப்படி தப்பாகும்?

'சுயநலமாய் பிரார்த்திப்பது தவறு. நம்மை ஒரு முழு மனிதனாக ஒரு தாய் தந்தைக்கு பிள்ளையாக படைத்து, நாம் பேச ஒரு மொழி, வசிக்க ஒரு வீடு, பசிக்கு உணவு, பழக அக்கம்பக்கம் என்று காலத்தையும், நம்மை கேட்டுக் கொண்டா அந்த கடவுள்

அழகோடு இருந்த சமயம் திருப்பதி செல்ல நேர்ந்தது.

'அங்கும் முடி இறக்க வேண்டும் - திருப்பதியும் என்று ஆரம்பித்தாள் என் மனைவி. எனக்கென்னவோ அதில் உடன்பாடில்லை. யார் கண்டுபிடித்தது இந்த மொட்டையடித்திடும் பழக்கத்தை? போயும் போயும் தலைமுடியையா காணிக்கையாக கொடுப்பார்கள்? இந்த தலைமுடிக்கு தலையில் உள்ளவரை தான் மதிப்பு. உதிர்ந்துவிட்டால் அது இழிவான குப்பை. பிற குப்பைகள் கூட உரமாகும். இது தெண்டம்! யாரையாவது கோபத்தோடு திட்டநேரும் திருப்பதியில் என் மகளுக்கு இன்னொரு மொட்டை என்று என் மனைவி ஆரம்பிக்கவும்,

# பிரார்த்திப்போம்!

கொடுத்தார். இதை எல்லாம் கொடுக்கத் தெரிந்தவருக்கு எதை எப்போது, நமக்கு தர வேண்டும் என்று தெரியாதா?' என்று அழுத்தமாக கேட்கிறார் காஞ்சிப் பெரியவர்.

இருந்தும் நாம் அதுவேண்டும் இது வேண்டும் என்று கேட்டு வேண்டிக் கொள்வதை கடவுள் தவறாக எடுத்துக் கொள்வ தில்லை. நம்முடைய அந்த அறியாமையை அவன் சகித்துக் கொண்டு நம் பிரார்த்தனைகளை அவன் ஈடேற்றித்தரவே அவன் செய்கிறான்.

நம் பிரார்த்தனைகள் ஈடேறும்போது நமக்கும் அவன் பால் பக்தியும் அன்பும் அதிகமாகிறது - ஆக பிரார்த்த னைகள் கடவுளுடனான நெருக்கத்தை அதிகரிக்கவே செய்கின்றன. சில நேரங்களில் நம் பிரார்த்தனைகள் நிறைவேறாதபோது மனம் வெறுத்துப் போய் விரக்தியும் அடைகிறது.

சமயங்களில் இந்த சராசரி பக்தியைவிட பக்தியே இல்லாமல் இருப்பது மேலானதாகவும் ஆகிவிடுகிறது.

ஒரு பிரார்த்தனை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணம்.

என் மூத்தமகள் பிறந்த சமயம். எங்கள் குலதெய்வ்மான கரூர் அருகிலுள்ள தாந்தோன்றி மலைக்கு சென்று ஸ்ரீ கல்யாண வேங்கட ரமண பெருமாளுக்கு முடி காணிக்கை செலுத்திவிட்டு வந்தேன். அதன்பின் அவள் கருகரு கூந்தலோடு கண்படும்



'அவசியமில்லை... விட்டுத்தள்ளு... இந்த தலைமுடி தந்து பெருமாளுக்கும் எதுவும் ஆகப் போவதில்லை இதை பெரிது படுத்தாதே' என்றேன்.

எங்களுக்குள் வாக்குவாதம் வலுத்தது திடீரென்று என் மகளைக் காணவில்லை! கையைப் பிடித்துக் கொண்டு என்னிடமும் என் அப்பா என் தம்பி என் மச்சினன் என்று மாறி மாறி நடந்து வந்தவள் எப்படியோ மிஸ்ஸாகி விட்டாள்.

பதைத்துபோய் எவ்வளவு போக முடியுமோ அவ்வளவு தேடினோம். கிடைக்கவில்லை.

'எல்லாம் உங்களால்தான். தலைமுடி தர யோசித்ததன் எதிரொலி இது. இங்கே பேச்சு மாறினால் பெருமாள் சும்மாவிட மாட்டார்' என்று ஒரே பிலாக்கணம்.

எனக்குள்ளேயும் ஒரு பதட்டம் தோன்றி என் மகளுக்கு மட்டுமல்ல... அவள் நல்லவிதமாய் கிடைத்து விட்டால் நானும் மொட்டை போட்டுக் கொள்கிறேன் என்னுமளவு ஆகிவிட்டது. அடுத்த சில நிமிடங்களில் என் மகளுடன் வந்தார் என் அப்பா. இதை வழியில் தடுமாறியவனை போலீசில் யாரோ ஒப்படைத்திட புகார் கொடுக்கப் போன என் அப்பா அதற்கு அவசியமின்றி அழைத்து வந்தார்.

நீ தேடி
கண்டடையவே
தொலைக்காமல்
வைத்திருக்கிறேன்
இன்னும்
என்னை.



ஆனாலும் அந்த ஒரு அரைமணி நேர அவஸ்தையை வார்த்தைகளில் விவரித்துவிட முடியாது. அதன்பின் தடையின்றி முடிகொடுக்க முனைந்தபோது நான் மட்டுமல்ல என் அப்பா, என் தம்பி, என் மைத்துனன் என்று எல்லோரும் அமர்ந்தனர். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. என்னைப் போலவே அவ்வளவு பேரும் வேண்டிக் கொண்டுள்ளன.

ஒரு மொட்டைக்கு யோசிக்க போய் ஒன்பது மொட்டைகள்! இது ஒரு தற்செயல்விளைவா. இல்லை வேங்கடவன் திருவிளையாடலா என்பதெல்லாம் அவரவர் கோணம் சார்ந்தது. ஆனாலும் தலைமுடி காணிக்கை எதனால் என்றும் அதன் நுட்பம் எப்படிப்பட்டது என்பதும் காலத்தால் குறிப்பாக காஞ்சிப் பெரியவரால் தெரிய வந்தது.



உண்மையில் தலைமுடியும், தர்பைப்புல்லும் ஒன்று இந்த இரண்டிலும் சிவா-விஷ்ணு-பிரம்மா' எனும் மூவரும் உள்ளனர். அதனாலேயே கேசம் என்றும் பெயர். 'கா+ஈச+அம்'தான் கேசம் என்றானது. காத்திடும் பெருமாளும், அழிக்க வேண்டியதை அழித்திடும் ஈசனும், படைத்திடும் பிரம்மாவும் தலைமுடியில் வாசம் செய்கின்றனர்.

பின்னாளில் இந்தப் பிள்ளை உன்னை நினைத்து வணங்குமோ வணங்காதோ அதற்கும் சேர்த்து இப்போதே இதன் முடியை உனக்கு காணிக்கையாக்கி விடுகிறோம். நாளை நாத்திகம் பேசித் திரிந்தாலும் இந்த காணிக்கையை உத்தேசித்து கருணை செய்ய தவறிவிடாதே'-என்றே நமக்கு நாம் யார் என்று தெரியும் முன்பே நம் பெற்றோர் இந்த முடி காணிக்கையை அளித்து விடுகின்றனராம். இந்தக் கருத்துக்கள் எல்லாம் தெரியவரவும் எனக்கு நம் முன்னோர்களை எண்ணி பெருமிதம் ஏற்பட்டது சரிதானே?

பிரார்த்தனைகள்
கடவுளுடனான
நெருக்கத்தை
அதிகரிக்கவே
செய்கின்றன.

தொடரும்

ஷண்மத ஸ்தாபகரான ஆதி சங்கரரின் இசைமையோடு கூடிய இறைமையையும், தீட்சதரின் கீர்த்தனைகளின் இசைமையோடு கூடிய இறைமையையும் நுட்பமாக ஆராய்ந்தும் அலசியும் ஒப்பிட்டும் உற்று நோக்கியும் விவாதங்கள் நிகழ்த்தி நடத்தப்பட்ட ஒரு நிகழ்வு சமீபத்தில் நடந்தேறியது.



மதுரை கம்பன் கழகத்தின் புரவலர் சீதாராமன் என்பவரின் துணைவியான பத்மலட்சுமி சீதாராமன் இசைத்துறையில் முனைவர் பட்டம் பெறுவதற்கான 'வைவா' எனும் நேர்காணல் நிகழ்வுதான் அது.

இதில் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. மாணவி என்றவுடன் வாலிபப் பருவம்தான் எல்லோருக்குள்ளும் மனத்தில் எழும்பும். ஆனால், இங்கே பத்மலட்சுமி எனும் இந்த மாணவிக்கு வயது 52 என்றால் ஆச்சரியமாக இருக்கும்.

கல்விக்கு வயது ஒரு தடை இல்லை என்று உணர்த்திய திருமதி பத்மலட்சுமியை நான் இன்றைய பெண் சமூகத்தின் ஒரு முன்னோடியாகத்தான் பார்த்தேன். ஏற்கெனவே இசைத்துறையில் மாஸ்டர் பட்டம் பெற்றிருக்கும் நிலையில், சமஸ்க்ருதத்திலும் பாண்டித்யம் பெற்று விளங்கும் பத்மலட்சுமிக்கான இந்த வைவா தேர்வு என்னைச் சங்க காலத்துக்கே அழைத்துச் சென்றுவிட்டது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் திருவள்ளுவருக்கே அவ்வளவு சுலபத்தில் அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதற்கு அவ்வைப்பாட்டியின் ஒரு பெரும் தன்முனைப்பு தேவைப்பட்டது. நல்லவேளையாக அன்று சங்கப்பலகை இருந்தது. அது திருக்குறளைத் திவ்ய மதுரமாகக் கருதி அங்கீகரித்தது.

அந்தச் சங்கப்பலகை இருப்பதாகச் சொல்லப்படும் பொற்றாமரைக் குளக்கரையில் நான் அனேக மணி நேரங்களைச் செலவழித்திருக்கிறேன். மீனாட்சியம்மை ஆலயத்துக்குச் செல்லும்போதெல்லாம் நான் என்னை மறந்து போவது இதன் படித்துறை கற்கள் மேல் அமரும்போதுதான்.

நக்கீரனாரும், எம்பெருமானும் முட்டி மோதிக் கொண்டதுமுதல், பெரும் தலைப்பாகை தரித்த புலவர் பெருமக்கள் குழுமி நின்றதுவரை அந்தக் குளத்தங்கரைப் படிக்கற்கள் மேல் ஏராளமான தடயங்கள்... அவை எண்ணிப் பார்ப்பதும் அந்த நாளுக்கேபோய்ச் சஞ்சாரம் செய்வதும் என்னை இனிமைக்குள்ளாக்கும் நேரங்களாகும்.

ஒருமுறை என் மனைவி கருவுற்றிருந்த சமயத்தில் அந்தக் குளத்தங்கரையில் இருவருமாய் அமர்ந்திருந்தோம். ஒரு முதிர்ந்த சுமங்கலிப் பெண் எங்களருகில் வந்து அமர்ந்தாள். கர்ப்பிணியான என் மனைவியைச் சில நிமிடங்களிலேயே நெருங்கிவிட்டாள்.

'உனக்குக் குறிப்பிட்ட நாளுக்கு முன்னாலேயே பிரசவம் ஆயிடும். கவலைப்படாதே சுகப் பிரசவம்தான்!' என்று கர்ப்ப வயிற்றின் மேல்



பத்மலட்சுமி

விபூதி எல்லாம் பூசி விட்டாள். எனக்கும் அந்த பெண்மணியின் பாசமும் வாஞ்சையும் மிகப் பிடித்துப் போனது.

''அம்மா என்ன பண்றீங்க?'' என்று கேட்டேன்.

''சதா இந்தக் கிளிக்காரிய நினைக்கறதுதான் என் வேலை'' என்றாள். மீனாட்சியை கிளிக்காரி என்று விளித்து அந்தப் பெண்மணி பேசியது எனக்குக் கவிதையாக இனித்தது.

''நான் அவ முகத்தைக்கூட அவ்வளவு பாக்க மாட்டேன். இங்க அவளை நாம பாக்கவும் தேவையே இல்லை. மீன் மாதிரி இரவில்ல பகலில்லன்னு நம்பள அவ பாத்துகிட்டேல்ல இருக்கா? அதனால நான் நீ என்ன பாத்துக்கோ, நான் உன் கிளிகிட்ட பேசிக்கிறேன்னு சொல்லி அதாண்டதான் பேசுவேன்'' - என்று வித்தியாசமாக பேசிய அந்தப் பெண்மணியை ஆச்சர்யமாகப் பார்த்தேன். கிளி யிடம் பேச என்ன இருக்க முடியும்? - இது என்னுள் ஓடிய கேள்வி.

'அந்தப் பெண்மணிக்கும் அது தெரிந்துவிட்டது. ''கிளின்னா அது இந்த ஊரைச் சுத்தற கிளி இல்லை. அது வேதக்கிளி. அது அந்த அங்கச்சி காதுல வேதத்தையே பாட்டா படிச்சிக்கிட்டே இருக்குது. நம்ப மனசு இங்க நல்லா ஒடுங்கினா நமக்கும் அது கேட்கும். ஆனா அது ஒடுங்கறது என்ன லேசப்பட்ட விஷயமா? ஆனாலும் நான் விட மாட்டேன். ஒடுக்கவேன்... அப்ப அது மீனாட்சிகிட்ட பேசறது எனக்கும் கேட்கும். அது பேசறதுன்னு சொன்னா தப்பு. பாடுதுன்னு சொல்லணும். சமயத்துல நமக்கான மந்த்ரோபதேசமா அது இருந்துடும். கப்புன்னுப் பிடிச்சிக்கணும் - விட்றக்கூடாது அவ்வளவுதான்... நமக்கு விடிவு காலம் பொறந்துடிச்சின்னு அர்த்தம்.''

- என்று அந்தப் பெண்மணி அன்று பேசிய பேச்சு 27 வருடங்கள் கடந்த நிலையில் இன்றும் அப்படியே என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

உச்சபட்சமாய் அந்தப் பெண்மணி சொன்னது என்ன தெரியுமா?

''நீங்கள்லாம் கஷாயம் கட்டிகிட்டு, தாடி வளர்த்துகிட்டுச் சன்யாசியாயிடலாம். எங்கள மாதிரி கர்ப்பம் கொண்ட பெண்களுக்குத்தான் அதெல்லாம் கிடையாதே? இருந்தாலும் அது எல்லாத்துக்கு ஈடு இவளோட குங்குமம். இந்த மண்ணுல வாழ பொம்பளங்க நெத்தியில அது இருந்தா போதும். அவங்கள்லாமும் மீனாட்சிதான். அப்படிப் பாத்தா நானும் ஒரு மீனாட்சி. நீ யாரு, என்ன பண்றேன்னு கேட்டியே... இதான் பதில் - ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்கோ. இந்த மண்ணுல பொறக்கற பொம்பளகளுக்கு வயசாக ஆகத்தான் மதிப்பு'' - என்று அன்று அந்தப் பெண்மணி சொன்னது பத்மலட்சுமி முனைவர் பட்டம் பெற விழைந்த அந்தத் தருணத்தில் என் காதுகளில் ஒலித்தது. அது எத்தனை உண்மை என்றும் தோன்றியது.

அது மட்டுமில்ல... அன்றைய நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய சுவாமிஜி சொன்ன விஷயமும் ஆனந்தம்.

''மீனாட்சி கையில் உள்ள கிளி வேறு வேதம் வேறு இல்லை. வேதமே கிளி வடிவில் அவளோடு அதை பாட்டாய் பாடியபடி உள்ளது. நம் மனம் நன்கு ஒடுங்கி முழுமையாக மனோநாசம் ஏற்பட்டுவிட்ட நிலையில் ஒரு அம்பாள் உபாசகன் கேட்பது கிளியின் இந்த அகவல் சப்தத்தைத்தான்!''- என்றார்.

திரும்பவும் எனக்குள் குளத்தங்கரைப் பெண்மணியின் குரல்தான் ஒலித்தது. போகிற போக்கில் அன்றே சொல்லிவிட்டாளே? யார் அவள்... அவள் தன் வாயால் சொன்னதுபோல அவளும் மீனாட்சியோ... இல்லை மீனாட்சிதான். அன்று அப்படி வந்து என் மனைவியின் கர்ப்பவயிற்றில் விபூதியை தடவி விட்டாளா? தெரியவில்லை. ஆங்... சொல்ல மறந்து விட்டேனே... அதன்பின் என் மனைவி ஈன்றதும் ஒரு பெண் குழந்தையைத்தான். இன்னொரு மீனாட்சி!

(தொடரும்)



# படித்துறைப் பாடம்!

எனது காசி யாத்திரை அனுபவம் சற்று விசித்திர மானதாகும். முதல் முதலாக காசிக்குப் போனது 2001ல் என்பதாக ஞாபகம். நண்பர்களோடு ரயில் பயணமாக அது அமைந்திருந்தது.

காகம் பறக்காது, பூ மணக்காது, மாடு முட்டாது, பிணங்கள் ஆற்றில் தெப்பம் போல் செல்லும்... காசி விசுவநாதரைத் தொட்டு வணங்கி பூஜிக்கலாம்... அந்த ஊரின் காவல் தெய்வம் கால பைரவர்... இப்படி நான் கேள்விப்பட்ட விஷயங்களையெல்லாம் வைத்து இயல்பிலேயே கற்பனையில் கோட்டை கட்டி என் மனதிலும் காசிக்கு ஒரு பிரம்மாண்ட வடிவம் கொடுத்திருந்தேன்.

காசியின் பாதிப்பில் நான் ஒன்றிரண்டு நாவல் களும் எழுதியுள்ளேன். அதில் 'நீரெல்லாம் கங்கை, நிலமெல்லாம் காசி' எனும் குறுநாவல் 'அமுதசுரபி' யில் பரிசு பெற்றது.

'பொன்மகள் வந்தாள்' எனும் தொடரில் 350 ஆண்டுகளுக்கு முன்பு காசி யாத்திரை புரிபவர்கள் எப்படியெல்லாம் தயாராகி யாத்திரை மேற்கொள் கிறார்கள் என்றும் எழுதியிருந்தேன். மிக ஆய்வுபூர்வ மான நாவல் அது.

காசி ரயில் நிலையத்தில் இறங்கத் தொடங்கும் போதே என் கற்பனைகள் சிதற ஆரம்பித்தன. பல வருடச் சுவர் சுண்ணாம்பு போல உதிரவும் ஆரம்பித் தது. பிளாட்பாரம் முழுக்கப் பயணிகளுக்குச் சமமாக யாசகர்கள். அவர்கள் தின்று துப்பியவைகள்... ரயில்வே டிராக்கில் பிளாஸ்டிக் பாட்டில்கள், கப்பு கள், மனிதக் கழிவுகள்...

தமிழர்கள் அதிகம் வாழும் 'அனுமன் காட்' எனும் பகுதிக்கு ஒரு ஆட்டோவில் பேரம் பேசி ஏறி அமர்ந்தோம். அப்போதே 300 ரூபாய் கேட்டு இறுதியாக 120 ரூபாய்க்கு வந்தார். ஹிந்தி தெரிந்த நண்பர் ஒருவர் இருந்தது மிக வசதியாக இருந்தது.

'அனுமன் காட்' போய்ச் சேர்ந்தபோது நம் மைலாப்பூருக்குள் நுழைவதுபோல் இருந்தது. திரும் பின பக்கமெல்லாம் தமிழர்கள், தமிழ்ப்பேச்சு, சுவரில் தமிழ் போஸ்டர்கள் என்று அந்தப் பகுதி மனதுக்கு மிக நெருக்கமாகிவிட்டது.

அங்குள்ள சங்கரி மடம், செட்டியார் கடைக்கெல் லாம் போய்விட்டு கங்கையில் குளிக்கச் சென்றபோது நான் கதிகலங்கிப் போனேன். காசியின் சாக்கடை ஒரு குட்டிக்கூவமாய் ஓடிவந்து அனுமன் காட் அருகே கங்கையில்தான் கலந்துகொண்டிருந்தது. அதேசமயம் கங்கையில் சுமாரான நீரோட்டம்.

நொப்பும் நுரையுமாய் பெருக்கெடுத்து ஓடிவரு வாள். மூழ்கின நொடியில் 'புண்ணியர்களாகப் போகி றோம்' என்கிற எண்ணத்தோடு இருந்த எனக்கு கங்கையில் மூழ்கவே நெருடலாக இருந்தது.

சிவனின் தலையில் தோன்றி, விஷ்ணுவின் பாதக் கமலங்களில் விழுந்து பாவங்களையெல்லாம் அடித் துச் செல்லவென்றே ஓடிவரும் உலகின் ஒப்புயர்வற்ற ஒரு நதியை அங்கே நாராசமாகப் பார்த்தபோது கண் ணிரண்டும் அரித்தது. அதன்பின் விலகிப்போய் பக்கத்துப் படித்துறையில்தான் குளித்தேன். பிறகு படகில் ஒரு வட்டச்சுற்று.

மொத்தப் படித்துறைகளையும் காட்டியபடி பட கோட்டி ஒரு சுற்று சுற்றிவந்தார். அதில் ஹரிச்சந்திரா

# காசி ஒரு கண்ணாடி!



காட்டில் பிணங்களைப் போட்டுப் பிரித்துக் கொண்டிருந்தனர். படித்துறையின் படிமேல் விறகுகள் எரு மூட்டைகள் குவிந்திருக்க பிணங்கள் வரிசைகட்டி நின்றபடி இருந்தன.

காசியில் செத்து கங்கையோடு கலந்தால் பாஸ்போர்ட், விசா என்று எதுவுமின்றி டைரக்ட் சொர்க்கம் என்கிற நம்பிக்கை; அங்கே ஒரு ஆற்றை குரூரப் படுத்துவதை என்னால் ஏற்க முடியவில்லை.

ஊருக்கு ஆயிரம் பேர் இரண்டாயிரம் பேர் என்று வாழ்ந்த காலத்தில் அந்த நம்பிக்கை பொருத்தமானதாய் இருந்திருக்கலாம். அன்று ஒரு நாளைக்கு ஒரு பிணம் வந்தாலே அதிகம். இன்று கோடிகளில் ஜனங்கள் பெருகிவிட்ட நிலையில் அந்த நம்பிக்கையை யோசிக்காமல் தடை செய்யவேண்டும் என்றே தோன்றியது.

**சந்தைக்கடை சத்தமாகத்தான் இருக்கும். பூ மார்க்கெட் அதற்குரிய வாசத்தோடுதான் இருக்கும். காசியும் தன்னை அழுக்காக்கிக்கொண்டு மனித வாழ்வை மறைமுகமாக அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது.**



கரை முழுக்க பிராமண பண்டாக்கள். பாவிகளாய் தங்களைக் கருதிக் கொண்டும், பித்ருக்களுக்கு முக்தி கிடைக்கவும் வருகின்றவர்களிடம் முடிந்தவரை கறந்துவிடுகின்றனர். பிறர் பாவம் போக்கி தங்களைப் பாவிகளாக்கிக் கொள்ளும் இம்மனிதர்கள் தங்கள் பாவங்களை அங்கிருந்து போகும் சமயம் கங்கையில் மூழ்கி விட்டுவிடுகின்றனரோ, என்னவோ?

முதலில் விநாயக தரிசனம் என்று ஒரு சன்னிதி குடியிருக்கும் ஒரு வீட்டுக்குள் தரிசிக்க அழைத்துச் சென்றார் ஒருவர். அங்கு அவ்வளவு பிள்ளையார்களையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்து ஆச்சர்யப்பட்டு கேட்ட பிறகுதான் தெரிந்தது சன்னிதிதான் வீடாகிவிட்டிருக்கிறது என்று.

விஸ்வநாதர் ஆலயத்துக்குப் போனால் பக்தர்களுக்குச் சமமாகப் பாதுகாப்புப் படை போலீசார் குவிந்திருந்தனர். விஸ்வநாதர் கோவில் நந்தி, எதிரில் ஆக்கிரமிப்பில் சிக்கிக்கொண்டு இரும்புக்குழாய் வேலிக்கு அப்பால் காட்சி தருகிறார். என்னையும் மீறிக் கொண்டு நான் படித்த வரலாறும் கஜினி முகம்மது படை எடுப்பும் நினைவுக்கு வந்தன.

உள்ளே விஸ்வநாதரைத் தொட்டு வணங்க அருகில் அமர்ந்திருந்த பண்டாவிடம் ஒரு ஐம்பது ரூபாயை அழவேண்டியிருந்தது. பணம் போனாலும் பல்லாயிரம் கோடி பேர் இடையறாது தொட்டுவரும் சிவனார் சிரசை நானும் தீண்டினேன். அந்தப் பரவசம் என்னை நெருடல்களை எல்லாம் மீறிக்கொண்டு நெகிழவைத்தது. அங்கிருந்து கால பைரவர் கோயிலுக்கும் விசாலாட்சி அம்மன் கோயிலுக்கும் போனோம். நானும் போனேன். அவ்வளவுதான்.

திரும்பும் சமயம் ரயில் பெட்டிக்குள் எனக்குள் அலைமோதல். இனி எது குறித்தும் ஒரு முன் கற்பனையே கூடாது என்று. ரயில் பெட்டியில் என்னோடு ஒரு சாதுவும் அழுக்குக் காசியாகி, பாவம் போக்கும் காசியே பாவிகளின் காசியாகத் திகழ்வதுபோல் தோன்றுவதைக் குறிப்பிட்டேன்.

''மாற்றம்தானே வாழ்க்கை. மாறுவதுதானே தம்பி காலம்...'' என்று ஆரம்பித்தார்.

''சந்தைக்கடை சத்தமாகத்தான் இருக்கும். பூ மார்க்கெட் அதற்குரிய வாசத்தோடுதான் இருக்கும். காசியும் அதற்குண்டானபடிதான் இருக்கிறது. அது தன்னை அழுக்காக்கிக்கொண்டு மனித வாழ்வை மறைமுகமாக அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது.

காலம் காலமாக அது அப்படித்தான் இருக்கிறது. கலியுகம் என்பதால் கூடுதலாகவே இருக்கும். அது பாரத தேசத்தையே ஒரு மாதிரி சமநிலைப்படுத்தி வருகிறது. அப்படி ஒரு விஷயம் இருப்பதால்தான் பல மொழி, பல கலாசாரத்துக்கு இடையிலும் நாம் ஓரளவு ஒற்றுமையாக இருக்கிறோம். ஒரு மொழி ஒரு எழுத்து இருந்தும் உருப்பட முடியாமல் குண்டு வெடிப்புகளோடும் சதா பூகம்பத்தோடும் உள்ள நாடுகளைப் பார்த்தால்தான் நான் சொல்வது புரியும்''என்றார்.

''எனக்குப் புரியாமல் இல்லை. இன்றுள்ள அறிவியல் வளர்ச்சிக்கு நடுவில் இன்னமும் தூய்மையாக, நேர்மையாக இருக்க முடியுமே'' என்றேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா?

''நீங்கள் சொல்வதுபோல தலைநகரம் முதலில் திருந்தட்டும். காசி தானாகத் திருந்திவிடும். காசி எல்லாவிதத்திலும் ஒரு கண்ணாடி. இருப்பதைத்தான் பிரதிபலிக்கும்'' என்றார். நான் கப்சிப்!

**(தொடரும்)**

எனக்கு ஜோதிடக் கலையின் மீது மிகுந்த ஈடுபாடு உண்டு. வாஸ்தவத்தில் நான் இதை ஒரு மூடத்தனமாகவும், பொய்யாகவும் கருதிய நாட்களும் உண்டு. அதற்குக் காரணம் ஜோதிடமல்ல... நான் அப்போது சந்தித்த ஜோதிடர்கள். ஒரு சமயம், கோவையில் என் வாசகர் ஒருவர், ஒரு ஜோதிடரை அறிமுகப்படுத்தினார்.



அவர் என் பிறந்த தேதி, நேரத்தைக் கேட்டு, ஜாதகத்தைக் கணித்தார். 75 சதவிகிதம் அவர் சொன்னது சரியாகவே இருந்தது. நான் ஆச்சர்யப்பட்டுப் போனேன்.

எதிர்காலம் பற்றிக் கேட்கவும் ''இந்த தேதியில் இன்னது நடக்கும் என்றெல்லாம் கூற மாட்டேன் - ஆனால் பொதுவாக எப்படி இருப்பீர்கள் என்று கூறுவேன்'' என்றார்.

# கைகாட்டி மரம்!

பிறகு எங்களுக்குள் ஒரு விவாதம் தொடங்கிற்று.

''உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையா?''

''இல்லை.''

''அவர் படைத்த கோள்களை மட்டும் நம்புகிறீர்களே?''

''கோள்களை யார் படைத்திருந்தால் என்ன. அவையே நம்மை வழிநடத்துகின்றன. எனவே அது மட்டுமே உண்மை.''

''கடவுளை நம்பாத நீங்கள் பரிகாரங்களை எதை வைத்துக் கூறுவீர்கள்?''

''பரிகாரமெல்லாம் பொய். விதிப்படி நடக்க வேண்டியது நடந்தே தீரும். இதுவரை அப்படித்தான் எல்லார் வாழ்வும் உள்ளது. இனியும் அதுவே உண்மை.''

''அப்படியானால் விதியை மதியால் வெல்ல முடியாதா?''

''எனக்குத் தெரிந்து யாரும் வென்றதேயில்லையே?''

''அப்படியானால் நம் வாழ்வு ஒரு மாற்ற முடியாத ஒன்றா?''

''அதில் சந்தேகமே படாதீர்கள். ஒவ்வொருவர் வாழ்வும் ஒரு அச்சடிக்கப்பட்ட புத்தகம். அதன் ஒவ்வொரு பக்கங்களும் ஒரு நாள். அதில் என்ன உள்ளதோ அதன்படிதான் அவர் வாழ்வும் இருக்கும்.''

''பரிகாரம் செய்து பலன் கிடைத்து வாழ்கிறவர்களும் உள்ளனரே?''

''அவர்கள் பரிகாரம் செய்யாவிட்டாலும் பலன் கிடைத்திருக்கும். இல்லாவிட்டால் பரிகாரம் என்ற பேரில் அவர் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்பது விதியில் இருக்கும்.

''நீங்கள் சொல்கிறபடி பார்த்தால் எது நடந்தாலும் விதிப்படி நடப்பதாக நாம் கருத வேண்டும். ஒரு கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமூக விரோத செயல்களை எதிர்த்துப் போராடுகிறோம். போராடுவதால்தான் அது கட்டுக்குள் இருப்பதாகவும் நாம் கருதுகிறோம். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்று இறுதியாக ஒரு கேள்வி கேட்டேன்.

''நீங்கள் எப்படிக் கேட்டாலும் என் பதில் ஒன்றுதான். என் போன்ற ஜோதிடர்கள் வரும் கால பக்கங்களைப் படித்து சற்று முன்னதாகச் சொல்கிறோம், அவ்வளவுதான். அப்படியே, சிலர் அந்தப் பக்கங்களை ஓரளவு சரியாகப் படிக்கிறார்கள். சிலரால் முடிவதில்லை. அதனால்தான் ஜோதிடம் மெய் - ஜோதிடன் பொய் எனும் நிலை உருவாகி வருகிறது'' என்று முடித்தார்.

இது நடந்து 15 ஆண்டுகளாகிவிட்டது! அன்று அவர் சொன்னதை என்னாலும் பெரிதாக மறுக்க முடியவில்லை. விதி வலியது என்பதாலும், அது மாற முடியாதது என்பதாலும் தான் அவருக்கு எந்த நிலையிலும் கடவுள் தேவைப்படவில்லை. ''கடவுளால் ஒரு பிரயோஜனமுமில்லை. அவர் ஒரு அருமையான கற்பனை. அதனால்தான் அவரை நூறு சதவிகிதம் நம்பியவர்கள்கூட நோயின்றியோ, நீடித்தோ, முழுமையான சந்தோஷத்தோடு வாழவில்லை. கடவுளை மறுத்த நாத்திகன்கூட நூறு வயதுவரை

வாழ்கிறான். கிட்டத்தட்ட என் ஜாதகம் பார்த்து சொன்னபடிதான் என் நாட்களும் சென்றன. அதில் சில விஷயங்கள் மாறுபட்டும் நடந்தன.

மொத்தத்தில் ஜோதிடம் ஒரு அச்சடிக்கப்பட்ட புத்தகம் எனும் அவர் கருத்தை என்னாலும் மறுக்க முடியவில்லை.

இந்த நிலையில்தான் மகா பெரியவரின் ஆட்கொள்ளுதல் காரணமாக நான் அவரை, கசடற அறியும் ஒரு நிலை என் வாழ்வில் உருவானது. அதன் காரணமாய் பெரியவர் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம் மேற்கண்ட என் கருத்தைத் தவிடுபொடியாக்கி விட்டது. எனக்குள்ளேயே பெரும் நம்பிக்கையும்



மகிழ்ச்சியும் பீறிடத் தொடங்கியது.

அந்தச் சம்பவம் அத்தனை மகத்தானது.

கல்கத்தாவில் ஒரு சேட்ஜி! பரம பக்தர். நல்ல காரியங்களுக்கு அள்ளித் தரும் வள்ளல். ஊரிலும் அவருக்கு மிக நல்ல பெயர். அந்த மகானுபாவருக்கு விதி வசத்தால் ஒரு கொடிய வியாதி வந்து வாய் வழியாக எதையும் உட்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படி ஒரு நிலையில், மகாப் பெரியவரைப் பற்றி கேள்விப்பட்டு, அவரிடம் தஞ்சம் புகுந்தார். அதற்கு, உபன்யாசம் புரியும் ஒரு பௌராணிகர் பெரும் காரணமாவார்.

நம் புராணத்தில் ராமாயண, மகாபாரதம் கடந்து 18 புராணங்கள் என்று ஒரு வரிசை உள்ளது. இவை மனிதன் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்பதை கதை வடிவில் கூறுகின்றன. இந்த 18 புராணங்களை அந்த சேட்ஜி நூல் வடிவில் துளியும் பிழையின்றி அச்சிட்டு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள வேத வித்தகர்களுக்கும் சான்றோர்களுக்கும் வழங்க வேண்டும். அப்படிச் செய்தால் இவர் கர்மம் தீர்ந்து நன்மை விளையலாம்'' என்றார்.

சேட்ஜி தயங்கவில்லை. வேதம் படித்தவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து அதைப் பல வருட கால அளவில் செய்து முடித்துவிட்டார். நம்புங்கள்....18வது புராணத்தை வெளியிடும் நாளுக்கு முதல் நாளே அவர் கருமம் தீர்ந்து வாயாலே தாகம் எடுக்கப் பெற்று முதலில் தண்ணீர் குடித்தார். பிறகு உணவே உண்ணத் தொடங்கினார். மருத்துவர்கள் பிரமித்தார்கள். அந்த சேட்ஜி காஞ்சிபுரம் வந்து என் கண்கண்ட தெய்வம் நீங்களே என்று காலில் விழுந்து கதறினார்.

பெரியவர் அப்போது என்ன சொன்னார் தெரியுமா? ''நான் ஒரு கைகாட்டி மரம். அவ்வளவுதான்! உன் கர்மம் தீர நம்பிக்கையோடு நீ அதைச் செய்ததும் அந்த 18 புராணங்களுக்குள் இருக்கும் ரிஷிகளும், முனிவர்களுமே காரணம்'' என்றார்.

எத்தனை பெரிய மனது பெரியவருக்கு...!

இந்தச் சம்பவம் எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் நிச்சயம் நம்பிக்கை தரும்.

விதி வலியதுதான். மாற்ற முடியாததுதான். பெரியவர்போல குருநாதர்கள் துணை கிடைத்துவிட்டால் அதுவே தன்னை மாற்றிக்கொண்டுவிடுவதாக இப்போது நான் நம்புகிறேன். **(தொடரும்)**

''சார், நிறைய அமானுஷ்யமாக எழுதுகிறீர்களே... ஆவி என்று ஒன்று நிஜமாக உள்ளதா? ஆவி வேறு. ஆன்மா வேறா? மறுபிறப்பு சாத்தியமா? இம்மட்டில் உங்கள் அனுபவம் எப்படிப்பட்டது?''

இதுபோன்ற வாசகர்களின் கேள்விகளைத் தொடக்கத்தில் நான் சகஜமாய் எதிர்கொண்டேன். இப்போது ஏனோ இந்தக் கேள்விகள் என்னை ஆயாசப்படுத்தி விடுகின்றன.

உண்மையில் எந்த ஆவியையும் நான் பார்த்ததில்லை. ஆன்மா குறித்தும் பளிச்சென்று ஒரு தெளிவு கிடையாது. மறுபிறப்பில் ஆழ்மனரீதியாக ஒரு நம்பிக்கை உண்டு. இதுதான் அக்கேள்விகளுக்கு என்னிடம் இருக்கும் பதில்!

இப்படி இருக்க 'எப்படி அலசி ஆராய்ந்து அத்தனை அமானுஷ்ய நாவல்களையும் எழுத முடிந்தது?' என்றும் கேட்கிறார்கள்.

நான் எப்போதுமே நிஜங்களை மிக நேசிப்பவன். அதனாலேயே கதைகளைவிட ஆய்வுக் கட்டுரைகளை, அனுபவக் கட்டுரைகளை நிறைய வாசித்தவன். அதே போல் எப்போதும் ஒரு தேடலோடும் தவிப்போடும் இருப்பவன். நல்ல கேட்டல் உடையவன்!

ஒவ்வொரு வருடமும் என்வரையில் நெருங்கிய உறவினர்களில் தொடங்கி நண்பர்கள் என்று அநேகர் மரணிக்கிறார்கள். துக்கம் கேட்கச் செல்லும் சமயம் சுடுகாடு வரை சென்றும், சடலம் எரிந்து சாம்பலாகும் வரை காத்திருந்து அதைப் பெற்றுக்கொண்டும் வந்ததுண்டு.

மரணமும் அதன் பின்புலமும் பல ஆயிரம் கோடி பேர் இறந்திருந்தும், புலப்படாத ரகசியமாகவேதான் இருக்கிறது. இதைவிட ஒரு பெரிய ரகசியம் இருக்க வாய்ப்பில்லை என்றே நான் கருதுகிறேன். இந்த மரணத்தின் பின்புலத்தில் இந்துமதம் மட்டுமே வெகுதூரம் பயணித்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

காலமாகிவிட்டவர் தொடர்பாக அவர் உயிர் பிரிந்த திதியில் அவர் பெயரைச் சொல்லி, அவர் மூதாதையர் பெயர்களையும் சொல்லி மிகுந்த சிரத்தையுடன், உடல் மற்றும் உள்ளத் தூய்மையுடன் செய்யப்படும் நம் திவசச் சடங்கையே நான் உயிர் ஆராய்ச்சியின் முதல் களமாகக் காண்கிறேன். இதிலிருந்து அடுத்த களத்துக்கு ஏனோ யாரும் போக முனையவில்லை.

இந்த முதல் களத்தின் எள்ளுத் தண்ணீர் விடும் சடங்கை விஞ்ஞானத்தாக்கத்தோடு கேள்வி கேட்டவர்கள் பலர் உண்டு. இந்தத் தண்ணீரும் எள்ளும் எப்படி இறந்துவிட்டவரை அடைகின்றன? இது முதல் கேள்வி. அவருக்கு இவைதான் தேவை என்று எப்படித் தெரியும்...? இது அடுத்த கேள்வி. என்றோ இறந்து விட்டவர் இன்னுமா மறுபிறப்பு எடுக்காமல் (அ) சொர்க்கமோ, நரகமோ செல்லாமல் ஆத்மாவாகவே இருக்கிறார்? - இது மூன்றாவது கேள்வி. ஒருவேளை மறுபிறப்பு எடுத்திருந்தால் இந்த எள்ளுத் தண்ணீர் வீண்தானே? - இது நான்காவது கேள்வி.

- குறைந்தபட்சம் இந்த நான்கு கேள்விகளுக்கும் அழுத்தமான ஒரு பதிலை யாரும் கூறவில்லை. மகா பெரியவர் மட்டும் நாம் தபாலாபீசில் மணியார்டர் செய்வதை உதாரணமாகக் காட்டி, ''நாம் இங்கே கட்டும் பணம் எப்படி உரியவருக்கு அந்த ஊர், தபாலாபீசில் வழங்கப்படுகிறதோ அப்படி நாம் இங்கு விடும் தண்ணீரும் எள்ளும் விண்ணில் தேவர்களால் அளிக்கப்பட்டு விடுகிறது?'' என்கிறார்.

அடுத்து நாம் மறுபிறப்பெடுத்து விட்டாலும் நமக்கான நற்பலன்களாக மாற்றப்பட்டு அவை நம்மை அடைந்தவண்ணமுள்ளன. இது ஒரு தேவ நிர்வாக

# உயிரின்



முறை என்றும் கூறுகிறார்.

''மறுபிறப்பு நூறு சதவிகித உண்மை. இல்லாவிட்டால் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளிலேயே ஒருவன் கல்விமான், ஒருவன் மூடன், ஒருவன் பெரும் பணக்காரனாக ஆவது எப்படி நிகழ முடியும்? அவரவர் கர்மங்களே அதற்கேற்ப பிறப்பையும், வாழ்வில் ஏற்றத்தாழ்வையும் அளிக்கின்றன'' என்கிறார்.

அறிவுபூர்வமாய் இவற்றை மறுக்க முடியவில்லை.

மொத்தத்தில் உயிரின் மறுபக்கச் செயல்பாடுகளை நம்பிக்கை வைத்து ஏற்றால் உண்டு. இல்லாவிட்டால் விஞ்ஞானம் சொல்வது போல் நம் இறுதி முடிவு சாம்பலாவதுதான். அதற்கு மேல் சிந்திக்க எதுவுமேயில்லை.

இம்மட்டில் நம் புராணங்களிலேயே நசிகேதன் என்பவன், உயிரை எடுத்துச் செல்பவனாக நாம் வர்ணிக்கும் எமனிடம் உயிரின் ரகசியத்தை அறிய பெரிதும் முயன்றிருப்பதைக் காண்கிறோம். எமன் கூட உனக்கு இந்திரப் பதவி வேண்டுமா கேள். உயிரின் ரகசியம் பற்றியெல்லாம் கேட்காதே' என்கிறான். இதை விரிவாக அலசுவதாக உள்ளது 'கடோபநிஷத்!'

# மறுபக்கம்!



இதைப் படித்த பிறகும்கூட இதுதான் உயிர், இப்படிப்பட்டதே அதன் தன்மை என்று ஆய்வுக்கூட ஆராய்ச்சி போல இதைச் செய்ய முடியவில்லை. உண்மை தெரியவேண்டுமா?

இறந்து பார்த்துத் தெரிந்துகொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை!

ஆனாலும், இன்னொரு ஆனாலும் போட்டுச் சொல்கிறேன். சிலருக்கு இந்த மறுபக்கச் சமாசாரங்கள் எதன் பொருட்டோ துண்டுத் துண்டாய்த் தெரிந்து விடுகின்றன. இவர்களே நான் ஆவியைப் பார்த்தேன், பூதத்தைப் பார்த்தேன் என்பவர்கள். பாவம் இவர்கள்...! இவர்களால் தம் அனுபவத்தை வார்த்தைப்படுத்த மட்டுமே முடியும். காட்சிப்படுத்த முடியாது.

என் பாட்டி இறந்த அன்று என் மனைவிக்குக் காட்சி தந்தார். அவர் இறந்தது தெரியாமல் என் மனைவி என் பாட்டியிடம், ''என்ன பாட்டி திடீர்னு வந்திருக்கீங்க? வாங்க... உட்காருங்கோ'' என்கிறாள். ''பாக்கணும்னு தோணித்து அதான் வந்தேன்'' என்ற பாட்டி அதன்பின் காணப்படவில்லை.

ஓர் அரைமணியில் பாட்டி இறந்த செய்தி சென்னையில் இருந்து வந்தது. நாங்கள் இருந்தது மதுரையில்... அதன்பின் பாட்டியைப் போய் பிணமாகப் பார்த்தபோது என் மனைவி வர்ணித்த புடைவையோடுதான் கிடந்தார் பாட்டி. இதை நிதர்சனம் என்பதா? பிரமை என்பதா? தற்செயல் என்பதா?

உயிரின் மறுபக்கச் சமாசாரங்கள் இப்படி பிரத்யேக அனுபவங்களாகவே உள்ளன. எத்தனை முறை இதன் உச்சியைத் தொட முற்பட்டாலும் உருட்டிக் கீழே தள்ளிவிடுகின்றன.

ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் அத்தனை பேருக்கும் ஜனாதிபதி போல பெரும் பதவியில் அமர உரிமை உண்டு. ஆனாலும் ஐந்து ஆண்டுக்கு ஒருவருக்கே அந்த வாய்ப்பு அமைகிறது. இதுதான் யதார்த்தம். எல்லோருக்கும் உரிமை இருந்தாலும் ஒருவருக்கே வாய்ப்புக் கிட்டுவது போல உயிரின் மறுபக்க ரகசியங்களை எல்லோரும் அறிய முற்பட்டாலும், ஒருசிலரே அறிந்தவர்களாகின்றனர். நம்மால் அறிய முடியவில்லை என்பதற்காக இந்த மறுபக்கத்தையே பொய் என்று கூறுவதை அறிவுபூர்வமாகக் கருத என்னால் முடியவில்லை.

சரிதானே?

(தொடரும்)

# குலதெய்வமும்
# ஆதி உறவின் அர்த்தமும்!



**ச**மீபத்தில் நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் குடும்பத்தின் குலதெய்வம் எதுவென்றே தெரியாது. தாம் ஒரு பெரிய குழப்பத்தில் இருப்பதாகப் பேச்சுவாக்கில் குறிப்பிட்டார். பெரிய படிப்பு, மேல்நாட்டு வேலை- அங்கே காதலித்துத் திருமணம் என்கிற வாழ்க்கைப் போக்கில் இங்கே அவருடைய உறவினர்களும் பெரிய அளவில் இல்லை. இருக்கிற சிலரும் இப்போதைய தலைமுறை!

மூன்று நான்கு தலைமுறைக்கு முன்பே இந்தக் குலதெய்வ வழிபாடு, மொட்டையடிக்கும் சடங்கு, காது குத்தும் சடங்கு என்று எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாகக் கைநழுவிப் போய்விட்டது. இப்போது மட்டும் குலதெய்வம் எதன் பொருட்டு தேவைப்படுகிறது என்று புரியாமல் நானும் கேட்டேன்.

அவருடைய மகனுக்கு ஒரு விசித்திரமான நோய். அடிக்கடி மூக்கில் ரத்தம் வரத் தொடங்கிவிடும். எவ்வளவு வைத்தியம் பார்த்தும் பூரண குணமில்லை. இந்நிலையில் கடற்கரைக்கு அவர் குடும்பத்தோடு போன ஒரு சமயம், நம் ஊர் குச்சி ஜோசியக்காரிகளில் ஒருத்தி தேடி வந்து ஜோசியம் சொல்லியிருக்கிறாள்.

பிள்ளையின் உடல் நிலை சரியில்லை என்பதை, 'ரத்தம் கக்குற இந்தப் பிள்ளை நல்லவிதமா ஆகணும்னா மருந்து வைத்தியன்கிட்ட இல்லை. உன் குலதெய்வம் கைலதான் இருக்கு. அங்க போய் கும்புட்டு உழு. எல்லாம் சரியாயிடும்,' என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள். நண்பரும் ஆடிப்போய்விட்டார். அவர் மட்டுமல்ல அவர் மனைவியும்.

அதன்பின் நானும் அவரோடு சேர்ந்து பலமாய் முயற்சி செய்ததில் கிட்டத்தட்ட அவரது குலதெய்வக் கோயிலைக் கண்டுபிடித்தோம். என்னையும் அந்தக் கோயிலுக்கு அழைத்தார். 'சரி' என்று போனேன்.

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகில் உள்ள கதளி நரசிங்க பெருமாள் கோயில்தான் அது! போன இடத்தில் கோயிலுக்கு வந்த ஒரு வயதான பெரியவர் நண்பரை அடையாளம் கண்டுகொண்டார்.

''அடடே தம்பி... உங்க பாட்டன் பூட்டன்லாம் இந்தக் கோயிலுக்கு நிறைய செய்திருக்காங்க. குறிப்பா சாமிக்குப் பயன்படற பல நகைகள், அப்புறம் சடாரி இதெல்லாம் அவுக வாங்கித் தந்ததுதான்'' என்றார். அடுத்த நொடியே நண்பரிடம் ஒரு பெரிய இணைப்பு அந்தக் கோயிலோடு உருவாகி விட்டது.

கோயில் சடாரி என் நண்பர் சிரசைத் தீண்டியபோது அவர் தம் பாட்டனார் ஒருவரின் இரண்டு கரங்களும் தம் தலைமேல் படுவதாகத்தான் கருதி சிலிர்த்தார். அதன்படியே தம் மகனுக்கு மறுநாளே மொட்டை போட்டுக் காது குத்தி நரசிம்ம சுவாமிக்கும் அபிஷேக ஆராதனை என்று செய்து பூரித்துப் போனார்.

இழந்துவிட்ட செல்வம் எல்லாம் திரும்பக் கிடைத்துவிட்டதுபோல ஒரு பரவசம் அவரிடம். கோயிலைத் தனியாகவும், மனைவியோடும் சுற்றிச் சுற்றி வந்தார்.

''என் பாட்டன்... அந்தப் பாட்டனுக்குப் பாட்டன் எல்லாம் நடமாடித் திரிந்த இடம் இது. அவர்கள் கும்பிட்ட அதே சாமியை நானும் இன்று கும்பிடுகிறேன். என் குடும்பம் சில தலைமுறைகளோடு அடையாளம் தெரியாமல் அருகிப்போய் விடவில்லை... இந்தச் சாமி அருகிப் போய் விடவில்லை. நான் வந்தேன். என் பிள்ளை வந்தான். நாளை இவன் பிள்ளை வருவான். பட்டர் அர்ச்சனையின்

போது பேர் நட்சத்திரம் கேட்பார். அப்படிக் கேட்கும் போது கோத்திரம் சொல்லி, மூதாதையர் பேர் சொல்லி, அவர்கள் இன்று இல்லாவிட்டாலும் அந்தக் கருவறைக்குள் அவர்கள் சிந்திக்கப்படுகிறார்கள்.

இது என்ன ஓர் அற்புதமான ஏற்பாடு?

நாளை என் பேரப் பிள்ளைகளும் இதைத் தொடரும்போது நான் இல்லாத நிலையிலும், இங்கே என் பொருட்டு ஓர் அர்ச்சனை நிகழ்ந்து உயிருக்கு இணையான முடி காணிக்கை கொடுக்கப்பட்டு பக்தி செலுத்தப்படும்.

வாழ்வாங்கு வாழ்வது என்பது இதுதானா?''

- என்று அவர் மாய்ந்துபோனார்.

''அதுக்குத்தானேப்பா, எவ்வளவோ தெய்வங்கள் இருக்கற நம்ப சமூகத்துல குலதெய்வம்னு ஒண்ணைத் தனியா வெச்சோம்?'' - என்று ஒரு மேலான விளக்கம் தர முன்வந்தார் அந்தக் கோயில் பெரியவர். அவரே தொடர்ந்தார்.

''தம்பி... குலதெய்வம் வேற. பிற கோயில் தெய்வங்கள் வேறெல்லாம் கிடையாது. எல்லாம் ஒண்ணுதான். அந்த ஒண்ணான சாமியைக் கொஞ்சம் சுயநலமா தங்களுக்குன்னு பிடிச்சிக்கறதுக்குப் பேர்தான் குலதெய்வம். இதை ஆத்துத் தண்ணியை வாய்க்கால் வெட்டி நம்ப வீட்டுக் கிணத்துக்குக் கொண்டுகிட்டு வர்ற மாதிரின்னும் சொல்லலாம்.

ஆத்துல ஊரே குளிக்கும். நம்ம வீட்டுக் கிணத்துல நம்ப குடும்பம் மட்டும்தான் குளிக்கும். ஆத்துல சமயத்துல வெள்ளம் வரும். வறட்சியும் வரும். கிணத்துக்கு அப்படி ஏற்படாது. வறண்டாலும் தோண்டினா ஊத்து அகப்பட்டுவிடும்.

உன் வரைல கூட தொடர்பு அறுந்துபோய் வறண்டு போய் இருந்தது. நீ முனைஞ்சு தேடி வந்தது கிணற்றைத் திரும்பத் தோண்டுனதுக்குச் சமம். உன் வரைல உன் குலதெய்வம் உனக்குக் கிடைச்சுருச்சு. குலதெய்வம் மட்டுமா? இங்க வரவும் உன் முன்னோர் தொடர்பும் உயிர்ப்பிச்சுக்கிச்சு!

இப்ப உனக்கு பித்ருபலம், தெய்வபலம் இரண்டும் கிடைச்சிடிச்சு. இப்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிடைக்கணும். அந்தக் குடும்பம் நல்லா இருக்கணும்னுதான் ஒரு குறிப்பிட்ட சாமியைத் தங்களோட குலதெய்வமா ஆக்கிக்கிட்டாங்க'' என்றார் அந்தப் பெரியவர்.

இந்தக் குலதெய்வத்தால் பெரிதாக இன்னொரு நன்மையும் உள்ளது. விவரம் தெரிவதற்கு முன்பாகவே இங்கே பெற்றோர்களால் அழைத்துவரப்பட்டு தலைமுடி காணிக்கை கொடுக்கப்பட்டு,

“இப்ப உனக்கு பித்ருபலம், தெய்வபலம் இரண்டும் கிடைச்சிடிச்சு. இப்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிடைக்கணும். அந்தக் குடும்பம் நல்லா இருக்கணும்னுதான் ஒரு குறிப்பிட்ட சாமியைத் தங்களோட குலதெய்வமா ஆக்கிக்கிட்டாங்க!”



காதும் குத்தப்படும்போது, உடற்கூறு ரீதியாக ஆணாக இருந்தால் விந்து நாளம் தூண்டப்படுகிறது. பெண்ணாக இருந்தால் கருப்பை உசுப்பப்படுகிறது. இதன் காரணமாக மலட்டுத்தன்மை விரட்டி அடிக்கப்படுகிறது. ஆக அடுத்த தலைமுறைக்கான கதவைத் திறந்துவிட்டாயிற்று.

காலப்போக்கில் இந்தப் பிள்ளை 'கடவுளாவது மண்ணாவது?' என்று நாத்திகம் பேசி விஞ்ஞானமே ஞானம் என்றாலும் பெரும் பாதகமில்லை. சிறு பிராயத்திலேயே செலுத்தப்பட்ட முடி காணிக்கையும், வந்தனங்களும் கணக்கில் கொள்ளப்பட்டு அவர் எப்போதும் இறையருளுக்கு உகந்தவராகவே இருக்க வைக்கப்பட்டுவிட்டார். அப்புறமென்ன? என் நண்பர் மகன் இப்போது நலமாகவும் இருக்கிறான். எனக்கு ஒரே பிரமிப்பு!

நம் முன்னோர் சமூகம்தான் எத்தனை பேரறிவோடு இருந்திருக்கிறது? உலக உயிரினங்களுக்கெல்லாம் முன்னோடிகள் நம் சமூகத்தவர்கள் என்பதும் எவ்வளவு பெரிய உண்மை!

(தொடரும்)

# அதிகரிக்கும் பிரம்மச்சாரிகள்!



சமீபகாலமாக நான் எந்த ஒரு சுபநிகழ்வுகளில் பங்குகொள்ளும்போதும் ஒரு விஷயத்தைக் கட்டாய மாய்ப் பார்க்கிறேன். பையனை வைத்திருக்கும் பிள்ளை வீட்டுக்காரர்கள் அந்தக் கல்யாண வீட்டி லேயே, தங்கள் பிள்ளைக்கு ஒரு நல்ல பெண் அமைந்துவிடாதா? என்று தவிப்பதுதான் அது!

என் வரையில் இது ஒரு மகா ஆச்சர்யமான விஷ யம். வாஸ்தவத்தில் என் கல்யாணக் காலம் வரை நான் பார்த்த காட்சிகளே வேறு... அந்த நாளில் பிள்ளையைப் பெற்றவர்கள்தான் ராஜாக்கள். பெண் ணைப் பெற்றவர்கள் அந்த ராஜாக்களிடம் மன்றாடு வார்கள். பெண்ணின் ஜாதகத்தோடு போய் தாசானு தாசனாய் நிற்பார்கள். பிள்ளை வீட்டுக்காரர்கள் மாடி ஜன்னலில் இருந்து பார்ப்பது போல்தான் பார்ப்பார்கள்.

இந்த மாப்பிள்ளைக்கு நிச்சயம் ஒரு அக்காவோ தங்கையோ இருப்பாள். இவர்கள்தான் முன்னால் வந்து பேசி பெண்ணைத் தேர்வு செய்வார்கள். சுருக்க மாகச் சொல்வதானால் ஒரு ஆட்டம் ஆடி விடு வார்கள். பெண் பிடித்து நிச்சயதார்த்தம் வரும்போதே இவர்களின் கதகளியும் ஆரம்பமாகிவிடும்.

கல்யாணம் என்பது ஒரு மகோன்னத சடங்கு. அது ஒரு ஆயிரம் காலத்துப் பயிர் நடவு! இரண்டு வெவ் வேறு வடிவமைப்போடு கொண்ட குடும்பங்கள். காலா காலத்துக்கும் உறவாகப் போகும் ஒரு இணைப்பு விழா.

ரிஜிஸ்தர் ஆபீசில் இதற்கு அரை மணி நேரம் அதிகம். ஆத்மார்த்தமான ஒரு உறவை இப்படி ஒரு அரை மணி நேர விஷயத்தால் மட்டும் உரு வாக்கிவிடக் கூடாது என்றே முன்னும் பின்னுமாய் ஏராள மான சடங்குகளை வடி வமைத்தார்கள் நம் சான் றோர்கள். அதிலும் அந்த நாளில் வீதியை அடைத்துப் பந்தல் போட்டு ஒரு வாரத்துக்குக் கொண்டாடினார்கள்.

வரதட்சணை என்று ஒரு அசுரத் தனமான விஷயம் பெண் தரப்பைப் பிய்த்துப் பிராண்டும் பிசாசாகவே இருந்து வந்தது. இன்றும் கூட இருந்து வருகிறது.

அதனால் கல் யாணம் என்பது சந்தோஷம் மட்டு மல்ல, அது ஒரு தோஷமாகவே உள்ளது. அப்படிப் பட்ட இந்த தோஷ, சந்தோஷக் கல்யாணத்தின் இன்றைய நடப்பு என்னை ஆச்சர்யப்பட வைப்ப தோடு அதிர்ச்சியடைய வைப்பதாகவும் உள்ளது.

எனக்கு வரும் திருமண அழைப்புகளில் நூற்றுக்கு எண்பது கலப்பு மணங்களாகவே உள்ளன. அந்த நாளில் இவ்விஷயம் யானை மிதித்தாற்போல் ஒரு வலியைத் தந்தது என்றால் இன்று அது பூனை மிதித்த மாதிரி ஒன்றுமே இல்லாததாகப் போய்விட்டது. பெற்றோர்களும் திருமணம் என்று ஒன்று ஊரறிய நடந்தால் போதும் என்றுதான் நினைக்கிறார்கள்.

பெண் கல்வி, அவர்களின் முன்னேற்றம், வேலைக்குப் போய் கைநிறைய அவர்கள் சம்பாதிப் பது போன்ற விஷயங்களால் அந்த நாளைப் போல அவர்கள் மாப்பிள்ளை முன்வந்து நின்று 'அலை பாயுதே கண்ணா' என்று பாடிக்காட்டவெல்லாம் தயாரில்லை. தனக்கான இணையை அவர்களே தேர்வு செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அப்படிச் செய்த தேர்வு பொருத்தமற்றதாக மாறும்போது தயக் கமே இல்லாமல் கோர்ட்டுக்குப் போய் விவாகரத்து மனுவும் போடுகிறார்கள்.

இந்த மாற்றத்தை வளர்ச்சி என்பதா? வீழ்ச்சி என் பதா? தெரியவில்லை. இதன் எதிரொலி இன்று எப் படிப்பட்டதாக இருக்கிறது தெரி யுமா?

பல குடும்பங்களில் பல பிள்ளைகள் வயது முதிர்ந்து திருமண கடாட்சமின்றி 30 வயது கடந்து நாற்பது எனும் மாமா வயதுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். எந் தப் பெண்ணும் இவர் களை லட்சியமே செய்வ தில்லை.

ஐ.டி. கம்பெனி வேலை, 50, 60 ஆயிரங் களில் சம்பளம் கட்டாயம் ஒரு கார், தனிக்குடித்தனத்திற்கு உடன்பாடு - என்றால் திருமணம், இல்லாவிட்டால் 'மூச்!'

24 வயதுப் பெண் தனக்கான இணை அதிகபட்சம் 26 வயதுடை யவனாக இருக்கலாம். அதற்கு மேல் என்றால் அந்தப் பைய னைக் கூசாமல்,

'என் மாமா சார் நீங்க' என்கிறாள். ஒவ்வொரு ஆண் மகனுக்கும் கல்யாண கண்டம் 25, 26 வயதிலேயே தொடங்கிவிடுகிறது.

சராசரி டிகிரி, கிளார்க் வேலை, ரெப்ரசென்டேடிவ் வேலை என்று இருப்பவர்கள் எல்லாம் கொஞ்சம் பாவிகள்தான். பிராமண சமூகம் வரையில் இவர்களுக்கு ஒரு விதவை கிடைப்பதுகூட குதிரைக் கொம்பாகத்தான் உள்ளது. இதன் விளைவாக இன்று ஒரு பெண் +2 படிக்கும்போதே அட்வான்ஸ் புக்கிங் செய்வது போல் எல்லாம் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள்.

அப்படிப் பறக்கிறது பெண்களின் கொடி! அந்த நாளில் கூட பெண்கள் கொடிதான் பறந்து கொண்டிருந்ததாம். நடுவில் ஆணாதிக்கம் ஏற்பட்டு அவர்களை அடிமைப்படுத்திவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

வைணவச் சூரியன் வேதாந்த தேசிகரின் காலத்தில் ஒரு சம்பவம். அவர் வாழ்ந்த நாளில் பிள்ளை வீட்டுக்காரர்கள்தான் வரதட்சணை தருபவர்கள். ஏன் என்றால் பெண் என்பவள் மகாலட்சுமி. அவளது அழகுக்கும் அறிவுக்கும் ஏற்ப வரதட்சணையும் அமையுமாம்.

ஒரு முதிர்ந்த இளைஞன் சற்று அப்பாவி - அசடும் கூட! உற்றார் உறவினர்களும் இல்லாததால் திருமணம் என்பது அவன் வரையில் ஒரு நடக்கவே முடியாத சம்பவமாகி விட்டது. இந்த நிலையில் அந்த அசட்டு இளைஞனைப் பயன்படுத்தி வேதாந்த தேசிகரை சங்கடத்தில் ஆழ்த்த எண்ணினார் அவரது எதிரிகள். வேதாந்த தேசிகருக்கு 'சுத்த ஸ்வயம் பிரகாசர்' என்று ஒரு பட்டப் பெயரும் இருந்தது. அதாவது எவர் தயவும் இன்றி தானாக ஜொலிப்பவர். அவர் நினைத்தால் பெருமாளோடும், பெருமாட்டியோடும் கூட உரையாட முடியும் என்பதுதான் உட்பொருள்.

அதெல்லாம் பொய் என்பது எதிரிகள் எண்ணம். அதனால் அவர்கள் இந்த அசடை தேசிகரை நோக்கித் திருப்பி விட்டு, 'எனக்குக் கல்யாணம் செய்து கொள்ள பணம் வேண்டும். மகாலட்சுமியிடம் கேட்டு வாங்கித் தாருங்கள்' என்று சொல்ல வைக்கின்றனர். தேசிகனுக்கும் இது எதிரிகளின் கைங்கர்யம் என்பது தெரிகிறது. இருந்தும் அவர் அந்த அசட்டு இளைஞனுக்காக நிஜமாகவே வருந்தி மகாலட்சுமியை துதி செய்தாராம். அதுவே 'ஸ்ரீஸ்துதி' எனப்படும் ஸ்லோகமாகும்.

மகாலட்சுமியும் நேரில் தோன்றி பொருள் தந்து சென்றாளாம். அசட்டு இளைஞன் அனுகிரகத்துக்கு ஆளாகி குடும்பஸ்தனாகவும் ஆனானாம். அன்று கூட ஒரு அசடுதான். இன்றோ நூறு நூறு அசடுகள்...

தேசிகர் திரும்பப் பிரசன்னமாகி என்ன பாடினால் இவர்களுக்கு மணவாழ்வு கிட்டும்...?

தெரியவில்லை எனக்கு...!

**(தொடரும்)**



‘**கா**ர்மேகம் ஓடி வராதா... நல்ல மழை பொழியாதா?’ என்று ஏங்காதவர்கள் இல்லை. நினைவு தெரிந்து வற்றியதேயில்லை என்று ஜம்பமடித்துக் கொண்ட கிணறு, குளங்கள் எல்லாம் காய்ந்து போய் விட்டன. மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்க்கப் போய் இன்று இப்படி ஒருநிலை, என்று ஆரம்பித்து, பெட்ரோலிய கலாசாரமும் தெருமுக்கில் இருக்கும் பெட்டிக்கடைக்குக்கூட மோட்டார் பைக்கில் போய் வரும் வாகனப் போக்கும்தான் காரணம் என்று, மழையின்மைக்குக் காரணங்கள் அடுக்கப்படுகின்றன.

அதுமட்டும்தானா? ‘பெண் மக்கள் இழிவுபடுத்தப்படும்போதும், அவர்கள் கற்பு நிலை தளர்கின்றபோதும், குருஸ்தானத்தில் உள்ளவர்கள் வருந்தினாலும், நீதிமான் நேர்மை தவறினாலும் பசுக்கள் கொல்லப்பட்டாலும், வேத முழக்கம் நின்று போனாலும் கூட மழை பெய்யாது என்கிறது நீதி நூல் சாஸ்திரம்.

பாலாறு, தென்பெண்ணை, வராக நதி, வைகை பொருநை, குண்டாறு, மஞ்சளாறு என்று ஒரு பட்டியல் போட அந்த நாளில் நிறைய நதிகள் இருந்தன. இன்று பெயரளவில் இருக்கின்றன. இதன் ஓரசாரங்கள் ஆக்ரமிக்கப்பட்டு இவைகளெல்லாம் ஒரு வாய்க்கால் போலச் சுருங்கிவிட்டன. எங்காவது இன்னமும் ஆக்ரமிக்கப்படவில்லை என்றால் அங்கே அரசியல் வாதிகளுக்கும் அதிகார வட்டத்துக்கும் பேச்சு வார்த்தையில் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று பொருள்.

பாழாய்ப்போன இந்த விஞ்ஞானம் ராட்சஸ போர்வெல் இயந்திரங்களைக் கண்டுபிடிக்கப்போய் நிலத்தடி நீர் மட்டம் ஒரு கிலோ மீட்டருக்குக் கீழே போய்விட்டது. இதில் தண்ணீர் விற்றே குபேரர்கள் ஆவோர் நம்மிடையே அதிகரித்துவரும் ஒரு நிலையையும் பார்க்கிறோம்.

இவர்கள் பூமியைக் குடைவதில் பெருமாளின் வராக அவதாரத்தையே புறந்தள்ளிவிட்டனர். அக்கம்பக்கக் குடியிருப்புகள் பற்றியெல்லாம் இவர்களுக்குக் கவலையே கிடையாது. அதிகார வர்க்கமும் இவர்களை நெருங்குவதில்லை. அவர்களுக்குத் தேவை சில்லறை!

இதனால் இன்று ஒரு நடுத்தட்டுக் குடும்பம் தண்ணீருக்கு மட்டும் மாதம் 1500 ரூபாயைச் செலவழிக்கிறது.

# நல்லார் ஒருவர்



இதில் பெரிய கொடுமை என்ன தெரியுமா?

வானம் ஒன்றும் நமக்கு வழங்காமலில்லை. கேரளம், ஆந்திரம், கர்நாடகத்தை விட நமக்கு மழையளவு அதிகமாம். அது உண்மை என்பதற்கு சென்னையில் இரண்டாண்டுகளுக்கு முன்வந்த பெருவெள்ளமே சாட்சி. இப்போது அதைப் புதிதாக யாரிடமாவது காட்டினால் அவ்வளவு வெள்ளக்காட்சிகளும் கிராஃபிக்ஸா என்று கேட்பார்கள். அப்படி ஒரு மழை பெய்து - அப்படி ஒரு வெள்ளம் வந்து போனது. இன்று அதே சென்னையில் குடம் நீர் பத்து ரூபாய். நம்மைப்போல நீராதாரங்களைப் பாதுகாக்கத் தெரியாத முட்டாள் மனிதர்களை, இல்லை பொறுப்பற்றவர்களை இந்த உலகம் இதுவரை கண்டதில்லை. இனி காணப் போவதுமில்லை!

இங்கே ஏன் ஒரு அரசியல்வாதிக்கும் 'ஒரு குளம் வெட்டுவோம், புதிதாக ஒரு ஏரியை உருவாக்குவோம்' என்று தோன்றுவதில்லை? பெரிதாக கமிஷன் கிடைக்காது என்பதாலா? இல்லையில்லை நிறையச் செய்திருக்கிறோம் என்று யாராவது பட்டியல் போட்டால் அது யானைப் பசிக்குச் சோளப்பொரி போல்தான்.

# உளரேல்?!

நான் மதுரைக்காரன். 10 ஆண்டுகளுக்கு முன் புதிதாக வீடு கட்டிக் குடியேறியபோது 30 அடியில் தண்ணீர் இருந்தது. இன்று 600 அடியில்கூட இல்லை. மழை நீர் மண்ணில் இறங்க வழியில்லாதபடி தார்ச் சாலை, சிமென்ட்டு சாலை என்று போட்டு அவ்வளவு நீரும் எங்கே போகிறது என்று தெரியாமலே போய்விட்ட நிலையில் நான் இப்போது ஒரு காட்டு வாசியாகிவிட்டேன். ஆம் கான்கிரீட் காட்டுவாசி! தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அஸ்ஸாமில் வெள்ளம், ஒரிஸ்ஸாவில் வெள்ளம் என்கிற காட்சிகளைப் பார்க்கும்போது என் கண்களில்தான் வெள்ளம் வடிகிறது.

மழை வருவேனா என்கிறது. வானத்தை எவ்வளவுதான் பார்ப்பது? பல ஆண்டுகளாகவே இதுதானே நம் நிலை. நம் எதிர்காலச் சந்ததிகள் நிலையை என்னால் கற்பனையே செய்து பார்க்க முடியவில்லை.

நமக்காவது வாயிருக்கிறது - கதறவாவது முடிகிறது. என் வீட்டுப் பூச்செடியும் குரோட்டன்சும் படு பாவிகள். தினமும் அவற்றைப் பார்த்து சாரி சொல்கிறேன்.

ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது.

இப்படித்தான் ஒரு காஞ்ச பய ஊருக்கு சன்யாசி ஒருவர் வருவதாக இருந்ததாம். அவர் வந்தால் மழை பெய்து விடுமாம். புராணக் காலத்து ரிஷ்ய ஸ்ருங்கர் அவர்.

அவரும் வருகிறார். அவரைப் பார்க்க எல்லோரும் கூடுகின்றனர். ஒருவரிடம்கூட குடையில்லை. ஏன் என்றால் அவர்கள் மழை வரும் என்று நம்பவில்லை. அந்த சன்யாசிக்கே பெரிய ஏமாற்றமாகி முகமெல்லாம் மாறிவிட்டது. நமக்கிருக்கிற மழை ராசியை இந்த ஊர் காலி பண்ணிவிடும்போல் இருக்கிறதே



ரிஷ்ய ஸ்ருங்கர்

என்று அவருக்கு பீதியே உருவாகிவிட்டது. நல்ல வேளை மழை வந்தது. எல்லோரும் நனைந்திட ஒரு சிறுமி மட்டும், தான் கொண்டு வந்திருந்த குடையை விரித்துத் தப்பித்தாள்.

எல்லோரும் சன்யாசியைப் பாராட்டினர். அவரோ தேடி வந்து அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு இன்று உன் நம்பிக்கையால் மழையை வரவழைத்து விட்டாய் - என் வசம் எதுவுமில்லை என்றாராம்.

அந்தச் சிறுமி போல நம்பிக்கை வைக்க நம்மால் முடியுமா? இல்லை நம்மிடையே நல்லவர் என்று ஒருவர் கூட இல்லையா?

(தொடரும்)

இதில் பெரிய கொடுமை என்ன தெரியுமா?

வானம் ஒன்றும் நமக்கு வழங்காமலில்லை. கேரளம், ஆந்திரம், கர்நாடகத்தை விட நமக்கு மழையளவு அதிகமாம். அது உண்மை என்பதற்கு சென்னையில் இரண்டாண்டுகளுக்கு முன்வந்த பெருவெள்ளமே சாட்சி. இப்போது அதைப் புதிதாக யாரிடமாவது காட்டினால் அவ்வளவு வெள்ளக்காட்சிகளும் கிராஃபிக்ஸா என்று கேட்பார்கள். அப்படி ஒரு மழை பெய்து - அப்படி ஒரு வெள்ளம் வந்து போனது. இன்று அதே சென்னையில் குடம் நீர் பத்து ரூபாய். நம்மைப்போல நீராதாரங்களைப் பாதுகாக்கத் தெரியாத முட்டாள் மனிதர்களை, இல்லை பொறுப்பற்றவர்களை இந்த உலகம் இதுவரை கண்டதில்லை. இனி காணப் போவதுமில்லை!

இங்கே ஏன் ஒரு அரசியல்வாதிக்கும் 'ஒரு குளம் வெட்டுவோம், புதிதாக ஒரு ஏரியை உருவாக்குவோம்' என்று தோன்றுவதில்லை? பெரிதாக கமிஷன் கிடைக்காது என்பதாலா? இல்லையில்லை நிறையச் செய்திருக்கிறோம் என்று யாராவது பட்டியல் போட்டால் அது யானைப் பசிக்குச் சோளப்பொரி போல்தான்.

# உஎரேல்?!

நான் மதுரைக்காரன். 10 ஆண்டுகளுக்கு முன் புதிதாக வீடு கட்டிக் குடியேறியபோது 30 அடியில் தண்ணீர் இருந்தது. இன்று 600 அடியில்கூட இல்லை. மழை நீர் மண்ணில் இறங்க வழியில்லாதபடி தார்ச் சாலை, சிமென்ட்டு சாலை என்று போட்டு அவ்வளவு நீரும் எங்கே போகிறது என்று தெரியாமலே போய்விட்ட நிலையில் நான் இப்போது ஒரு காட்டுவாசியாகிவிட்டேன். ஆம் கான்கிரீட் காட்டுவாசி! தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அஸ்ஸாமில் வெள்ளம், ஒரிஸ்ஸாவில் வெள்ளம் என்கிற காட்சிகளைப் பார்க்கும்போது என் கண்களில்தான் வெள்ளம் வடிகிறது.

மழை வருவேனா என்கிறது. வானத்தை எவ்வளவுதான் பார்ப்பது? பல ஆண்டுகளாகவே இது தானே நம் நிலை. நம் எதிர்காலச் சந்ததிகள் நிலையை என்னால் கற்பனையே செய்து பார்க்க முடியவில்லை.

நமக்காவது வாயிருக்கிறது - கதறவாவது முடிகிறது. என் வீட்டுப் பூச்செடியும் குரோட்டன்சும் படுபாவிகள். தினமும் அவற்றைப் பார்த்து சாரி சொல்கிறேன்.

ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது.

இப்படித்தான் ஒரு காஞ்ச பய ஊருக்கு சன்யாசி ஒருவர் வருவதாக இருந்ததாம். அவர் வந்தால் மழை பெய்து விடுமாம். புராணக் காலத்து ரிஷ்ய ஸ்ருங்கர் அவர்.

அவரும் வருகிறார். அவரைப் பார்க்க எல்லோரும் கூடுகின்றனர். ஒருவரிடம்கூட குடையில்லை. ஏன் என்றால் அவர்கள் மழை வரும் என்று நம்பவில்லை. அந்த சன்யாசிக்கே பெரிய ஏமாற்றமாகி முகமெல்லாம் மாறிவிட்டது. நமக்கிருக்கிற மழை ராசியை இந்த ஊர் காலி பண்ணிவிடும்போல் இருக்கிறதே



ரிஷ்ய ஸ்ருங்கர்

என்று அவருக்கு பீதியே உருவாகிவிட்டது. நல்ல வேளை மழை வந்தது. எல்லோரும் நனைந்திட ஒரு சிறுமி மட்டும், தான் கொண்டு வந்திருந்த குடையை விரித்துத் தப்பித்தாள்.

எல்லோரும் சன்யாசியைப் பாராட்டினர். அவரோ தேடி வந்து அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு இன்று உன் நம்பிக்கையால் மழையை வரவழைத்து விட்டாய் - என் வசம் எதுவுமில்லை என்றாராம்.

அந்தச் சிறுமி போல நம்பிக்கை வைக்க நம்மால் முடியுமா? இல்லை நம்மிடையே நல்லவர் என்று ஒருவர் கூட இல்லையா?

(தொடரும்)



பி.எச்டி. ஆய்வுக்காக ஒரு மாணவி என் படைப்பு களில் 'பெண்ணியம்' பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதி எடுத்து வந்திருந்தார். பல்கலைக்கழகத்தில் கட்டுரையைச் சமர்ப்பிக்கும்போது சம்பந்தப்பட்ட எழுத் தாளரின் பேட்டியும், அவர் குறித்த தகவல் தொகுப்பும் முக்கியமானது. அதன் பொருட்டு என்னைச் சந்தித்த அவர் என்னிடம் கேட்ட முதல் கேள்வியே உங்கள் பெயரில் இருக்கும் 'இந்திரா யார்?' என்பதுதான். என்னுடைய தாயார் என்று நான் கூறவும் அவரிடம் சற்று வியப்பு. மனைவி பெயராக இருக்கும் என்பது அவர் யூகம்!

'அதனால்தான் உங்கள் நாவல்களில் பெண்களைப் பிரதானப்படுத்தி அவர்களை முதன்மைப்படுத்துகிறீர் களா?' என்று அவர் அடுத்து கேட்டார். இக் கேள்வி என் நாவல்களையும் அதில் வாழும் பெண் பாத்திரங்களையும் நான் திரும்பிப் பார்க்கும்படி செய்தது.

குறிப்பாக 'கிருஷ்ணதாசி', 'என் பெயர் ரங்கநாயகி', 'கோட்டைப்புரத்து வீடு', 'ரங்கநதி', 'பொன்மகள் வந் தாள்', 'ஒரு ஸ்ரீரங்கத்து தேவதை', 'ஆசை நெசவு', 'அன லாய் காயும் அம்புலிகள்', 'ருத்ர வீணை', 'விடாது கருப்பு', 'புருஷ வேட்டை', 'நீரெல்லாம் கங்கை நில மெல்லாம் காசி', 'அத்திப் பூக்கள்', 'புகுந்த வீடு', 'மீனாட்சி' என்று நீண்டுகொண்டே போனது.

இதில், 'என் பெயர் ரங்கநாயகி', 'அனலாய் காயும் அம்புலிகள்' ஆகிய நாவல்கள் மிக விசேஷமானவை. அனலாய் காயும் அம்புலிகள் நாவலில் காதலிக்கும் ஒரு ஜோடிகள் தங்கள் பெற்றோருக்கே மறுமணம் செய்து வைப்பார்கள். பிறகே தங்கள் மணம் என்று செயல்படு வார்கள். இந்த நாவலுக்கு மதிப்புரை வழங்கிய நடிகர் சிவகுமார் அவர்கள் 'விதவை மறுமணம்' எவ் வளவு அவசியம் என்பதை தம் மதிப்புரையில் குறிப் பிட்டிருந்தார்.

'என் பெயர் ரங்கநாயகி'யின் அடித்தளமே அசாதாரணமானது. நகரத்துப் பெண்ணோ, கிராமத்துப் பெண்ணோ, 'அவள் ஒரு மாதிரி' எனும் பழிச்சொல்லுக்குப் பெரிதும் பயப்படுவார்கள். மிக மிகத் தூய்மையான ரங்க நாயகியோ அந்தப் பழிச்சொல்லையே பழிக்கும் விதமாக அதைத் தானாக முன் சென்று எடுத்துக்கொண்டு, ஊருக் கொரு திருமணம் செய்து கொண்டு அதில் தன்னையும் ஏமாற்றிய தன் கணவனுக்குப் பாடம் கற்பிப்பாள்.

இப்படிப்பட்ட ரங்கநாயகி தன் பிள்ளையை மறுமணம் செய்துகொண்டு தன் பேரக் குழந்தைகளுக்கு நல்ல தாயா கத் திகழ வேண்டும் என்று தன்னை ஒரு கைம்பெண் துறவியாக ஆக்கிக் கொண்டு வாழும் ஒரு முதிய பாத்திரம் கூறும்.

'நீங்கள் கூட மறுமணம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால், பெண் துறவி போல வாழ்கிறீர்கள். அதே சமயம் எனக்கு மறுமணம் நடக்க வேண்டும் என்று விரும்புவது முரணாக உள்ளதே' என்பாள் ரங்கநாயகி. அந்த முதிய பெண்மணி பதிலுக்கு மிக அழகாகக் கூறுவாள்.

'என் புருஷன் அற்புதமானவன். அவனோடு வாழ்ந்த காலம் மிக ரம்மியமானது. அந்த நினைவுகள் எனக்குப் போதுமானவை. ஆனால், நீயோ புருஷன் என்பவனால் வதைபட்டவள், வஞ்சிக்கப்பட்டவள். அதனால் நீ மறுமணத்தி லாவது ஒரு பெண்ணுக்கான நிறைவான வாழ்வை வாழ வேண்டும், அதனால் கூறு கிறேன்' என்பாள். இந்த நாவலுக்குத் தமிழ்நாடு அரசின் சிறந்த நாவலுக்கான பரிசும் எனக்குக் கிடைத்தது.



# பெண்மையைப் போற்றுவோம்!

தொலைக்காட்சித் தொடர்களில் 'விடாது கருப்பு' தொடரை எவரும் மறந்திருக்க முடியாது. அதன் நாயகி ரீனா தான், அந்தக் கருப்பசாமி கடவுளா? இல்லை, மனநோயாளி மனிதனா என்பதைக் கண்டுபிடிப்பாள்.

'ஆன்ம வல்லமை தாராயோ' நாயகியோ தன் திருமணத்துக்காகத் திருமணத்தின்போது தன் தாய் தர ஒப்புக்கொண்ட வரதட்சணைக்காக தன் கிட்னியையே இழந்துவிட்டதை மிகத் தாமதமாய் அறிந்த நிலையில் தன் தாலியைக் கழற்றி கணவன்மேல் வீசிவிட்டு வாழ்க்கை பணத்தாலானதல்ல. அது குணத்தாலானது என்பதை நிரூபிப்பாள்.

அந்த மாணவியின் கேள்வி என் கதாபாத்திரங்களை நான் திரும்பிப் பார்க்கும்படி மட்டுமல்ல, இன்றைய பெண்ணியப் போக்கையும் சிந்திக்க வைத்தது. அதன் தாக்கத்தோடு நான் கடந்த இதழுக்கு முன் எழுதிய 'அதிகரிக்கும் பிரம்மச்சாரிகள்' கட்டுரை சிலரை வருத்தப்பட வைத்துள்ளது. அக்கட்டுரையின் கருத்தைவிட அதை நான் சொன்ன விதத்தால் சிலர் வருத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக சிலரை 'விதவைகள் கூட மணக்கத் தயாரில்லை' என்று நான் எழுதியதில் விதவைகளை நான் தாழ்வாகக் கருதுவது போல ஒரு தொனி தோன்றிவிட்டது. பிரம்மச்சாரிகளின் இன்றைய அவலத்தை அழுத்தமாகச் சொல்லப் போய் என்னையுமறியாது நான் அவ்வாறு எழுதிவிட்டேன். உண்மையில் நான் அவர்களுக்காக மிக வருந்துபவன். மனதார அதற்காக வருந்துகிறேன். அவர்கள் வாழ்வு மலர வேண்டும் என்று தீவிரமாய்க் கருதுபவன்.

அடுத்து காதல் திருமணங்கள்! என் மகள் விரும்பிய வரனுக்கே திருமணம் செய்து தந்த தந்தை நான்... இது போதும் நான் காதலுக்கு எதிரியில்லை என்பதற்கு. ஆனால் இன்று பலரிடம் காதல் எனும் பெயரில் 'இன்ஃபாச்சுவேஷன்' அதிகம் காணக் கிடைக்கிறது. அதை இன்றைய கைபேசியும், வலைதளமும் ஊக்குவிப்பதாக உள்ளது. பல குற்றவாளிகளும் இதனாலேயே சிக்குகின்றனர். பலர் பெரும் குற்றவாளிகளாகவும் இதனாலேயே ஆகின்றனர்.

எனக்குத் தெரிந்து ஒரு மனிதன் இதற்குச் செலவழிக்கும் தொகைக்கு தன் ஆரோக்கிய நிமித்தம் காய்கறிகளுக்குச் செலவழிப்பதில்லை. இந்தக் கைபேசி குறித்து இதே 'தரிசனம்' தொடர் வரிசையில் நான் நிறையவே எழுதியும்விட்டேன்.

இதைப் பெரியவர்களே கட்டுப்பாட்டோடு பயன்படுத்தத் தவறும்போது இளையவர்களிடம் அதை எப்படி எதிர்பார்க்க முடியும்? இதனால் உருவாகும் மனோ மயக்கம் தொடர்புகளை எளிதில் உருவாக்கித் தந்து விடுகிறது. அது காதலாகவும் மாறிவிடுகிறது.

# ஆயிரம் பேருக்கு நிகரானவர்!



மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவோ பேரைச் சந்திக்கிறான். ஆனால், சிலர்தான் மனங்களில் நிரம்பி வழிகிறவர்களாக இருக்கின்றனர். இவர்களையும் கடந்து கடவுளாகவே காட்சி தருபவர்கள் ஒருவரோ இருவரோதான். அம்மட்டில் நான் போற்றும் ஒருவரும் இருக்கிறார். இவரை எப்போது பார்த்தாலும் எனக்கு பிரமிப்புதான்!

பிரமிப்பு என்றால் சாதாரண பிரமிப்பல்ல. பிரமிப்புக்கெல்லாம் பிரமிப்பு. இந்தியா சுதந்திரம் பெற்று 1960-களில் மெல்ல நிமிரத் தொடங்கிய ஒரு காலக்கட்டம்.

இந்த வேற்றுமை மிகுந்த காலக்கட்டத்தில் தொழில்துறையில் ஒருவர் முன்னேற மிகவே சிரமப்பட வேண்டி இருந்தது. மைய அரசின் தொழில் கொள்கைகளும் லைசென்ஸ் முறைகளும் தொழில் முனைவோருக்கும் அவ்வளவு சாதகமாக இல்லை. காலில் குண்டுகளைக் கட்டிக் கொண்டு ஒருவர் ஓட வேண்டும் என்றால் அது எத்தனை பெரிய இடர்? இருந்தாலும் அரசின் அந்தக் கட்டுப்பாடுகளை சிரம் வணங்கி ஏற்றுக்கொண்டு ஒரு நிறுவனம் பீடுநடை போட்டது. இன்னும் போட்டுக் கொண்டிருக்கிறது. இனியும் போடும் எனும் அந்த நிறுவனம்தான் டி.வி.எஸ். நூறாண்டை எட்டிப் பிடித்து விட்ட இந்நிறுவனத்தின் ஸ்தாபகரான சுந்தரம் ஐயங்கார் ஒரு மிகச் சிறந்த கல்வியாளர். வங்கியில் நல்ல வேலை கிடைத்து சென்னையிலும் பணிபுரிந்த சமயம் ஒரு வெள்ளைக்கார துரையான நார்ட்டன் துரை என்பவரின் பேச்சுதான் டி.வி.எஸ். என்கிற மூன்றெழுத்தை இந்திய மண் பெறவே காரணம்.

திருவல்லிக்கேணியில் ஒரு பொது நிகழ்வில், 'நீ தொழிலாளியாக இருந்தால் அது உனக்கு மட்டுமே நல்லது. முதலாளியாக ஆனாலோ நாலு பேருக்கு நல்லது... அவ்வளவு பேருக்கு வேலை தரலாமே?' - நார்ட்டன் துரை பேசிய வார்த்தைகள் சுந்தரம் ஐயங்கார் மன நலத்தில் விதைகளாய் விழுந்தன. தாம் பார்த்து வந்த வங்கி வேலையைக் கைவிட்டார். தொழில் முனைய தீர்மானித்தார். 'மதுரை வா வா' என்றது. சென்றார். நின்றார். வென்றார்! படிப்படியான வளர்ச்சிதான். முதலில் மரக்கரி வியாபாரம். பின்பு மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ். அப்போது இரண்டாம் உலக யுத்தம் வேறு. ஸ்பேர் பார்ட்சுகள் கள்ள மார்க்கெட்டில் மூன்று மடங்கு கூடுதல் விலைக்குப் போனபோதும் திரு TVS லேபிள் விலைக்கே விற்றார். இந்தத் தொழில் தர்மம்தான் TVSன் வேர்.

இன்று TVS என்றால் 'Trust Value Service' என்கிற ஒரு புது மொழியாக்கம் உருவாகிவிட்டது. 'காலம் தவறாமை, தரம் தவறாமை, திறம் தவறாமை' எனும் மும்மையே TVSன் ஜீவபலம்.

புதுக்கோட்டையில், காஞ்சி பரமாச்சார்யார் முகாமிட்டிருந்த சமயம். காலை 3 மணிக்கு தன்னை எழுப்பிவிடும்படி தன் சீடர்களுக்குச் சொல்லிவிட்டு படுக்கப் போனாராம் பெரியவர். சீடரோ தூங்கிவிட்டார். நான்கு மணிவாக்கில் எழுந்து பார்த்தபோது பெரியவர் மூன்று மணிக்கே எழுந்து தம் கடமையைச் செய்து கொண்டிருந்தாராம். சீடருக்குப் புரியவில்லை. யார் எழுப்பி விட்டிருப்பார்கள்?

இப்படியே பல நாட்கள் சென்றதாம். அவ்வளவு நாளும் அந்தச் சீடர் எழுப்பவில்லை. ஒரு நாள் பெரியவரிடம் கேட்டாராம்.

''பெரியவா உங்களை எழுப்பிவிட்றது யார்?'' என்று.

''வேற யார்? டி.வி.எஸ். தான்!'' என்றாராம் பெரியவர்.

அந்தச் சீடர் முழித்திட, பெரியவர் விளக்கினாராம்.

''என் அறைல இருந்து ஜன்னல் வழியா வெளிய பார்த்தா மெயின் ரோடு. அதுல 3 மணிக்கு டாண்ணு வந்து நின்னுடறது டி.வி.எஸ். பஸ். அந்த இன்ஜின் சப்தம்தான் என்



இந்திரா சௌந்தர்ராஜன்

> பாக்கதான் அவர் ஒருத்தர். ஆனா அவரால ஆயிரம் பேர் பொழைக்கறா. அப்படிப் பார்த்தா நான் 1000 பேருக்கு பிரசாதம் தந்ததா அர்த்தம்!

அலாரம். ஒருநாள் கூட முன்ன பின்ன வரல. சூர்ய சந்திரர்கள் ஆகாசத்துல பிசகாம வர்ற மாதிரி அப்படி ஒரு பங்க்ச்சுவாலிடி...'' என்ற அவர் சர்ட்டிஃபிகேட்டை விடவா ஒரு சான்று வேண்டும்?

இந்த வழித்தோன்றல் நிறுவனங்களில் ஒன்றுதான் சுந்தரம் பாசனர்ஸ் இந்நிறுவனம் சீனாவில் கிளை பரப்ப முனைந்தபோது ஊக்கம் தந்தவர்களை விட எச்சரிக்கை செய்தவர்கள் அதிகம். ஆனால் இதன் நிர்வாக இயக்குனர் திரு சுரேஷ் கிருஷ்ணா அவர்கள் (சுந்தரம் ஐயங்காரின் பேரன்) முன்வைத்த காலை பின்வைக்கவில்லை. 'என் தொழில் தர்மம் என்னை எங்கேயும் காப்பாற்றும்' என்பது இவர் நம்பிக்கை. அந்த நம்பிக்கை இவரைக் கைவிடவில்லை. சீனாவில் சுந்தரம் பாசனர்சின் ஜெயக்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

இன்று இக் கட்டுரையை எழுதி நான் ஒரு நாடறிந்த எழுத்தாளனாக திகழக் காரணமும் திரு சுரேஷ் கிருஷ்ணா அவர்கள்தான்! என் எழுத்தாற்றலை அறிந்து என்னைத் தட்டிக்கொடுத்து நிறுவனத்தின் குடும்ப இதழுக்கு (in house magazine) ஆசிரியராக்கினார். என் பேரைக் குடும்ப இதழுக்கான பணியோடு நாவல்களையும், நாடகங்களையும் எழுதிக் குவிக்கவும் காரணமானார்.

என் மனிதக் கடவுளாகக் கருதும் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு 80 வயது பூர்த்தியாகும் அதே நாட்களில் சுந்தரம் பாசனர்ஸ் 50 ஆண்டுகளைக் கடக்கிறது. டி.வி.எஸ். நிறுவனமோ 100யைக் கடந்துள்ளது. என்ன ஓர் ஒற்றுமை! 32,000 பேர் இன்று இதனால் வாழ்கிறார்கள் - இன்னும் பல்லாயிரவர் வாழப்போகின்றனர்.

காஞ்சிப் பெரியவரிடம் பிரசாதம் பெற நீண்ட வரிசை நின்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தொழிலதிபரை நடுவில் வரச் செய்து ஆசிர்வதித்து அனுப்பினாராம். அதைப் பார்த்த ஒருவர் மனதுக்குள் வரிசையில் அவர் வராமல் மீறிவிட்டாரே என்கிற வருத்தம். இப்படி வருத்தப்பட்டவர் பெரியவர் முன் வந்ததும், 'அவர் அவசரமா போகணும். அதான் கூப்ட்டு பிரசாதம் தந்தேன். பாக்கதான் அவர் ஒருத்தர். ஆனா அவரால ஆயிரம் பேர் பொழைக்கறா. அப்படிப் பார்த்தா நான் 1000 பேருக்கு பிரசாதம் தந்ததா அர்த்தம்!' என்றாராம். மனத்தில் சலனப்பட்டவர் விக்கித்தார். பெரியவருக்குத்தான் என்ன ஒரு ஞான திருஷ்டி? பெரியவர் இன்று இருந்திருந்தால் என் நிர்வாக இயக்குனரையும் அழைத்து ஆசிர்வதித்திருப்பார். அதன் பொருட்டு அவரைப் பிரார்த்திக்கிறேன். அவரது ஆசிகள் இந்தப் பொன்விழா நிறுவனத்தை வைரம் நோக்கி வழிநடத்தட்டும். என் வள்ளலும் சதம் கண்டு எமை வழிநடத்தட்டும்.

(தரிசிப்போம்...)



சுந்தரம் ஐயங்கார்

# பிள்ளைக்கு பாரமா பெற்றோர்?

மனிதர்களோடு பெரிதும் தொடர்புடையது எண்களில் நூறுதான்! வாழ்த்தும்போதும், வாழ்க்கைப் படும்போதும் நூறாண்டு காலம் வாழ்க என்றே வாழ்த்துகிறோம். அதுதான் பூரணம்.

நூறு கண்டு வாழ்வதும், ஒன்றும் லேசில்லை. இன்று எழுபது தொட்டு எண்பதே ஓர் தீர்க்காயுசாகத் தான் கருதப்படுகிறது. அனேக முதியவர்களிடம் மரணம் குறித்த ஒரு சலனம் சதா இழையோடுவதை நான் காண்கிறேன்.

என் உறவுக்காரப் பெண்மணி ஒருவர் காலை எழுந்த நிலையில், கணவர் படுத்திருக்கும் இடத்திற்குப் போய் அவரை உற்றுப் பார்ப்பார். குறிப்பாக மார்புப் பக்கத்தைப் பார்ப்பார். அது மேலும் கீழும் எழுவதைப் பார்த்த பிறகே 'அப்பாடா' என்பதுபோல் அகலுவார். எங்கே முந்திக்கொண்டு போய் விடுவாரோ என்கிற அச்சம்.

''டேய், உங்கம்மாவைக் கொஞ்சம் நல்ல டாக்டர்கிட்ட கூட்டிப் போய்க் காட்டுடா... அநியாயத்துக்கு இருமுறாடா...'' என்பார் பெண்மணியின் கணவரும்.

இவர்தான் இளமையில் இதே இருமலுக்கு, 'வெந்நீர் குடி' சரியா போயிடும்'' என்றார்.

வெகு சிலரின் முதுமைதான் மதிப்பிற்குரியதாய் இருக்கிறது. எனக்குத் தெரிந்து ஒரு ஜோதிடர், 90 வயதைத் தொடப்போகிறார். ஒரு நாளைக்கு 30லிருந்து 40 பேருக்காவது ஜோதிடம் சொல்கிறார். வயதும் அனுபவமுமே இவர் பலம்!



இன்னொருவர் சம்ஸ்கிருதப் புலி. ஸ்லோக வகுப்பெடுக்கிறார். இப்படி இவர்கள் பரபரப்பாக இயங்குவதே மகிழ்ச்சிக்குரிய விஷயம். வருவாயும் சேரும்போது இவர்கள் மிகவும் உற்சாகமாகி விடுகின்றனர்.

எல்லோராலும் தங்கள் முதுமையை இப்படி உற்சாகப்படுத்திக்கொள்ள முடிவதில்லை. மிகவும் ஓடிவிட்டோம் என்கிற எண்ணம், மேற்கொண்டு ஓட முடியாத சூழல், சர்க்கரை, பிரஷர் என்கிற உடும்புப் பிடி நோய்கள் ஒவ்வொரு நாளும் இவர்கள் உயிர் வாழ்வதே பெரிய விஷயம் என்பதுபோல் எண்ண வைத்து விடுகின்றன. கூடுதலாகப் பொருளாதார அழுத்தமும் சேரும்போது கேட்கவே வேண்டாம்.

எத்தனைதான் நல்ல மனிதராய்த் திகழ்ந்திருந்தாலும் நோய்ப் படுக்கையில் விழ நேரும்போது, பெற்ற பிள்ளைகளே பாரமாகத்தான் கருதுகின்றனர்.

மொத்தத்தில் நான் பார்க்க முதுமை இன்று ஒரு பெரும் தீர்வை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. ஒரு இருபதாண்டு அளவில் இந்திய மக்களின் வாழ்க்கை முறையிலும் பெரும் மாற்றங்கள். நான் பட்ட பாட்டை என் பிள்ளைகள் பட்டு விடக் கூடாது என்று கருதி, கடன் பட்டாவது படிக்க வைக்கும் போக்கு ஒரு நல்ல விஷயமே!

ஆனால், இதுவே பல பெற்றோரை இன்று தீவுவாசிகளாக்கி விட்டது. படித்த பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போய்

அதன் கட்டுப்பாடுகளுக்கு ஆட்பட்டு பெற்றோரைப் பிரிந்தே வாழும் ஒரு வாழ்க்கை வலைக்குள் விழுந்து விடுகின்றனர்.

பிள்ளை கைநிறையச் சம்பாதித்துக் கொண்டு மேல்நாட்டில் இருக்கிறான் என்று சந்தோஷப் படுவதா, இல்லை இதனாலேயே அவன் தங்களுக்கு இல்லாதவனாகிவிட்டான் என்பதற்காக வருத்தப் படுவதா? பாவம் இன்றைய பெற்றோர்கள்...

எனக்குத் தெரிந்த ஒரு தாய் மேல்நாட்டில் வாழும் பிள்ளைகளோடு போனில் பேசுவதால் மட்டுமே தன் தாபத்தைத் தீர்த்துக்கொண்டு வந்தாள். ஒருநாள் அவர் நிரந்தர உறக்கத்தில் விழ, பிள்ளைக்குத் தகவல் போன போது, ' என்னால் உடனடியாகவெல்லாம் வர முடியாது. நீங்களே அடக்கம் செய்து விடுங்கள் பணம் அனுப்பி விடுகிறேன்' என்றான். அந்தத் தாயைப் பரிபாலித்த ஒரு முதியோர் இல்லமே அந்திம காரியத்தையும் செய்தது.

அந்தப் பிள்ளையையும் பெரிதாகக் குற்றம் சொல்ல முடியவில்லை. இன்று மனிதவாழ்வு என்பது இந்தப் பூவுலகில் எங்கு வேண்டுமானால் எப்படி வேண்டுமானால் இருக்கலாம் என்றாகி விட்டது.

பிள்ளைகளை க்ரீச்சில் போட்டு விட்டு வேலைக்குச் செல்லும் நகரத்து தாய், பின் அதே பிள்ளையை ஹாஸ்டலில் தங்கிப் படிக்க வைப்பதில் பிரிவை நிரந்தரமாக்குகிறாள். அதன்பின் வேலை எங்கோ வாழ்க்கை அங்கே என்றாகி வாழ்தல் என்பதே சில அற்ப சுகங்களுக்காக என்று மாறிப் போய் விடுகிறது. அன்று பிரிவது என்பது மரணத்தில் மட்டுமே என்று இருந்தது. இன்று இரண்டு வயதிலேயே பிரிவைச் சொல்லித்தரத் தொடங்கிவிடுகிறது நம் வாழ்க்கை முறை.

இன்று முதுமைக்கும் விதியில்லை - இளமைக்கும் கதியில்லை. 'பெருகிவிட்ட மக்கள் தொகை - துப்புக் கெட்ட அரசியல், அச்சமூட்டும் வன்முறை' இம் மூன்றும் மனித வாழ்வை எப்படியெப்படியெல்லாமோ கொண்டு செல்கின்றது. கண்களை விட்டுச் சித்திரம் வாங்கியவனைப் போல நம் கலாசாரத்தை விட்டுக்கொடுத்து நாம் நமக்கே தெரியாமல் எல்லோரும் இருந்தும் அநாதையாக மாறிக்கொண்டிருக்கிறோம்.

கார்த்தவீர்யார்ஜுனன் என்று ஒரு புராணப் பாத்திரம். ஆயிரம் கைகள் இவனுக்கு... இத்தனைக்கும் ஒரு அரசன் மகனாகப் பிறந்த இவன் பிறந்த தருணத்தில் மனிதர்களுக்கே உரித்தான இரண்டு கைகள் கூட இல்லாமல் ஊனத்தோடு பிறந்தவன்!

> “கணவர் படுத்திருக்கும் இடத்திற்குப் போய் அவரை உற்றுப் பார்ப்பார். குறிப்பாக மார்புப் பக்கத்தைப் பார்ப்பார். அது மேலும் கீழும் எழுவதைப் பார்த்த பிறகே ‘அப்பாடா’ என்பதுபோல் அகலுவார்.”



இவன் தந்தை மரிக்கவும் இவன்தான் அடுத்து பட்டத்துக்கு வந்தாக வேண்டும். ஆனால் கார்த்தவீர்யார்ஜுனன், 'ஐயா வேண்டாம் என்னை விட்டு விடுங்கள்' என்றானாம். ஒரே காரணம்தான்!

அவனது முன்வினைப்பாடுதான் அவன் ஊனமாகப் பிறக்கக் காரணம். கர்மத்தை அனுபவித்தே தீர்க்க முடியும் என்பதே பிரபஞ்ச விதி. இந்நிலையில் அரசனாகி விட்டால் நாட்டு மக்கள் செய்யும் பாவங்களெல்லாம் அரசன் தலைமேல்தான் விடியுமாம். அப்படித்தான் சொல்கிறது நீதி சாஸ்திரம். இதனாலேயே மறுத்தான் கார்த்தவீர்யார்ஜுனன்.

'ஏற்கெனவே பாவி நான். இதில் மக்கள் பாவங்கள் வேறா? ஒரு பாவி அரசனாக வாழ்வதற்கு, மண் புழு போல் இப்படியே இருந்து விடுகிறேன் இது மேலானது' என்றான்.

வசிஷ்டர் போன்ற ராஜமுனிகள் அவனுக்கு உற்ற வழிகாட்டத் தொடங்கினர்.

'அர்ஜுனா! மக்களைச் சந்தோஷமாக வாழ வை. வறுமையும் தேவையுமே பாவம் செய்ய வைக்கின்றன. நீ எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கச் செய். தர்ம ராஜ்யமாக்கு. நீயும் கர்மவிடுதலை அடைவாய். மக்களும் பாவிகளின்றிப் புண்ணியர்களாவர்' என்றனர்.

கார்த்தவீர்யார்ஜுனனும் அவ்வாறே செய்யத் துணிந்தான். தர்மராஜ்யமும் உண்டானது. அவனுக்கும் இரண்டு கரங்களுக்கு 1000 கரங்கள் கிடைத்தன!

அன்று வழிகாட்ட வசிஷ்டர் போல பலர் இருந்தனர். இன்று...?

(தரிசிப்போம்...)

எனக்கு வாரியார் சுவாமிகளை மிகவும் பிடிக்கும். கடவுளர்களில் பிள்ளையார் போல் குருநாதர்களில் நான் வாரியாரை நிறையவே வியந்திருக்கிறேன். நம் வாழ்வில் எல்லா விஷயங்களையும் நிதர்சனம் என்று கூறிவிட முடியாது. அம்மாதான் நம்மைப் பெற்றவள் என்பது நிதர்சனம். ஆனால் அப்பா சூட்சுமம்! அம்மாவின் பேரால் அவள் சொல்லியே அப்பாவை ஏற்கிறோம். அதாவது ஒன்றை, காட்சி ரூபமாக நம்பி ஏற்கலாம் - இன்னொன்றை நம்பிக்கை வைத்துத்தான் ஏற்க வேண்டும். இதில் கடவுள் விஷயமும் இந்த நம்பிக்கை வைத்து ஏற்கவேண்டிய ஒரு சூட்சும பாகத்தில்தான் உள்ளது.

இப்படிச் சூட்சுமமாய் இருப்பதால் நிறைய கேள்விகளும் இதனால் விடைகாண முடியாதபடியே உள்ளன. அதில் ஒரு கேள்வி நம்மைப் படைத்தது கடவுள் என்றால், அவரைப் படைத்தது யார் எனும் கேள்வி.

அவர் ஒரு 'தான் தோன்றி' என்றால் 'ஏன் மனிதனும் அப்படித் தோன்றி இருக்கக்கூடாது?' என்று ஒரு கேள்வி அந்தப் பதிலாலேயே உருவாகி விடுகிறது. உலகில்



# கடவுளை

ஆத்திகவாதிகள் இருப்பது போல நாத்திகவாதிகள் இருக்கவும் இப்படிப்பட்ட கேள்விகளும் பதில்களுமே காரணமாகிவிடுகின்றன. சிலர் நாத்திகமும் பேசாமல், ஆத்திகமும் பேசாமல் நடுநிலையாளர்களாக உள்ளனர். அப்படி ஒருவர் வாரியாரோடு பேச நேர்ந்தது. அவர் வாரியாரிடம், 'சாமி கடவுள் இருக்கார்னா அவர் ஏன் சாமி கண்ணுக்குத் தெரியாம இருக்காரு?' என்று கேட்டார்.

பதிலுக்கு வாரியார், 'ஏன் தெரியணும்னு எதிர்பார்க்கறீங்க?' என்றார்.

'தெரிஞ்சா உலகத்துல நாத்திகம் பேசறவங்களை எல்லாம் அடக்கித் திருத்திடலாம். உலகமே பக்தியோட ஒழுக்கமா இருக்குமே அதனாலதான்...' என்றார் அவரும். அந்தப் பதிலைக் கேட்டுச் சிரித்தார் வாரியார்.

''என்ன சாமி சிரிக்கிறீங்க?''

''சிரிக்காம என்ன பண்ண... அவரை தரிசனம் பண்ணவங்க பல பேர் உண்டுப்பா. ஆனா அதனால எல்லாம் மட்டும் பக்தி வந்துடாது. அப்படிப் பாத்தவங்க வரைலயும் கூட அவர் சொல்றது உண்மை, பொய்னு இரண்டுசார்பு உருவாகிடும்.''

''அப்ப கடவுள் விஷயம் எப்பவும் ஒரு கேள்விக்குறிதானா சாமி?'' - அந்த மனிதர் விடுவதாயில்லை.

''ஆமாம்ப்பா... நீ நம்பினா கேள்விக்குறி ஆச்சர்யக் குறியாயிடும். இல்ல கேள்விக்குறியாவே இருக்கும்.''

''எதை வெச்சு சாமி நம்பறது?''

''உன்னை வெச்சே நீ நம்பலாமே...''

''என்னை வெச்சா?''

''ஆமாம்... இந்த உடம்பை விடவா ஒரு மெக்கானிசம் இந்த உலகத்துல இருக்க முடியும்? எவ்வளவு நடந்தாலும் தேயாத பாதம்! மிகச் சரியா விரல் நுனிகள்ல மட்டும் வளர்ற நகம், மடக்கி அமரத் தோதா கால்ல மூட்டுப் பகுதி, உட்காருமிடத்துல தேவைக்கு சதை, ஏற்ற இறக்கமான விரல்கள், கண் காது மூக்கு வாய்னு அளவா அழகா உறுப்புகள். கண்ணுக்கு மேல புருவம்- இமையில் கூட கணக்கா

# படைத்தது யார்?

**''எவ்வளவு நடந்தாலும் தேயாத பாதம்! மிகச் சரியா விரல் நுனிகள்ல மட்டும் வளர்ற நகம், மடக்கி அமரத் தோதா கால்ல மூட்டுப் பகுதி, உட்காருமிடத்துல தேவைக்கு சதை, ஏற்ற இறக்கமான விரல்கள், தலைக்கு மேல உஷ்ணத்தைத் தாங்கற தலைமுடி... இந்த டிசைனை ஒரு தற்செயல் விஷயமா சொல்ல முடியுமா?''**

முடிகள் - வாய்ல கூட கணக்கா 32 பற்கள், தலைக்கு மேல உஷ்ணத்தைத் தாங்கற தலைமுடி... இந்த டிசைனை ஒரு தற்செயல் விஷயமா சொல்ல முடியுமா?''

''இதுக்கும் கடவுளுக்கும் என்ன சாமி சம்பந்தம்?''

''இந்த அற்புத சிருஷ்டிகர்த்தாவை நீ யார்னு நினைக்கறே?''

''நாம மட்டும்தானா சாமி... எவ்வளவோ உயிரினங்கள். இதை எல்லாம் இயற்கைன்னுல்ல விஞ்ஞானிகள் சொல்றாங்க.''

''சரிப்பா, நீயும் அப்படியே சொல்... கடவுள் உன்னைச் சொல்ல வேண்டாம்னு சொல்லலியே...''



- வாரியாரின் இந்தப் பதில் அந்த மனிதரை அடுத்துப் பேசவிடவில்லை. அடுத்து என்ன கேட்பது எப்படிக் கேட்பது என்றும் தெரியாமல் அவர் திகைத்தபோது, வாரியார் மிக அழகாகச் சொன்னார்.

''எல்லாமே தெய்வ சிருஷ்டின்னும்போது இயற்கையும் தெய்வ சிருஷ்டிதானே? எப்படிச் சொன்னா என்ன... கடவுள் மேல நம்பிக்கை வைக்க எந்த அளவு நியாயம் உள்ளதோ அதே அளவு நியாயம் வைக்காம இருக்கவும் உள்ளது. ஏன்னா இரண்டுமே அவன் படைப்போட நிலைகள்தான். நாராயண தத்துவம்கறது என்ன தெரியுமா? 'நான் இருப்பது போலவே இல்லாமலும் போகிறேன்...' அப்படிங்கறதுதான்.''

வாரியார் பதில், எனக்குப் பல உண்மைகளைப் புரியவைத்தது. மனிதப் பிறப்பே கர்மவினைகளால் உருவாவதுதான். திரையுலகைச் சேர்ந்த ஒரு பிரபல பெண் கவிஞர் என்னிடம்,

''இந்திரா சார்... ஏதாவது மனவருத்தம் குழப்பம்னா நீங்களெல்லாம் கோயில், பூஜை, அர்ச்சனை, பிரார்த்தனைன்னு அதுல இருந்து கொஞ்சம் கொஞ்சமா மீண்டு வெளிய வந்துட்றீங்க. கடவுளை என்னால நம்ப முடியாததால எல்லாத்தையும் நானே சுமக்க வேண்டியிருக்கு. சுமை அதிகமாகும்போது ஐயோ, இந்தக் கடவுளை நம்பிடுவோமே எதுக்கு இந்த அடம்னு தோணுது'' என்றார்.

என் போன்ற நம்பிக்கை உள்ளவர்களிடம் அது வேறு மாதிரி வருத்தங்களைச் சில நேரங்களில் உருவாக்கிவிடுகிறது. என் மதுரை மண் மேல் மேகங்கள் வந்து வந்து கலைந்து போகின்றன. என் தோட்டச் செடிகள் சாய்ந்து சருகாகி என் கண்களைக் கரிக்க விடுகின்றன. சித்திரைத் திருவிழாவில் மீனாட்சியையும் சொக்கநாதரையும், அழகர் பெருமானையும் எந்தக் குறைவுமின்றி அழைத்துக் கொண்டாடியும் விட்டோம். இம்முறை கூட்டம் மிகவே அதிகம்!

நான் அவர்களிடம் மன்றாடுகிறேன். உங்களுக்குக் கருணையே இல்லையா... இப்படியா வாட்டுவீர்கள்? என்றும் கேட்கிறேன். நான் உன்னை நம்பும் பக்கத்தில் நின்று தண்ணீர் தண்ணீர் என்று கதறுகிறேன். கைவிட்டு விடாதே. வைகையில் வெள்ளமாய் வா... தாவரங்கள் பாவம்! அவற்றைத் தழைக்கச் செய்... என்று இறைஞ்சுகிறேன். அழுத பிள்ளை பால்குடிக்குமாம்!

அழுதாச்சு... பால்? - வாரியார் சுவாமிகள் சொன்னது போல் நம்பிக்கை வைத்துவிட்டேன். கேள்விக் குறி ஆச்சர்யக் குறியாக வேண்டும். பார்ப்போமே...?

**(தரிசிப்போம்...)**

# நம் நாட்டுக்கீடாகுமா?



என்னவோ தெரியவில்லை, ஒரு மிக மோசமான முடிவை நோக்கியே நம் அனைவரின் வாழ்வும் சென்றுகொண்டிருப்பது போல் ஓர் எண்ணம் அவ்வப்போது தோன்றி என்னை உற்சாகமிழக்கச் செய்கிறது. அதற்குத் தோதாகவே கடந்த சில நாட்களில் நான் சந்தித்த என் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் கருத்தும் இருந்தது.

உறவினர் ஒருவர் தம் இரு மகன்களை வெளிநாட்டுக்கு அனுப்பி படிக்க வைத்து, அங்கேயே அவர்கள் நல்ல சம்பாத்தியத்தில் உள்ளனர். அந்த உறவினர் பிள்ளைகளோடு போய் தங்கி விட, விசாவுக்கு முனைந்து கொண்டிருந்தார்.

''நிரந்தரமா இனி வெளிநாடுதானா?'' என்று கேட்டேன்.

''தெரியாது. இங்கே திரும்பி வராமல் அப்படியே மேலே போய்விட வேண்டும் என்பதே விருப்பம்.'' என்றார்.

''அந்த அளவுக்குத் தாய்மண்மீது வெறுப்பு வந்து விட்டதா?'' என்றேன் பதிலுக்கு,

''இன்று சில பல காரியங்களுக்காக நான்கைந்து இடங்களுக்குப் போக வேண்டியிருந்தது. ஆட்டோவுக்கு மட்டுமே அறுநூறு ரூபாய் ஆனது. மீட்டர் போட்டிருந்தால் முந்நூறுகூட ஆகியிருக்காது'' என்றார்.

''இதற்கு நீங்கள் டாக்சியை அழைத்திருக்கலாமே?'' என்றேன்.

''என் அவசரத்துக்கு அவர்கள் வசப்படவில்லை. அவர்களும் டிமாண்டுக்கு ஏற்ப பணத்தைக் கறக்கப் பார்க்கின்றனர்'' என்றார்.

அப்படியே திரும்பி, ''நீங்கள் என்னமோ இந்த ஊரில் சகல சௌபாக்கியங்களுடன் சந்தோஷமாக வாழ்வதாக நினைப்பா? உங்களுக்கு இந்த நாட்டைவிட்டுப் போனால்போதும் என்று ஒருநாளும் தோன்றியதில்லையா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

''அப்படி எல்லாம் நினைத்த மாத்திரத்தில் போய்விட முடியுமா? போராட்டம் எங்கே இல்லை?'' என்றேன்.

''நல்ல கேள்வி... இந்த நாட்டைவிட மோசமான டிராஃபிக் மேல்நாடுகளில். ஆனாலும், 90 சதவிகிதம் பேர் விதிகளை பின்பற்றுவதால் மரணபயம் இல்லை. எந்த வகையிலும் நம் கலாசாரத்தைவிட உயர்ந்த கலாசாரம் கொண்ட ஒரு நாட்டை நான் பார்க்கவில்லை. ஆனால், தனிமனித ஒழுக்கம் இங்கே சிதறுவதுபோல் எங்காவது உண்டா? வோட்டுக்கே பணம் வாங்குகிறார்களே?

ஆக்ரமிப்பு இல்லாத ஒரு சாலையை, மேடு பள்ளமில்லாத ஒரு தெருவைக் காட்ட முடியுமா? பூவும் புல்லுமாய் ஒரு பூங்காவைப் பார்க்க முடியுமா? கட்டணம் கொடுத்து தரிசனத்தையே விலைக்கு அல்லவா வாங்குகிறோம்? இட்லி ஒரு ரூபாய் குடிக்க ஒரு லிட்டர் தண்ணீர் பத்து ரூபாய். இது என்ன விந்தைப் பொருளாதாரம்?



பொன் திருட்டு காலகாலமாய் உண்டு. லாரி லாரியாய் மண் திருட்டு என்பது எவ்வளவு பெரிய கொடுமை? மலை முழுங்கி திருடன் என்றுமிகைபட சொல்வோம். இன்று அது மிகையா? உண்மையா? எங்காவது சமாதியில ஒரு விஷயம் தொடங்கியது உண்டா?

ஒரு சாதாரண பிறப்புச் சான்றிதழை லஞ்சம் கொடுக்காமல் போனேன், வாங்கினேன் என்று கூறமுடியுமா? ஒரு டோல் கேட்டிலாவது, அங்கு வசூலிக்கப்படும் கட்டணத்தின் பின் உள்ள விகிதாசாரங்கள் அந்த ஊர் மாவட்ட கலெக்டருக்காவது தெரியுமா?''

என் உறவினர் என்னை உலுக்கி எடுத்துவிட்டார் தன் கேள்விக் கணைகளால்.

அவருக்குப் பொட்டில் அடித்தமாதிரி ஒரு பதிலை ஏனோ என்னால் கூறமுடியவில்லை. ஏன் என்றால் ஒவ்வொரு கேள்வியுமே அசைக்கமுடியாத நிஜம். வேண்டுமானால் அவர் பெரிதாகக் கருதும் வெளிநாட்டில் உள்ள சீர்கேடுகளை இதேபோல் பட்டியலிடலாம்.

குறிப்பாக வாரம் ஒருமுறை குளிப்பதே லக்சுரி என்கிற நிலையில் வாழ்ந்துவரும் ஈரான், ஈராக்கின் போர்க்களமான பாகங்களைக் காட்டி, சோமாலியா போல் சோற்றுக்குச் செத்த நாடுகளைக் காட்டி நாம் எவ்வளவோ தேவலை எனலாம்.

தேவலை என்றுதான் சொல்லலாம். நாம் சரியாகத்தான் இருக்கிறோம் என்று நெஞ்சை நிமிர்த்த முடியாது. ஆனால், நம் பழம்பெருமை எப்படிப்பட்டது?

உலக நாடுகளில் நம் நாடுபோல இயற்கையால் எல்லைகள் அமைந்த தேசம் ஒன்றைக் காட்ட

**எந்த வகையிலும் நம் கலாசாரத்தைவிட உயர்ந்த கலாசாரம் கொண்ட ஒரு நாட்டை நான் பார்க்கவில்லை. ஆனால், தனிமனித ஒழுக்கம் இங்கே சிதறுவதுபோல் எங்காவது உண்டா?**

முடியுமா? நான்கு திசைகளில் தலைபாகத்தில் அதாவது வடக்கில்தான் எல்லை நிர்ணயம் செய்து பாதுகாக்க வேண்டிய அவசியம். மீதமுள்ள கிழக்கு, மேற்கு, தெற்கில் சமுத்திரமே தண்ணீர் வேலி போட்டுத் தந்துவிட்டது.

நமக்குக் கிடைத்தாற்போல நீண்ட கடற்கரை, வேறு எந்த நாட்டிலாவது உண்டா? நமக்கு வாய்த்தது போல ஒரு இமயம் - அதன் கங்கை, பிரிதொரு நர்மதை, யமுனை, கிருஷ்ணா, கோதாவரி, காவிரி என்று மனிதனின் மனநலனோடு சம்பந்தத் தொடர்பு கொண்ட ஆறுகள் எங்காவது உண்டா?

சில நாடுகளில் ஒன்று இருந்தால், ஒன்று இருக்காது. காரணம் அதன் பருவநிலை. நமக்கு மட்டுமே ஆறு பருவகாலச் சூழல்! சம இரவு, சம பகல் பொழுதுகள்!

இங்கு வளரும் தென்னையோ, துளசியோ உலகெங்கும் வளரும் என்று கூறமுடியாது. ஆனால், உலகில் உள்ள சகலமும் நம் மண்ணில் வளரும்.

நமது பல்லாயிரம் ஆண்டுத் தொன்மை, மொழி வளம், அதற்கான இலக்கணம், இதிகாசம், புராணம், காவியம், கலைச் சிற்பங்கள் எவரிடம் உண்டு? உடம்பை வென்ற சித்தர் முதல் உள்ளம் வென்ற கவிஞன்வரை நம்மில் குவிந்து கிடப்பதுபோல வேறு எவரிடம் உள்ளனர்?

இப்படிச் சொல்வது பிறரைத் தாழ்த்தி நோக்கி அல்ல. நாம் இயற்கையாலும், செயற்கையாலும் குறைவற்றவர்கள் என்று சொல்வதே என் நோக்கம்?

எப்போதும் காய்த்த மரத்துக்கே கல்லடி! அதனால் தான் எந்த ஒரு நாடும் நம் தேசம் கொள்ளை போனது போல போனதில்லை. எல்லா இனத்தவர்களும் ஆண்டு களித்துவிட்டனர். முன்பு பிறமொழி மதத்தவர்களிடம் நம்மை இழந்தோம். இப்போது நம்மிடமே நாம் நம்மை இழக்கும் ஒரு ரவுண்டுதொடங்கி விட்டது போலும்.

இத்தனை உதாரணங்களும், வழிகாட்டுதலும் இருந்தும் இன்று இந்த ஊரே வேண்டாம் - இங்கே நல்வாழ்வு வாழமுடியாது என்று சிலரல்ல, பலர் எண்ணவேண்டி வந்துவிட்டதே?

**(தொடரும்)**

சமீபத்தில் மிக வருத்தமான அனுபவத்துக்கு ஆளானேன்.

மதுரையில் உள்ள என் வீட்டில் இருந்து விமான நிலையம் நோக்கிப் பயணப்பட்டபோதுதான் அந்த அனுபவம் ஏற்பட்டது. விமான நிலையத்துக்கு வழக்கமான சாலையில் சென்றபோது குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஒரே கூட்டம். 'சாலை மறியலா?' என்று எட்டிப் பார்த்தேன். புதிதாக ஒரு டாஸ்மாக் பார் அந்தப் பகுதியில் திறக்கப்பட்டிருந்தது. அதன்முன் ஒரு இருநூறு பேராவது இருப்பார்கள். மது விற்பவரோ சிறைச்சாலை போல் ஒரு கூண்டுக்குள் உட்கார்ந்துகொண்டு மிகப் பாதுகாப்பாக விற்றபடி இருந்தார். அந்தக் கூண்டு முன் அப்படி ஒரு முட்டல் மோதல்!

எவ்வளவு முயன்றும் அந்த வழியைக் கடக்க முடியாமல் அப்படியே ஒரு குறுக்குச் சந்தில் புகுந்து மாற்றுப் பாதையில் போக எண்ணினேன். பெரிய கொடுமையாக அங்கேயும் ஒரு புது பார்! குடியிருந்த வீட்டையே பார் ஆக்கி ஜன்னல் வழியாக அங்கே வியாபாரம்! அந்தத் தெருவெங்கும் குடிமகன்கள் ஓட்டிவந்த டூவீலர்கள் தெருவையே அணைத்தபடி நின்று இருந்தன. தெருவில் வசிப்பவர்கள் முகமெல்லாம் ஒரே இருள்! எனக்குத் தெரிந்து டாஸ்மாக் பார்கள் இங்கே நினைவு தெரிந்த நாட்களாகவே உள்ளன. ஆனால் ஒரே இரவில் ஊரில் உள்ள அவ்வளவு பேருமே குடிகாரர்களாகிவிட்டது போல் இப்படி ஒரு கூட்டத்தை, தள்ளுமுள்ளை நான் கண்டதேயில்லை. காரைவிட்டு இறங்கி இடையூறாக நின்றபடி இருக்கும் டூவீலர்களை நகர்த்தி நகர்த்தி வைத்துவிட்டு ஏர்போர்ட் போய்ச் சேர்வதற்குள் நான் பயணிக்க வேண்டிய விமானம் விண்ணில் ஏறிவிட்டது. ஒரு கணம் அந்த விமானத்தில் இருந்து நான் உருண்டு பூமி நோக்கி விழுவதுபோல் இருந்தது. பிறகே தெரிந்தது. இந்தப் புதிய பார்கள் அவ்வளவும் நெடுஞ்சாலைகளில் கூத்தடித்தவை. யாரோ ஒரு நீதிபதி அங்கே தடை விதிக்கப்போய் அவை மக்கள் சகஜமாக வாழும் தெருக்களில் வெட்ட வெட்ட தழைக்கும் கருவேலங்கள் போல முளைத்துவிட்டன. எனக்கு அந்த நீதிபதி மேல்தான் முதலில் கோபம் வந்தது. அடுத்து பார்களின் முன்னால் வரிசைகட்டி நின்ற இளைய தலைமுறையின் மேல்.

அந்தக் காட்சி என் கண்ணைக் கரித்தது! நெஞ்சு மிகவே நடுங்கத் தொடங்கிவிட்டது.

வருடத்துக்கு ஒருமுறை - ஒரேமுறை - ஒரு சில நாட்கள் மட்டுமே நடக்கும் ஏறு தழுவுதல் எனப்படும் ஜல்லிக்கட்டுக்காக அதில் இறங்கும் மிக அதிகபட்சம் ஒரு ஐந்தாயிரம் பேருக்காகப் பத்து லட்சத்துக்கும் மேல் திரண்ட இளைஞர் படை இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறது. அதன் கண்கள் குருடாகி, காதுகள் செவிடாகிப்போனதா? இல்லை ஒரு தொலைக்காட்சி நிகழ்வில் தமிழருவி மணியன் கூறியதுபோல குடிப்பவர்களில் இளைஞர்களே அதிகம் என்பதால் அவர்கள் இதற்கெல்லாம் கூட மாட்டார்களா? எது நிஜம்...?

ஹெல்மெட் போடாமல் போனால் எலியைப் பிடிக்கும் பூனைபோல பாய்ந்து வரும் போலீஸ் ஒரு



# கண்ணகி சொன்னது பலிக்கவில்லை!

தெருவே பார்க்க, ஊரே பார்க்க குடித்துவிட்டு டூ வீலரில் பயணிப்பவர்களை ஏன் கண்டு கொள்வதில்லை?

அப்புறம் பாரில் அதை விற்பவர்கள் ஈ ஓட்டு வார்கள் என்பதால் அவர்களைக் கண்டு கொள்ள வேண்டாம் என்று அரசாங்கமே சொல்லிவிட்டதோ? ஏன் என்றால் இதை நடத்துவதே அரசாங்கம்தானே?

'இல்லையில்லை பிடிக்கத்தான் செய்கிறோம்' என்றால் நிச்சயம் அது கண்துடைப்பே! இப்படியே போனால் தமிழ்நாட்டின் எதிர்காலத்தை என்னால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியவில்லை.

ஜன நெருக்கடி மிகுந்த மும்பையில் போக்குவரத்தில்தான் திணறல். மும்பையைவிட போக்குவரத்துச் சிக்கல் கொண்ட கொல்கத்தாவில், ஹைதராபாத்தில், பெங்களூருவில் என்று எங்குமே இதுபோல் குடிப்பதற்காக வரிசையில் நின்றதையோ முட்டி மோதிக் கொண்டதையோ, குடித்துவிட்டு சாலையோரமாகக் கிடப்பவர்களையோ நான் பார்க்கவில்லை.

இந்தப் பாழாய்ப்போன மதுவால் அழியத்தான் இந்தத் தமிழ் இனம் இன்னமும் இருக்கிறதா?

பாதிக்குப் பாதி குடிகாரர்களை வைத்துக்கொண்டு நாடாள்வதில் ஆட்சியாளர்களுக்குத்தான் என்ன பெருமை இருந்துவிட முடியும்? கடைகளை மூடினால் கள்ளச்சாராயம் குடித்துச் செத்துப் போவார்கள் என்று இதற்கும் ஒரு பதில் குரல் கொடுப்போர், இந்தச் சாராயம் குடித்து உடனே சாகாமல் மெல்லச் சாவதை வரவேற்கிறார்களா? இப்படி எத்தனை கேள்விகள் கேட்டாலும் இம்மட்டில் அரசாங் கத்தின் காதுக்கு அது கேட்காது என்பதுதான் உண்மையோ? 33,000 கோடிக்கு இதனால் வருமானம் கிடைக்கிறதாம். இந்த வருமானம் மட்டும் இல்லாவிட்டால் இலவசங்களை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதாம். புள்ளி விவரமாய் பதில் தருகிறார்கள்.

'பசியால் தவிப்பவனுக்கு மீன் தருவது நல்லதே - அதைவிட நல்லது, மீன் பிடிக்கக் கற்றுத் தருவது. ஏன் என்றால் அதுவே நிரந்தரமாக அவன் பசியைப் போக்கும்' என்பார்கள்.

ஒரு தனி மனிதனிடமே இவ்வளவு பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்றால், ஒரு சமூகத்திடம் எத்தனை பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்? பெண்கள் அழுத தேசம் நன்கு வாழ்ந்ததேயில்லை. அவர்கள் பொங்கி எழுந்தாலே நாடே சாம்பல்தான்.

இதைத்தான் சிலப்பதிகாரமும் சொல்கிறது! பாண்டியன் நீதி தவறியதற்காக ஒரு ஊரையே அதாவது மதுரையையே கண்ணகி எரித்தாள் என்பது சிலர் வரையில்தான் ஏற்புடையதாக இல்லை. உண்மையில் அதன் உட்பொருள் வேறு. இப்படி ஒரு மன்னனின் ஆட்சியில் நீங்கள் தொடர்ந்து வாழ் வதற்கு, தீக்கு இரையாவது மேல் என்றும், தண்ணீர் கொண்டு கழுவினாலும் போகாத நாட்டின்மேல் படிந்த அநீதியின் கரையை நெருப்பாலேதான் போக்க முடியும் என்றும், ஒரு புதிய பூமி தோன்றட் டும் என்றும் பலவாறு எண்ணியே கண்ணகி மதுரையை எரித்தாள் என்பார்கள்.

அப்படி நாடே எரிந்து சாம்பலானால்தான் தமிழகத்துக்கும் விமோசனமா? அதனால்தான் கதிரவனும் எப்போதும் இல்லாதபடி இப்படிக் காய்கிறானா?

(தொடரும்)

மக்கள் சகஜமாக வாழும் தெருக்களில் வெட்ட வெட்ட தழைக்கும் கருவேலங்கள் போல முளைத்துவிட்டன.



சென்னை தி.நகரில் உள்ள கிருஷ்ண கான சபாவில் நான் தொடர் சொற்பொழிவாற்றிய சமயம். என் உரையைக் கேட்க பெருங்களத்தூரில் இருந்து ஒரு பெண்மணி தவறாமல் வந்து கொண்டிருந்தார்.

உரையின் முடிவில் காத்திருந்து என்னைச் சந்தித்து அவர். தாம் கைப்படச் செய்த இனிப்பு, மாவுருண்டை போன்றவற்றைத் தருவார். மறுத்தால் மனம் வருந்துவார் என்று நானும் ஏற்றுக்கொள்வேன். அன்பாக இப்படித் தருவதோடு சரி. ஒரு நாள் பேசினார்.

''தினமும் உங்கள் உரை கேட்க வருகிறேன். ட்ரமடைங் செய்து நாவல்டியாக நீங்கள் பேசுவது மிகவும் பிடிக்கிறது. உங்கள் பேச்சை எவர் பாணியோடும் ஒப்பிட முடியாதபடி தனித்தன்மையோடும் உள்ளது. உச்சரிப்பு, குரல்வளம் அற்புதம். ஆனால்...'' என்று இழுத்தார்.

அந்த 'ஆனால்' என்கிற ஒரு வார்த்தை அவர் என்னைப் பற்றிச் செய்த சகல விமர்சனங்களையும் புறந்தள்ளி அவரைக் கூர்மையாகப் பார்க்கச் செய்தது.

''என் பேச்சுல நீங்க சுட்டிக்காட்ட முடியாத அளவு



# கடவுள் வேறுபாடுகளுடனா படைப்பார்?

ஏதாவது தப்பு இருக்கா?''

''அதெல்லாம் இல்ல. ஒரு விஷயத்துக்கு உங்ககிட்டயும் இதுவரை பதில் கிடைக்கல. இனியாவது கிடைக்குமான்னும் தெரியல.''

''எதும்மா அந்த விஷயம்?'' என்று நான் கேட்க, ''இந்த பூமில இப்ப நாம பார்க்கற ஒரு நல்லவன் கஷ்டப் படறதுக்கும், தப்பு பண்றவன் சந்தோஷமா வாழறதுக்கும் எது காரணம்?'' என்று பதிலுக்கு அவர் கேட்டார்.

ஒரு 'மில்லியன் டாலர்' கேள்வியிடம் நான் சிக்கிக் கொண்டுவிட்டதை அடுத்த நொடியே உணர்ந்தேன். நான் யோசிக்கும்முன், அந்தப் பெண்மணி அடுத்து பேசத் தொடங்கிவிட்டார்.

''எல்லாத்துக்கும் பூர்வஜென்ம புண்ணியம்தான் காரணம். இப்ப தப்பு பண்றவன் பின்னால அனுபவிப்பான்னும் தயவு செய்து சொல்லாதீங்கோ. வாழ்க்கைங்கறது தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்பது தான். ஒருத்தன் தெரிஞ்சே தவறா வாழ்ந்து பின்னால கஷ்டப்பட்றதால என்ன பிரயோஜனம்? அவனைத் தடுக்கவும் முடியல. நல்லவிதமா வாழறவன் கஷ்டப்படாம இருக்கவும் முடியல. இதுக்கு ஒரு சரியான பதிலை உங்ககிட்ட எதிர் பார்த்துதான் நானும் தினசரி வரேன். இதுவரை நீங்க அதுக்கு ஒரு பதில் சொல்லலை'' என்றார்.

அதன்பின் அவர் சொன்ன சில விஷயங்கள் என் மனதை மிகவும் பாதித்தன.

''மூளை வளர்ச்சியில்லாத பெண். இப்போது வயது இருபது ஆகிறது. சகலத்தையும் அவள் தாயே செய்தாக வேண்டும். அவளை விட்டுவிட்டு அப்படி இப்படி நகரமுடியாது. இப்படி ஒரு சுமையை உங்களால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. சொல்லவும் மனம் வரவில்லை, வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. இத்தனைக்கும் தர்மத்தை ஒரு அன்றாடக் கடமையாகக்கொண்டது அந்தக் குடும்பம். இது ஒரு பக்கம்.

மறுபுறம் கந்துவட்டி தொழில் செய்யும் ஒரு குடும்பம். பணம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுகிறது. திரும்பின பக்க

மெல்லாம் அக்குடும்பத்துக்குச் சொத்துக்கள் தெருவே அவர்களைக் கண்டு பயப்படும்படியான வாழ்க்கை. இந்த இரு குடும்பமும் ஒரே தெருவில்தான் உள்ளன. இந்தக் குடும்பங்களைப் பார்க்கின்றவர்கள் நல்லவிதமாய் வாழ ஆசைப்படுவார்களா? இல்லை சாதுர்யம் மட்டுமே வாழ்க்கை என்று எண்ணுவார்களா?''

அந்தப் பெண்மணி கேட்டுவிட்டுப் புறப்பட்டார். என் மனத்தில் பாரம் ஏறிவிட்டது. அப்பெண்மணியின் கேள்விக்குரிய விஷயங்கள் நம் சமூகத்திற்கு ஒன்றும் புதியதில்லை. இதற்கு ஒரு நெத்தியடி பதில் நம்மில் எவரிடம் உள்ளது? யோசிக்கத் தொடங்கினேன். காஞ்சிப் பெரியவர் எனக்குள் பதிலளிக்கத் தயாரானார்.

**''மனிதப் பிறப்பு மிக அரிதானதே. அதேசமயம் அரிதான இப்பிறப்பின் அடிப்படை நோக்கமே திரும்பப் பிறவாதபடி ஒரு முக்தி நிலையை அடைய வேண்டும் என்பதுதான். 'முக்தி' என்பது உயிர்களின் முடிவான நிலை. அதாவது ஒரு தேர்வில் வெற்றிபெறுவது போன்றது. தேர்வு எனும்போதே அங்கே வெற்றி, தோல்வி என்று இரண்டு விஷயங்கள் வந்துவிடுகின்றன. பல காரணங்களால் இத்தேர்வில் மட்டும் ஆயிரத்துக்கு ஒருவரோ இருவரோதான் தேர்வாகின்றனர். மற்றவர்கள் தோற்றுப்போய் திரும்பப் பிறக்க நேர்கிறது. அப்பிறப்பும் அவர்களின் கர்மவினைக்கேற்ப அமைகிறது''**



பிராந்தர்

இது பெரியவர் கருத்து. சரி, எதைக்கொண்டு இதை உணர்வது?

ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி பெரியவரை தரிசிக்கிறாள். ''கடவுள் கருணைமயமானவர். அவரை நாம் சரண்புகுந்துவிட்டால் போதும். நம் தவறுகளை மன்னித்து நமக்குச் சொர்க்கத்தில் இடமளிக்கிறார். இது எங்கள் மதக் கருத்து. நீங்களும் கடவுளை, கருணைமயமானவர் என்கிறீர்கள். ஆனால் புண்ணியம் செய்தாலே சொர்க்கம். பாவம் செய்தால் நரகத்தில் தண்டனை என்கிறீர்கள் இது ஒருவித நிர்வாகமுறையல்லவா?'' என்று கேட்கிறார்.

''ஆம் நிர்வாகமுறைதான்'' எனும் பெரியவர், ஒரு பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கு பிறக்கும் குழந்தைகளைக் கவனித்துவிட்டு வரச் சொல்கிறார். வந்தபின் அந்தப் பெண்மணியும் அங்கு தாம் பார்த்த பிறந்த குழந்தைகளைப் பற்றிச் சொல்கிறார்.

''மொத்தமாய் பல குழந்தைகள் பிறந்தன. ஒன்று கறுப்பு, ஒன்று சிவப்பு, ஒன்று மாநிறம், ஒன்று பணக்கார வீட்டுக் குழந்தை, ஒன்று ஏழைக் குழந்தை'' என்று வேறுபாடுகளைக் கூறுகிறார்.

''கருணை மிகுந்த கடவுள் படைக்கும்போதே இத்தனை வேறுபாடுகளுடனா படைப்பார்?'' என்று அப்பெண்மணியிடம் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டார் பெரியவர். அப்பெண்மணியிடம் திகைப்பு.

''உயிர், உடல், பிறப்பு, இறப்பு இதெல்லாமே ஓர் அற்புத சிருஷ்டி. இந்த சிருஷ்டியில் அசைபவை, அசையாதவை என்று இரண்டு விதம்.

அசைபவை மாறிக்கொண்டேயிருக்கும். அசையாதவை அப்படியே இருக்கும். உதாரணத்துக்கு மண்ணையும் மரத்தையும் சொல்லலாம். மனித வாழ்வு இதில் அசையும் ரகம். எனவே மாற்றங்கள் உண்டு. மாற்றம் ஒன்றே மாறாதது. மாறினாலே வாழ்வும் சுவாரஸ்யப்படும். இந்த மாற்றங்களில்தான் நல்லது, கெட்டது என்று இரண்டும் உள்ளது. இந்த இரண்டையும் சமன் செய்தாலே பிறப்பது நிற்கும். நன்மை செய்தாலும் அதற்கான பயனை அனுபவிக்கப் பிறக்க வேண்டும். தீமைக்கும் இது பொருந்தும். இதை ஒரு வார்த்தையில் கர்மவினை என்கிறோம். இந்தக் கர்மவினைக்குள் கடவுள் தலையிடுவதில்லை. தலையிட் டால் அது நல்ல நிர்வாகமாகாது'' என்ற பெரியவர் தொடர்ந்தார்,

''இதைக் கதை வடிவில் சொல்பவைகளே எங்கள் புராணங்கள். இந்தக் கர்மவினைகளைக்கூட இரு வகைப்படுத்தலாம். ஒன்று சஞ்ஜிதம். இன்னொன்று பிராரப்தம். சஞ்ஜிதம் மாறாதது. ஊனப் பிறப்பு முதல் ராஜாவின் மகனாகப் பிறப்பதுவரை இதுவே தீர்மானிக்கிறது. பிராரப்தம் மாறுதல்களுக்கு உரியது. பரிகாரங்களால் இக்கர்மங்களில் இருந்து விடுபெறலாம்'' என்றார்.

பரிகாரத்துக்கும் கட்டுப்படாததை பிராந்தர் போல் ஏற்றுக்கொள்வதே சரியான செயல்பாடு என்று எனக்குப் பின்னால் தோன்றியது. பிராந்தர் ஒரு சித்தர். ஒரு பாறையை மலை உச்சிக்குக் கஷ்டப்பட்டு உருட்டிக்கொண்டு போவார். அதற்கு ஒருநாள் ஆகும். அங்கிருந்து உருட்டிவிடுவார். அதற்கு ஒரு நொடி ஆகும். இதன் மூலம் ஆக்குவது கடினம் - அழிப்பது சுலபம் என்கிற கருத்தை ஊருக்குச் சொன்னவர்.

பெரியவர், வெள்ளைக்காரப் பெண்மணிக்குச் சொன்ன விளக்கத்தில்தான் எத்தனை ஒளி. பிராந்தரின் வாழ்வும் நமக்கு ஒரு பதிலல்லவா?

என் உரையைக் கேட்டு கேள்விகேட்ட பெண்மணி இக்கட்டுரையைப் படிப்பார் என்று நம்புகின்றேன்.

**(தொடரும்)**



# 'கை' பேசிக்கு கட்டுப்(ெ)பாடு!

இப்போதெல்லாம் கைபேசியை நான் பேசுவதற்கு மட்டுமே அதிகம் பயன்படுத்துகிறேன். அதனுள் அடங்கிக்கிடக்கும் வாட்ஸ் அப், ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற நவீன தொடர்புகளுக்குள் போகவே பயமாக இருக்கிறது. சில காட்சிகள் மனதைப் பிசைந்து அன்றைய தினப் பொழுதையே பாரமாக்கி விடுகின்றன.

நம் நாட்டு வீரர் ஒருவரை பாகிஸ்தான் நாட்டு ராணுவம் சித்திரவதை செய்து தலையையே துண்டித்து விடுகின்றனர்.

அரபு நாடு ஒன்றில் வேலைக்குச் சென்ற பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை, ஐந்து வயது பெண் குழந்தையைப் பிரம்பால் அடிக்கும் கிராதக பெண்மணி, வயோதிக மாமியாரைத் துன்புறுத்தும் மருமகள், வாயில்லா ஜீவன்களை இம்சிக்கும் கூட்டம்.

இப்படி, இரண்டு நாளில் நான் பார்த்த சில காட்சிகள் என்னை ஒரு சமயம் வெறி கொள்ள வைக்கின்றன. ஒரு சமயம் கோழையாக்கிக் குறுக்கிப் போடுகின்றன.

கைபேசியை விஞ்ஞான உலகம் கண்டுபிடித்தது. இதைப் போன்ற கொடுமைகளைப் பரப்பவா… இல்லை தொடர்புகள் வளர்ந்து மனித சமூகம் தழைப்பதற்கா? இதுகுறித்து சிலரிடம் பேசினேன்.

''நீங்க ஏன் சார் அந்தக் கண்றாவியையெல்லாம் பாக்கறீங்க?'' என்றனர். 'ஜஸ்ட் லைக் தட்' போக்கையே நான் பலரிடமும் பார்த்தேன். சிலர் வருந்தினர். ''என்ன சார் பண்றது - கலிகாலமாச்சே?' என்ற காலத்தின் மேல் பழிபோட்டனர். 'எவ்வளவோ நல்ல விஷயங்களும் இருக்கே சார். அதைப் பாருங்க'' என்று சிலர் சமாளித்தனர்.

ஆயிரம் நல்ல விஷயங்கள் தரும் ஒரு சுகத்தை ஒரு கெட்ட விஷயம் நொடியில் ரணமாக்கி விடுகிறதே? இதை என்னவென்று சொல்ல?

எனக்கென்னவோ இந்தக் கைபேசி வரையில் எமர்ஜென்சி போல் ஒரு கடுமையான கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும் என்று தோன்றுகிறது. உண்மையில் இது ஒரு மகா அதிசயம். எவ்வளவு தொலைவில் இருப்பவரையும் தொடர்பு கொள்ள முடிகிறது. அவரைப் பார்த்தபடியே பேச முடிகிறது. காட்சி பதிவாக்கி அதை எவ்வளவு முறைவேண்டுமானாலும் பார்க்க முடிகிறது. இத்தனை பெரிய விஷயம் மலியப் போய்தானே இதில் கொடியவையும் கொட்ட மடிக்கின்றன? இதைத் தடுக்கவே முடியாதா? ஒரு தெருப் பிச்சைக்காரனைப் பார்த்தும் பார்க்காமல் போவது போல் நாம் கண்டும் காணாதவராகத்தான் இருக்க வேண்டுமா? வேறு வழியே கிடையாதா?

அமெரிக்காவில் நம்மவர் ஒருவர் ஹோமம் செய்ய எண்ணினார். வெரட்டி எனப்படும் எரு முட்டைக்கு எங்கே போக? அமேசான் டாட்காம் எனும் ஒரு நிறுவனமோ அதை

அவரிடம் கொண்டு சேர்த்து விட்டது.

'இப்படி ஒரு மனிதன் வரையில் அவனது அடிமையாக நண்பனாக ஆசானாக பாதுகாவலனாக என்று எல்லாமுமாய் இருக்கும் கைபேசியை, நாம் தான் கட்டுப்பாட்டோடு பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டுமேயன்றி, அதைக் கட்டுப்படுத்த முயல்வது முட்டாள்தனம்' என்றும் ஒரு கருத்து... இதில் எது சரி? எந்த ஒரு விஷயத்துக்கும் இரு பக்கங்கள் இருப்பது போல், கைபேசிக்கும் இரண்டு பக்கங்கள். அதன் முரட்டுப் பக்கத்திடம் சில சமயம் சிக்கிக் கொள்ளும்போது அது இப்படி எல்லாம் மிரளச் செய்கிறது.

யாவது டி.வி.க்குப் பக்கத்திலேயே அது இருந்து பார்த்திருக்கீங்களா? சோபா இடுக்கு, டைனிங் டேபிள் கட்டிலுக்குக் கீழ்... இப்படித் தானே அது கிடக்கும்... தேடி எடுத்து அதை நாலு தட்டு தட்டினா தானே அதோட லூஸ் காண்டாக்ட் சரியாகி அதுவும் வேலை செய்யும். அப்புறம் ஜம்பமா நாமளும் அதைப் பார்ப்போம். உலகத்தையே வீட்டுக் கூடத்துக் குள் கூட்டிக்கிட்டு வந்துட்ற அந்த டி.வி.யும் ரிமோட்டும் இந்தக் கைபேசிக்கு எதுல குறைஞ்சது? ஆனாலும், காசு கொடுத்து வாங்க முடியும்கறதாலயும், எப்படி அது இயங்கறதுங்கறது தெரிஞ்சதாலயும் அதை நமக்கு பயன்பட்ற ஒரு பொருளாதானே



கடவுளும் கண்ணுக்கு புலப்பட்டுட்டார்னா, அப்புறம்னு மனுஷன் அவரையும் இந்த டி.வி., கைபேசியோட சேர்த்துடுவான் சார். அவர் கில்லாடி... தாம் படைச்ச மனுஷங்ககிட்ட மாட்டி மதிப்பிழந்து போக அவர் தயார் இல்ல... அதான் அவர் காட்சி தருவதேயில்லை!

இதுகுறித்தெல்லாம் நண்பர் ஒருவரிடம் நான் பேசிக்கொண்டிருந்தபோது ''கடவுள் ஏன் கண்களுக்குப் புலனாகாமலே இருக்கிறார் என்பதற்கு எனக்கு இப்போது விடை கிடைத்துவிட்டது'' என்றார்.

நானும் கூர்மையானேன்.

''ஆமாம் சார்... இந்தக் கைபேசி மட்டுமல்ல, நம்ம வீட்டுத் தொலைக்காட்சியும் கிட்டத்தட்ட கைபேசி மாதிரிதானே? நான் தொழில் நுட்பத்துல சொன் னேன்...'' என்றவர், ''எந்த வீட்டுலயாவது நூறு சதவிகிதம் தட்டாம வேலை செய்யற ரிமோட் இருந்து பார்த்திருக்கீங்களா? என்று கேட்டார்.

''தட்டாமலா?''

''ஆமாம் சார்... பேண்டேஜ், பிளாஸ்திரி போடாம, பிசுக்கு அழுக்கு இல்லாம, எந்த வீட்ல

பார்க்கறோம். அதை நாம விழுந்து கும்பிடவா செய்யறோம்?''

''அதனால?''

''என்ன அதனால... கடவுளும் கண்ணுக்கு புலப் பட்டுட்டார்னா, அப்புறம்னு மனுஷன் அவரையும் இந்த டி.வி., கைபேசியோட சேர்த்துடு வான் சார். அவர் கில்லாடி.... தாம் படைச்ச மனுஷங்க கிட்ட மாட்டி மதிப்பிழந்து போக அவர் தயார் இல்ல... அதான் அவர் காட்சி தருவதேயில்லை'' என்றார்.

கைபேசிக்குக் கவலைப்படப்போக கடவுள் ஏன் காட்சிப்படவில்லை என்பதற்கு விடை கிடைத்ததை எண்ணி வியக்கிறேன். ஆனாலும் நான் வருந்திய விஷயங்களுக்கெல்லாம் எந்த வகையில் இருக்கிறது தீர்வு?

தொடரும்

சித்தர்களையும், சித்த இலக்கியங்களையும் ஆய்வு செய்து ஒரு நூல்! என் அணிந்துரைக்காக அதை எழுதியிருந்த திரு பா.கமலக்கண்ணன் எனும் அன்பர் எனக்கு அனுப்பியிருந்தார். மேம்போக்காய் நுனிப்புல் மேயாமல் சித்தர்களின் சமாச்சாரங்களை ஆழமாக அணுகியிருந்தார். பொதுவாக சித்தர்கள் பற்றி எழுதவும், சிந்திக்கவும் ஒரு பிரத்யேக முனைப்பு வேண்டும். அவர்கள் சார்ந்த விஷயங்கள் மிக அலாதியானவை!

''உலக உயிரினங்களில் மாட்டுக்குக் கொம்பு, சிங்கம், புலிக்கு நகம், பற்கள், பாம்புக்கு விஷம், பறவைக்கு சிறகு, மீனுக்கு எல்லாப் புறமும் பார்க்க செல்லவுமான ஆற்றல், நாய்க்கு மோப்ப சக்தி, ஆமைக்கு ஓடு'' என்று சகலத்துக்கும், அது பாதுகாப்பாய் வாழ ஒரு பலத்தை அளித்த கடவுள், மனிதனுக்கு இப்படி எதையும் தராமல் 'ஆறாம் அறிவு' என்கிற ஒரு சமாச்சாரத்தை மட்டும் தந்தான். மனிதனோ இதைக் கொண்டு யானையைக் கூட ஒரு முழ அங்குசத்தால் அடக்கி விடும் சாதுர்யமிக்கவனாகி விட்டான். உண்மையில் மேலான ஆறாம் அறிவை அளித்தது சக உயிரினங்களை வெற்றி கொண்டு வாழ்வதற்காக அல்ல... தன்னை அறிவதற்காக'' என்பார் காஞ்சி பெரியவர்.

இந்த தன்னையறிதல் என்பதன் பின்னே பல வழிமுறைகள்!

இதில் எதோடும் ஒட்டாத ஒரு வழிமுறைதான் சித்த வழிமுறை! இதை சித்தர்களைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம். எந்த ஒரு சித்தனுக்கும் இயற்பெயர் கிடையாது. இடைக்காடன், குதம்பையார், பாம்பாட்டி, காலாங்கி, கருவூரார், பிராந்தர், சிவவாக்கியர், புலிப்பாணி, போகன், தேரையர் - என்று நீங்கள் யாரை எடுத்துக் கொண்டாலும் இவர்கள் பெயர் இவர்கள் செய்த ஒரு செயலை ஒட்டி அமைந்த காரணப் பெயர்தான்! இவர்கள் தாய் தந்தையர்கள் யார், இவர்கள் பிறந்த ஊர், இடம்... என்று எல்லாமே மர்மம்தான்.



ஆனால், இவர்களில் பலர் சின்ன நட்சத்திரத்தில் இந்த இடத்தில் வாழ்ந்தார்கள் என்றும், இவர்கள் அந்தமான அதாவது சமாதியான இடம் பற்றியும் சில குறிப்புகள் உள்ளன. இதில் சமாதியைப் பார்த்து ஏற்க முடிகிறது. ஆனால் நட்சத்திரத்தை என்னால் ஏற்க முடியவில்லை. நட்சத்திரம் தெரிந்தால் தாய் தந்தை யார் என்பதும், இனம், குலம், ஊர், என எல்லாம் தெரிந்துவிடும். ஏனோ தெரியவில்லை. சிலர் வரையில் மட்டும் எல்லா குறிப்புகளும் உள்ளன. பலர் வரையில் எல்லாமே செவிவழிச் செய்திகள்தான்.

பொதுவில் ஆன்மிகம் சார்ந்த விஷயங்களே மிக ஆழமானவை, ஆண்டாளின் திருப்பாவையின் 13ம் நாள் பாசுரத்தில் வரும் 'வெள்ளியெழுத்து வியாழம் உறங்கிற்று' எனும் வரிகளுக்குக்கூட மிகச் சரியான ஒரு பொருளை இதுவரை யாரும் சொன்னதில்லை என்றும் ஒரு கருத்துண்டு.

இருந்தாலும் சிலர் அழுது அடம்பிடிக்கும் ஒரு குழந்தையை தாஜா செய்து இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு விடுவது போல எப்படியோ இந்த சித்த சமாச்சாரங்களை அணுகி, நம்மையும் ஆச்சர்யப்படுத்தி விடுகின்றனர்.

அவர்களில் இந்தக் கமலக்கண்ணனும் ஒருவர். நானும் சித்தர்கள் குறித்து நிறைய எழுதியுள்ளேன். சித்தர்களை நெருங்கும் போதெல்

# சித்தர் போக்கு! சிவன் போக்கு!

லாம் நான் ஒரு தடையற்ற சுதந்திரத்தை உணர்வேன். இவர்களிடம் எனக்கு மிகப் பிடித்த விஷயம். இவர்கள் எதையும் ஆட்டிப் படைப்பவர்களாக இருப்பது தான்! அதை இவர்களின் செயல்பாடுகளில் இருந்து நான் உணர்ந்துள்ளேன்.

ஒருமுறை பொள்ளாச்சியிலுள்ள திருநாச்சிமுத்துக் கவுண்டர் கல்லூரி ஒன்றின் தமிழ் மன்ற விழாவில் பேசச் சென்றிருந்தேன். வழியில் பொள்ளாச்சியின் செவ்விளநீர்க்காய்கள் கண்களைப் பறிக்க காரை ஓரம் கட்டி நிறுத்தினேன். பின் இளநீர் குடித்த படிநின்றபோது ஒரு அழுக்கு மனிதர் என் முன் வந்து தலையைச் சொறிந்தார். இளநீர் கேட்கிறார் என்பது புரிந்து அவருக்கும் ஒன்று தரச் சொன்னேன். அவரும் வாங்கிக் குடித்தார். பதிலுக்கு ஒரு நன்றியோ, புன்னகையோ எதுவுமில்லை. பிரதிபலன் கருதாத பக்குவம் என்னுள் இருப்பதால் நானும் சலனப்படவில்லை. அதே சமயம் காரில் வந்த ஒரு பட்டு வேட்டிக்காரர் காரை விட்டு இறங்கி அவரை நாடிச் சென்று தார்ரோடென்றும் பாராமல் அவர் காலில் விழுந்தார். அந்த அழுக்கு மனிதர் லட்சியமே செய்யவில்லை. என் முகக் குறிப்பறிந்த இளநீர் கடைக்காரர் தான் அதன்பின் பேசினார்.

'சார்... இது தினசரி நடக்கிற விஷயம். அவர் ஒரு சித்தர். அவர் உங்ககிட்ட கேட்டு வாங்கிச் சாப்பிட்டது நான்கற அகங்காரத்தை ஜெயிக்க... பணக்காரரைக் கண்டுக்காம போறது மாயையை ஜெயிக்க... இதை அவரே சொல்லி நான் கேட்ருக்கேன்' என்றார்.

எனக்கு அந்த இளநீர் கடைக்காரர் ஒரு வினாடி புத்தராகவும் அந்தப் புளிய மரத்தடியே போதி மரத்தடியாகவும் தோன்றியது. இப்படியான சித்த அனுபவங்கள் நிறைய உண்டு.

**ம**துரையில் பழனிச் சித்தர் என்பவரின் பக்தர்களால் அவர் சிலை திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் முதல் பலர் பங்கேற்ற நிகழ்வில் எனக்கும் அழைப்பு... நிகழ்ச்சிக்கு நான் சென்ற சமயம் என் மாப்பிள்ளை ஆசையாக வாங்கித் தந்திருந்த 1500 ரூபாய் செருப்பு அணிந்து சென்றேன்.

அங்கோ பெரும் கூட்டம்! பெரும் செருப்புக் குவியலில் ஓர் ஓரமாக என் செருப்பை விடவேண்டிய ஒரு கட்டாயம். திரும்பிச் சென்று என் காரில் பாதுகாப்பாக விட்டு வரலாம் என்றால் இயலாதபடி ஒரு நெருக்கடி.

புதுச்செருப்பு, 1500 ரூபாய் என்பதைக் கடந்து மாப்பிள்ளை சென்டிமென்ட் என்னைத் தயங்கச் செய்தது. வேறு வழியின்றி விட்டுச்சென்றேன். 2 மணி நேர நிகழ்ச்சி முடிவில் வந்து பார்க்கவும் நான் பயந்ததுபோல செருப்பு இல்லை! பலர் என்னைப் போல செருப்பைத் தொலைத்தவர்களாய் திரும்பிச் சென்றனர். எனக்குள்ளும் மிகவே வருத்தம். அவர்கள் தந்த அந்தச் சித்தரின் படத்துடன் திரும்பினேன்.

வீடு திரும்பிய நிலையில் மனைவியிடம் சொன்னேன். அவளும் எனக்கு மேல் வருந்தினாள். அப்படியே அந்தச் சித்தர் படத்தைப் பார்த்தவளாக 'இனி இவரைப் பார்க்கும் போதெல்லாம் தொலைந்துபோன செருப்புதான் ஞாபகத்துக்கு வரும். இவர் எவ்வளவோ சாதிச்சிருப்பார் - அது எதுவும் தெரியப்போறதில்ல' என்றாள்.



மறுநாள் அதிகாலை! வாசல் தெளிக்கச் சென்றவள் வேகமாகத் திரும்பி வந்து படுக்கையில் இருந்த என்னை எழுப்பி வாசலுக்கு அழைத்துச் சென்று காண்பித்தாள்.

வெளியே கோலம் போடும் இடத்தில் நான் தொலைத்த செருப்பு! ஒரே ஆச்சர்யப் பரவசத்தோடு திரும்பினேன். அவர் படம் கண்ணில் பட்டது. அவர் சிரிக்கிற மாதிரி தோன்றியது. இந்த அனுபவத்தை எப்படி அர்த்தப்படுத்திக்கொள்வது?

(தொடரும்)

# பணம் ஆட்கொண்ட ஆறாம் அறிவு!



அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம் என்று தனியே தினங்களைக் கொண்டாடுவதில் எனக்குப் பெரிய விருப்பமில்லை. எப்போதும் தாய், தந்தையர் மேல் பற்று பாசத்தோடு இருப்பவர்களுக்கு இப்படித் தனியே தினங்கள் தேவைப்படுவதுமில்லை. ஆனாலும் இன்றைய நவீன வேகமான வாழ்க்கை முறைக்கு இது தேவைப்படத்தான் செய்கிறது என்று சிலரும், இதன்பின் பெரும் வர்த்தக நோக்கு இருப்பதாக இன்னும் சிலர் சொல்வதையும் என்னால் மறுக்க முடியவில்லை.



இந்த வரிசையில் உலக யோகா தினம் கொண்டாடப்பட்டபோது மட்டும் நான் மிக மகிழ்ந்தேன். சாதி மத எல்லைகளை உடைத்துக்கொண்டு உலகம் முழுக்க அது கொண்டாடப்பட்டதை எண்ணிப் பூரிக்கவும் செய்தேன்.

உண்மையில் யோகாவின் தாயகம் நம் பாரததேசம் தான். இதன் போஷகர்கள் நம் முனிவர்கள், ரிஷிகள், சித்தர் பெருமக்களாவர். இவர்களை நெருங்கிப் பார்க்கும்போதுதான் பல உண்மைகள் தெளிவாகின! இவர்கள் ஒவ்வொருவருமே பத்து பதினைந்து விஞ்ஞான ஆய்வுக்கூடங்களுக்கு இணையான ஓர் ஆற்றலோடு இருந்திருக்கிறார்கள். ஒரு மேலான வாழ்க்கையைத் தாங்கள் வாழ்ந்ததோடு, பின்வரும் மனித சமூகமும் வாழவேண்டும் என்பதற்காக நமக்காகப் பல அரிய விஷயங்களைச் சொல்லிவிட்டும் போயிருக்கிறார்கள்.

''மாட்டுக்குக் கொம்பு, சிங்கம்-புலிக்குப் பல்லும் நகங்களும், யானைக்குத் தும்பிக்கை, பறவைக்குச் சிறகு என்று உலகின் சர்வ உயிரினங்களுக்கும் அவை இந்த மண்ணில் தனக்கான வாழ்வை நல்லவிதமாய் வாழ்வதற்காக, அவற்றைப் படைத்த இறைவன், இதுபோல் பிரத்யேகமாய் உடல்சார்ந்த ஒரு விஷயத்தை மனிதனுக்குத் தராமல் அனைத்துக்கும் சேர்த்து ஆறாவது அறிவை அவனுக்குக் கொடுக்கப் போய், மனிதனும் அந்த அறிவாலே பலம் மிகுந்த யானையைக் கூட ஒரு அங்குசம்கொண்டு ஆட்டிவைக்கத் தொடங்கினான்'' என்று மனித இனம் பற்றிப் பெருமையாகச் சொல்வார்கள்.

இருந்தாலும் இந்த ஆறாம் அறிவை ஒரு மனிதன் தம் வாழ்நாளில் நூற்றுக்கு இருபது சதவிகிதம் கூட பயன்படுத்தாமல் இன்று ஒரு குறையுள்ள வாழ்வு வாழ்பவனாகவே இருக்கிறான் என்பதுதான் இன்றைய உலகின் யதார்த்தமாக உள்ளது.

எப்போதும் நம் கையிலிருக்கும் நம் கைக்கடிகாரம் எப்படி, எதனால் ஓடுகிறது என்பதுகூட நமக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொண்டால்தான், கடிகாரம் ஓடும் என்கிற நிலைப்பாடும் கிடையாது. அதைப் பற்றித் தெரிந்த ஒருவர் இருக்கிறார். இதில் ஏதாவது சிக்கல் வந்தால் பணத்தைக் கொடுத்தால்

மற்றதை அவர் பார்த்துக்கொள்வார்.

'நாம் ஏன் சிரமப்பட வேண்டும்' என்றுதான் நினைக்கிறோம். எல்லா விஷயங்களிலும் எல்லோருமே இப்படி இருக்கப்போய் பெரிய அளவில் நம் மூளையின் ஆற்றலை, அது சார்ந்த மனதின் ஆற்றலை நாம் மிகவே சுருக்கிவிட்டோம். அதிலும் கைபேசி என்று ஒன்று வரவும், ஒரு சாதாரண கூட்டல் கழித்தல் கணக்கைக்கூட இன்று நாம் போடுவதில்லை.

பெரிய கொடுமை, நம் வீட்டுத் தொலைபேசி எண்கள்கூட இன்று நம் நினைவில் பலர் வரையில் இல்லை. ஹோம் என்கிற பெயரில் அதை கைபேசியில் சேமித்து விட்டனர். HO என்று இரண்டு எழுத்தைத் தட்டினால் போதும், எண் இயக்கம் பெற்று வீட்டுக் கூடத்தில் தொலைபேசி அலற ஆரம்பித்து விடுகிறது. எல்லாமே பலமடங்கு அறிவாற்றலைப் பயன்படுத்தியவர்கள் இந்தச் சமூகத்திற்குப் போட்ட பிச்சைகள் ஆகும்.



அந்த வகையில் நாம் மறைமுகமாக ஒரு பிச்சைக்கார வாழ்க்கை வாழ்வதாகத் தாராளமாகக் கூறலாம். தலைக்குத் தேய்க்கும் எண்ணெயில் இருந்து, பாதம் தரிக்கும் செருப்புகள் வரை எல்லாமே காசு இருந்தால் கிடைத்துவிடும். அவ்வளவு ஏன்? காசு இருந்தால் சிறுநீரகப்பை முதல், இதயம் வரை எது வேண்டுமானாலும் கிடைக்கும். அப்பா அம்மாக்களாக நடிக்கக்கூட அதே காசுக்காகப் பலர் தயாராக உள்ளனர்.

மொத்தத்தில் கூட்டிக் கழித்து வகுத்துப் பெருக்கி விடைகாண முற்பட்டால் மனிதனின் மேலான ஆறாம் அறிவைப் பணம் எனும் ஒரு விஷயம் வெற்றி கண்டு பல வருடங்கள் இல்லையில்லை, பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன என்றுகூட சொல்லலாம்.

இப்படிப்பட்ட இந்தப் பணம் எவரிடம் குவிந்திருக்கிறதோ அவரைப் போய் யோகக்காரன் என்கிறது இந்த உலகம்.

மக்கள் தொகையில் சரிபாதி பேர் தமக்குள் இன்னொருவனை (அ) இன்னொருத்தியைச் சேர்த்துச் சுமப்பவர்களாகவே இருக்கிறோம். கர்ப்ப பாரம்கூட பத்து மாதம் தான். ஆனால் நம் சதைக் கோளம் ஆயுட் காலச் சுமை என்றாகிவிட்டது.

உடம்பில்தானா சுமை? மனது சேற்றுப் பட்டறையாக உள்ளது. ஒரு கரப்பான்பூச்சி கூட நம்மைச் சுலபமாக பயமுறுத்திவிடுகிறது. வளர்ச்சி என்கிற பெயரில் தெருவை அடைத்துக்கொண்டு கார்கள், யாரையும் ஓரமாக நிறுத்தச் சொல்ல தைரியமில்லை.

போகிற வழியில் குடிகாரன் கலாட்டா செய்கிறான். நமக்கெதுக்கு ஊர் வம்பு என்று ஒதுங்கிப்போகத்தான் சொல்கிறது நம் மனது. லைசென்ஸ் இல்லாமல் போய் போலீஸ் வசம் அகப்படும்போது கூச்சமின்றி அவர் கேட்கிற பணம் தரத் தயாராக இருக்கிறோம்.

வட்டி அதிகம் என்று எந்த ஃபைனான்ஸ் கம்பெனி அறிவித்தாலும் பொது பொதுவென்று போய் விழுகிறோம். அதனாலேயே இலவச அரிசி போட்டு வோட்டுக்கு 2000 கொடுத்து மொத்த நாட்டையே ஒரு கூட்டம் எழுதி வாங்கிவிட்டது.

இன்று கிட்டத்தட்ட உலகம் முழுக்க இப்படித்தான் உள்ளது. இதற்கு நடுவில்தான் யோகா தினம் கொண்டாடப்பட்டுள்ளது. அன்றாடம் அனுஷ்டிக்க வேண்டியதை ஒரு நாளுக்கு மட்டுமே உரியதாக அதாவது தீபாவளி,பொங்கல் போல் ஆக்கிவிடுவோமோ என்றும் மனது அஞ்சுகிறது.

சித்தபிரமை பிடித்துச் சிலை போலாகிவிட்ட ஒருவரை மகா பெரியவர் முன் அழைத்துப் போய் நிறுத்திக் கண்ணீர் விட்டனர் சிலர். ''மூன்று மாதமாக இப்படித் தான் இருக்கிறார். போகாத கோயில் இல்லை, பார்க்காத டாக்டர் இல்லை. ஒரு பிரயோஜனமும் இல்லை'' என்று புலம்பியவர்களிடம் ''ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம் தெரியுமா?'' என்று கேட்டார் பெரியவர். அவர்களும் தலையசைத்தனர். சொல்லச் சொன்னார். பின் திரும்பத் திரும்பச் சொல்லச் சொன்னார். அந்த மந்திர சப்தம் பரவியபடியே இருக்க, ஒரு நல்ல உயரமான குஸ்திக்காரர் போன்றவரை அழைத்து, பிரமை பிடித்தவர் தலையில் ஓங்கி ஓர் அடி அடிக்கச் சொன்னார். அவரும் அடித்தார்.

ஒரே அடிதான்! ''நான் இப்ப எங்கே இருக்கேன்?'' என்று கேட்டபடி பிரமை தெளிந்தார் அவர்! இது நிஜமாய் நடந்த அற்புதம். மனம், உடல் இரண்டிலும் அசலான யோக வாழ்வு வாழ்ந்தவர் செய்து காட்டிய அதிசயம். எந்த மாயமும் இதன்பின் இல்லை. இப்படி இன்று எத்தனை யோகிகள் நம்மிடையே உள்ளனர்?

**(அடுத்த இதழில் முடியும்)**

# உண(ர்)வோடு விளையாடுவதா?

**சமீப நாட்களில் பிளாஸ்டிக் அரிசி, மற்றும் பிளாஸ்டிக் சர்க்கரை என்கிற விஷயங்கள் காதில் விழவும் எனக்குள் திகைப்பு கலந்த ஆச்சர்யம். இதெல்லாம் எந்த அளவு நிஜமாக இருக்கும் என்று நான் நினைக்கையில் என் வாட்ஸ் அப்பில் ஒரு வீடியோ காட்சி. அது ஓர் அப்பட்டமான உண்மை எனும்படியாக கண்ணில்பட்டது. குடிசைத் தொழில் போல் வீட்டோடு ஓர் எந்திரம். அதனுள் பிளாஸ்டிக் மூலப் பொருட்களைப் போடவும் அது இழை இழையாகப் பிரிந்து ஓடிச்சென்று இறுதியில் அரிசி வடிவில் ஒரு டின்னில் விழுகிறது. அக்காட்சி என் நெஞ்சையடைக்கவும் செய்தது. அதே சமயம் லாஜிக்காய் பல கேள்விகள்!**

உழுது விதைத்தால் வாரிக் கொட்டும் வயற்காடுகள் மிகுந்திருக்க, மெனக்கெட்டு ஒரு நெல்மணியை விட கூடுதலான விலை மதிப்புடன் பிளாஸ்டிக் அரிசியைச்செய்து யாராவது அதை சந்தைப்படுத்துவார்களா? ஒருவேளை அரிசி உணவின் மேல் ஒரு பயம் ஏற்பட்டு கோதுமை, ரவை என்று மக்கள் வட்டம் திசைமாற வேண்டும் என்று இந்த வகை உணவை விற்பவர்கள் விளையாடி இருப்பார்களோ? அதுவுமில்லை என்றால் இந்த வகை உணவை உட்கொண்டு அஜீரணத்துக்கு ஆளாகி இது தொடர்பான மருந்துகள் அதிகம் விற்கப்பட வேண்டும் என்பதும் ஒரு காரணமாக இருக்குமோ?

இப்படிப் பல கேள்விகள்! பிரச்னை அரிசி, சர்க்கரையில் மட்டுமில்லை, பாலில் கலப்படம் என்று அந்தத் துறை சார்ந்த மந்திரியே பேசுகிறார்! இதுபோக மெழுகு பூசிய ஆப்பிள், கல் வைத்துப் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள், ஊசி போடப் பட்டுச் செயற்கையாக பெரிதாக்கப்பட்ட தர்ப் பூசணிகள், விதையில்லாத மலட்டு மாதுளம் பழங்கள், வனஸ்பதி கலந்த நெய், பெட்ரோலியப் பொருட்கள் கலப்பட நல்லெண்ணெய் மற்றும் ரீஃபைண்ட் ஆயில் என்று நாம் உண்ணும் உணவில் ஒரு கூட்டம் கதகளியே ஆடிவருகிறது.

உண்மையில் நம் சமூகம் போல உணவிலும் உணர்விலும் விழிப்போடு ஒரு சமூகம் இருந்ததில்லை. வீட்டு வாயில்களில் தண்ணீர்ப் பந்தல், நான்கு திசைகளிலும் அன்ன சத்திரங்கள், கோவில்களிலும் பிரசாத விநியோகம் விசேஷ நாட்களில் அன்னதானங்கள் என்று தர்ம சிந்தனையும், கலாசாரச் சிறப்பும் கொண்ட ஒரு பெரும் தேசம் நம் தேசம். பிணியில் பெரும்பிணி பசிப்பிணி. எனவே அதைப் போக்குவதே முதற் பணி என்று வாழ்ந்தவர்கள் நம் சமூகத்தவர்கள். இப்படிப்பட்ட நம் சமூகத்தில்தான் இன்று கலப்படங்கள்!

பிச்சை இடுவதில் கூட ஒரு நாகரிகத்தைக் கடைப் பிடித்து, நம் சமூகம் சாப்பிடும் உணவுக்கும் மனதின் எண்ணங்களுக்கும் பெரும் தொடர்பு உண்டு எனும் ஒரு மகத்தான உண்மையை உணர்ந்து எதை





குழம்பில் 'தான்' எனும் பெயரில் 'காய்' இருக்கும். இது நான் எனும் அகந்தையைக் குறிப்பது. அடுத்து ரசம்! அகந்தைத் தெளிவை இது காட்டுகிறது. அகந்தை நீங்கினாலே அடுத்து இன்பம் தானே?

உட்கொள்ள வேண்டும். எதை உட்கொள்ளக்கூடாது என்றும் வகுத்துத் தந்தது. இரவில் கீரையும், தயிரும் ஆகாது, என்பதில் தொடங்கி குழம்பு, ரசம், பாயசம், மோர் என்கிற வரிசைக்குள் ஒரு வாழ்க்கைப் பாட்டையே சொன்னவர்கள் நம் முன்னோர்கள்!

குழம்பில் 'தான்' எனும் பெயரில் 'காய்' இருக்கும். இது நான் எனும் அகந்தையைக் குறிப்பது. அடுத்து ரசம்! அகந்தைத் தெளிவை இது காட்டுகிறது. அகந்தை நீங்கினாலே அடுத்து இன்பம் தானே? இதை பாயசம் உணர்த்துகிறது. முடிவாக மோர்! இது ஒரு முக்தி பெற்ற திரவம். பசுவிடம் இருந்து வந்த பால் தன் வசமுள்ள கொழுப்பான வெண்ணெய் நீங்கப் பெற்று, கலகலப்பான கெடுதலே துளியும் இல்லாத நீர்த்த நிலைக்குச் சென்றுவிடுவதையே மோர் உணர்த்துகிறது. இதனால் கெடுதல் என்று ஒருவரும் கூறமுடியாது. நாமும் வாழ்வில் பக்குவப்பட்டு ஒரு கெடுதலில்லாத தெளிந்த நிலை அடைவதை மோர் உணர்த்துகிறது.

தினமும் இலையில் நாம் சாப்பிடும் சாப்பாடு மறைமுகமாக நமக்கு இப்படி ஒரு வாழ்க்கைப் பாடத்தையும் நடத்துகிறது. இது எத்தனை மேலான ஒரு நாகரிகம்? இப்படிப்பட்ட உணவை, தரையில் சப்பணமிட்டு அமர்ந்துதான் உண்ண வேண்டும். அப்படி உண்ணும் போது கையை ஊன்றிக் கொண்டு சாப்பிடக் கூடாது. சாப்பிடும் இலையில் சாதத்தை வீணடிக்கக்கூடாது. வீணடித்தால் அந்த சாதப் பருக்கைகள் காவிரிக் கரையில் ஒன்றுகூடி அழுமாம். என் பாட்டி இப்படிச் சொல்லி என் மனதில் ஒரு பிம்பத்தை உருவாக்கியது மூடம்பிக்கையை வளர்க்க அல்ல... உணவு என்பது எவ்வளவு மேலானது என்பதை உணர்த்த!

இப்படிப்பட்ட உணவை ஒருவர் வலது கையால் தான் பரிமாற வேண்டும். அப்படிப் பரிமாறும் போது உதறக் கூடாது. அதில் ஒரு நயம் இருக்க வேண்டும் என்று பரிமாறுபவர்களுக்கும், சாப்பிடுவதற்கு முன்னதாக இறைவனுக்கு நன்றி சொன்ன பிறகே அன்னத்தில் கைவைக்க வேண்டும் என்று சாப்பிடுபவர்களுக்கும் சொன்னார்கள்.

எல்லாமே அழகாகப் பின்பற்றப்பட்டு வந்த ஒரு நாடு இது. வாரத்தின் ஏழு நாட்களில் ஏழுவித காய்கறி, துவையல், பச்சடி, கூட்டு, கீரை என்று கிழமைக்கேற்ப ஒரு மெனுவும் உருவாக்கப் பட்டிருந்தது. திங்கள் சந்திரனுக்குரிய தினம். இந்நாளில் அரிசி உணவு பிரதானம், செவ்வாய் அங்காரகனுக்குரியது. இந்நாளில் அங்காரகனுக்குரிய பயறு வகைகள் என்று கோளுக்கும் உடம்புக்கு ஒரு தொடர்பு இருப்பது தெரிந்து அதற்கேற்ப உணவை சமைத்து உண்டனர். இதெல்லாம் கற்பனை, மூட நம்பிக்கை என்று எப்போது நாம் இதைப் புறந்தள்ளி, எப்போது வேண்டுமானால் எதை வேண்டுமானால் சாப்பிடலாம் என்கிற ஒரு மனோபாவத்துக்கும் அதுவே சுதந்திரமான மனநிலை என்றும் மாறினோமோ, அன்று ஆரம்பித்தது நம் ஆரோக்கியத்தின் வீழ்ச்சி. அதனாலேயே முப்பது வயது நபருக்கெல்லாம் இன்று சாதாரணமாக மாரடைப்பு வருகிறது. நூற்றுக்கு நாற்பது பேருக்கு சர்க்கரை இருக்கிறது. ரத்த அழுத்தமும் போட்டி போடுகிறது.

உணவை அதாவது அன்னத்தை மகாலட்சுமியாகச் சமையல் கட்டை பூஜிக்கும் இடத்துக்கு நிகராக்கி, அங்கு செல்பவர்கள் குளிக்காமல் செல்லக்கூடாது எனுமளவு கட்டுப்பாடுகளை விதித்து, சாப்பாட்டு விஷயத்தை ஓர் உச்சியில் வைத்திருந்தோம். இன்று பிளாட்ஃபாரத்தில் எல்லாம் உணவுக் கடைகள்!



சுகாதாரம் பற்றி எண்ணமே எவரிடமும் இல்லை. போகிற போக்கில் வாகனத்தை விட்டு இறங்காமல் அப்படியே அமர்ந்து சாப்பிட்டுவிட்டு என்ன சாப்பிட்டோம் என்பது கூட தெரியாதபடி செல்லும் ஒரு வேகமான வாழ்க்கைப் போக்காக இன்று மாறி விட்டது. இப்படிச் சாப்பிடுவதன் பின்புலத்தில் நிறைய நியாயங்களும் கற்பிக்கப் படுகின்றன. ருசித்தும், ஆரோக்கியத்துக்காகவும் சாப்பிட்டது போய், உயிர் வாழவும் தனிப்பட்ட விருப்பங் களுக்காகவும் மட்டும் சாப்பிடும் காலமாகத் தற்காலம் மாறிவருகிறது.

நம் உணவு முறைகளின் பின்புலம் மிக அர்த்த பூர்வமானது. மிக ஆரோக்கியமானது. உணவே மருந்தாய் மருந்தே உணவாய் எனும் கூட்டுறவு உடையது. இது மனநலன் சார்ந்ததும் கூட....

ஒரு சன்னியாசிக்கு ஒரு ராஜா விருந்தளித்தார். அப்போது வெள்ளிக் கிண்ணத்தில் பால் பாயசம் பரிமாறப்பட்டது. அந்த சன்னியாசி சாப்பிட்டு விட்டு அந்த வெள்ளிக் கிண்ணத்தைத் தனக்கென எடுத்துக் கொண்டார். தன் குடிலுக்குத் திரும்பி வந்த நிலையில் தன் பையில் இருந்து வெள்ளிக் கிண்ணத்தை எடுத்துப் பார்த்து மன நெருடலுக்கு ஆளானார். முற்றும் துறந்த தனக்கு எதற்கு இந்த வெள்ளிக் கிண்ணம்? இதை ஏன் எடுத்துக் கொண் டோம்? இது திருட்டல்லவா? வீட்டுக்குக் கள்ளம் வைக்கலாமா? என்று பல கேள்விகளில் ஓடியவர் திரும்பிச் சென்று அந்த வெள்ளிக் கிண்ணத்தை அரசிடம் தந்து, தான் ஏன் இப்படி நடந்து கொண் டேன் என்று தனக்கே தெரியவில்லை என வருந் தினார். பிறகே தெரிய வந்தது, ஒரு திருடனிடம் இருந்து அரசாங்க வீரர்களால் பறிமுதல் செய் யப்பட்ட அரிசியல் இருந்து அன்று சாதம் சமைக்கப் பட்ட விவரம். இப்படியாகத்தான் எண்ணங்களும் மறைவாகக் கடத்துகின்றன என்பதைச் சொல்லாமல் சொன்னது இக்கதை. இப்படி ஓர் உணவின் பின்புலத்தில் நம்மை நெறிப்படுத்த எத்தனை செய்திகள் நம்மிடம்...! நாமா ஆரோக்கியமற்று இருப்பது?

**(முற்றும்)**

**மாயவரத்தான் கி. ரமேஷ்குமார்**

# வீரரை ஆராயும் கருவி

‘‘டெக்னாலஜி வளர்ச்சியை மட்டுமே எல்லா வற்றுக்கும் நம்பினால் எப்படி?’’ என்று நியூஸிலாந் தில் விளையாட்டுத்துறை வல்லுநர்கள் கொடி பிடிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வீரர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் அந்த நாட்டில் கிரிஸ்ட்சர்ச் என்ற பிரபல தனியார் நிறுவனம் ஒன்று, விளையாட்டு வீரர்களுக் கான கருவிகளை அறிமுகப்படுத்தி வருகிறது.

கைக்கடிகாரம் போன்றதொரு கருவியைக் கை (அ) காலில் அணிந்து கொண்டு பயிற்சியில் ஈடுபடும் போது வீரரின் ஒவ்வொரு அசைவையும் பதிவு செய்து தகவல்களைத் தருகிறது.

போன வாரம் இதே வீரர் எவ்வளவு தூரம் ஓடினார்? அப்போது அவருடைய இதயத்துடிப்பு, உடலின் எடை என்ன? ரத்தக் கொதிப்பு எவ்வளவாக இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது என்று சகலத்தையும் ஒப்பிட்டு அந்த வீரர் முழு உடல் தகுதியுடன் இருக்கிறாரா, இல்லையா என்பதைக் கூட அலசி ஆராய்ந்து விடுகிறது.

‘‘எங்களுக்குள்ள முன் அனுபவம் என்ன! அதெல்லாம் கம்ப்யூட்டர் கருவிக்கு வருமா? புள்ளி விவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றி களை ஈட்டி விட முடியுமா?’’ என்று பதிலுக்குப் பொங்கி எழுந்துள்ளார்கள் பயிற்சியாளர்கள்.

இதையெல்லாம் காதில் வாங்காமல் ஆஸ்திரே லியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இந்தக் கருவியை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது அந்த நிறுவனம்.

